# கலைக்கேசரி

KALAIKESARI

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 116 / News / 2010



கல்லெல்லாம் கதை சொல்லும் 'இராசராசபுரி'

'புஷ்மென்' எனும் ஆபிரிக்க ஆதிவாசிகள்

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

www.kalaikesari.com / JANUARY 2011

ISSN 2012-6824

9772012682008

| | | |
|---|---|---|
| INDIA...............IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA....SLR 200.00 | AUSTRALIA AUS$ 10.00 | UK............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS............CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Feel the Difference...



**For Professional Bridal Dressings and Hair Dressings...**
**Hair Care, Body Care & Professional Tattoo.**



*Janani's*
**Alangaare**

No: 106, 1/1, Pamankada Road,
Colombo.06.
Tel: + 94 779788772, + 94 72 6536527


Web: www.alangare.com
E-mail: jeni16127 @ yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Little Asia
EMPORIUM (Pvt) Ltd.
317, 317A, Galle Road, Wellawatta, Colombo 06.
T : +94 11 250 4470, 250 0098 | Fax : +94 11 2508934 | E : info@littleasia.lk | www.littleasia.com
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்













## அட்டைப்படம் :

இராசராசபுரி சிற்பம்


**06** ஆசிரியர் மீள்நோக்கு

**10** நீலக்கல்

**24** சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு

**30** கண்ணகியின் அடையாளம்

**44** கதக் நடனம்

**52** தீவினை போக்கும் திலகம்

**62** மறந்தவையும் மறைந்தவையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமத்துவமும், சந்துஷ்டியும் ஓங்குக!

**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 5234338
www.kalaikesari.com
e-mail:editor@kalaikesari.com
subscription@kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai

**SUB EDITOR**
Bastiampillai Johnsan

**MEDIA CO-ORDINATOR**
Pragash Umachandraa

**CONTRIBUTORS**
Dr. N. Shanmugalingan
Prof. S. Sivalingaraja
Kalaimamani Pon. Theivendran
Teliwatta Joseph
K. Thangeswary
Pathma Somakanthan
Subashini Pathmanathan

**PHOTOS**
Joy Jeyakumar
S. N. Surenthiran
L. Thevathiran
Chhaya Rabeshen

**LAYOUT**
S. A. Eswaran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
M. Senthilnathan

**CIRCULATION**
S. Alexandar

**PRODUCTION**
L. A. D. Joseph

கலைக்கேசரி வாசகர்களுக்கு வணக்கம்

புத்தாண்டு (2011) மலர்ந்துள்ள இவ்வேளையில் கலைக்கேசரியின் பதின்மூன்றாவது இதழ்மூலமாக, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகமகிழ்ச்சி. அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்! 'கலங்கித் தெளிதல்' என்றொரு வார்த்தைப் பிரயோகம் நமது தமிழில் உண்டு. 'கலக்கங்கள்' எக்காலமும் நீடித்தல் இயலாது. அது என்றோ தெளிதல் இயற்கை. அந்த வகையில் பொதுவாழ்வில் 'தெளிவு' பிறக்கும் ஆண்டாக, அமைதியும் சந்துஷ்டியும் ஓங்கும் ஆண்டாக, அனைவரும் இன மத பேதமின்றி சமத்துவ வாழ்வை உணரும் ஆண்டாக, புத்தாண்டு பொலிய வேண்டும் எனப் பிரார்த்திப்போம்.

13 ஆம் இதழ் என்று குறிப்பிட்டோமல்லவா! ஆம்! உங்கள் அபிமான கலைக்கேசரி, கடந்த டிசம்பருடன் ஒரு வருடத்தைப் பூர்த்திசெய்து, ஜனவரியில் இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. அதன் வளர்ச்சிக்கு உங்கள் ஆசீர்வாதங்கள் கிட்டுவதாக!

மேலும் ஈழத்து இலக்கிய உலகினைப் பொறுத்தவரை, ஒரு மிக பிரதான நிகழ்வு இம்மாதம் கொழும்பில் நடைபெறவிருப்பது நாம் அறிந்ததே. இம்மாதம் 6, 7, 8, 9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சர்வதேச எழுத்தாளர் மாநாடு அறிந்ததை பகிர்ந்து அறியாததை அறிந்து கொள்வதற்கான ஒன்றுகூடல் என்பதாக நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாநாட்டில் கலந்துகொள்ள வரும் எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களையும் வரவேற்பதுடன் மாநாடு சிறப்புற நடைபெற வாழ்த்துவோம்.

அன்புடன்,

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்கேசரி எண்ணங்களும் வண்ணங்களும்

புத்தாண்டுப் புலர்வுடன் கலைக்கேசரியும் தனது முதலாவது வருடத்தைப் பூர்த்தி செய்கின்றது! இவ்வேளையில் நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தல் இயல்பானது தானே! 2001 ஆம் ஆண்டில் இருந்து 2006 ஆம் ஆண்டு வரை எமது வீரகேசரிப் பத்திரிகையின் ஓர் அனுபந்தமாக வாராவாரம் கலைக்கேசரி வெளியாகி அனைவரையும் கவர்ந்து வந்தமை வாசகர்கள் அறிந்ததே!

'கலைக்கேசரி' என்னும் இக்கலைத்துவமான பெயரில், கலை, கலாசார, பண்பாட்டின் மேம்பாட்டுக்காக ஒரு மாத இதழை, கவர்ச்சிகரமான முறையில், சர்வதேச ஆங்கில இதழ்களின் தராதரத்துக்கு ஈடாக, உள்ளடக்கச் சிறப்போடு கொண்டுவர வேண்டும், அவ்விதழ், தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் செல்லவேண்டும் என்பது எமது நிர்வாகத்தினரின் நோக்காக இருந்தது. தமிழ்க் கலை, கலாசார மரபுகள், மெல்ல மெல்ல மறைந்து கொண்டு செல்லும் இக்காலகட்டத்தில், அவற்றின் பாரம்பரிய விழுமியங்களை, இளைய தலைமுறையினருக்கு, பெற்றோர் எடுத்துக் காட்டிவிளக்கும் ஓர் ஆவணமாக, அதிலும் முக்கியமாக, புலம் பெயர் நாடுகளில், அந்நிய கலாசார சூழலில் வாழும் நம்மவர்களுக்கு ஓர் கையேடுபோல் உதவுவதாக கலைக்கேசரி மிளிர வேண்டும் என அவர்கள் விரும்பினர்.



எனவே, அந்த குறிக்கோளுக்கிணங்க 'அந்தப் பழைய உலகத்தை' நாம் அடிக்கடி நினைக்க ஆரம்பித்தோம் என்பது மட்டுமல்ல, இடைக்கிடை அந்தப் பழைமைப் புதையல்கள் இருக்கும் இடம் தேடி ஓடவும் ஆரம்பித்தோம்! இசை, நாடகம், நடனம், கூத்து, சிற்பம், ஓவியம், கட்டிடக்கலை, கலாசாரம், வழிபாட்டிடம், சுற்றுலா, விசேட நிகழ்வு, கலை கலாசாரச் செய்திகள் எனப் பகுத்துக் கொண்ட, கலைக்கேசரியின் முகப்புப் படமும், அதனைப்பற்றி அமைந்த அட்டைப்படக் கட்டுரையும் குறிப்பிடத்தக்க அம்சம் என்றால், மிகையில்லைத்தானே!

உயர்தர காகிதத்தில் கண்ணைக் கவரும் வண்ணங்களுடனும் நேர்த்தியான அச்சுப்பதிவுடனும் மிளிர்ந்த முகப்புப்பட எழிலில் வாசகர்கள் மயங்கினார்கள். அதுமட்டுமன்றி, உட்பக்கங்களிலும் இடம்பெற்றுவந்த சிறப்பு வண்ணப்படங்களும், கட்டுரைகளும் நம் வாசகர்கள் கண்களுக்குப் பெரு விருந்தாக அமைந்தன என்பதனை அவர்களது மடல்கள் எமக்கு உணர்த்தின! அதனை நீங்களும் அறிவீர்கள்.

கலைக்கேசரியின் முதலாவது இதழின் (ஜனவரி 2010) முகப்பை இந்திய பிரபல நர்த்தகி ரமா வைத்தியநாதனின் அழகான நடனத் தோற்றம் அலங்கரித்து, அதன்பின் வரப்போகும் இதழ்களது முகப்பின் எழிலுக்கு கட்டியம் கூறியது! அத்துடன் ரமாவைப் பற்றிய சிறுகுறிப்பு, பரதம் பற்றி ஓர் சிறு கட்டுரை ஆகியன இடம் பெற்றிருந்தன. வழிபாட்டு மரபில் நல்லூர்க் கந்தப்பெருமான் ஆலயம் குறித்த கட்டுரையைத் தந்த நாம் சிற்பக் கலையின் சிறப்புக்கு, கொழும்பில் தன்னிகரில்லாத் திருத்தலமாக விளங்கும், ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்பற்றி சிறப்புக் கட்டுரையை எடுப்பான படங்களுடன் தந்து மகிழ்ந்தோம்.

மேலும் இசைக்கலைக்கு கான சரஸ்வதி டி.கே. பட்டம்மாள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்மண்ணின் மரபுக்கு, புதிர் எடுத்தல் மற்றும் தைப் பொங்கல், கட்டிடக்கலைக்கு பிரசித்திபெற்ற களனி ஆலயம், கலாசார மரபுக்கு தாலி, பழைமைச் சிறப்புக்கு இலங்கையின் புராதன செல்வங்கள், மற்றும் பழைமையைப் பறைசாற்றும் புகழ்பெற்ற எலிபன்ரா குகை, உலகின் கவனத்தை ஈர்த்த சீனப் பெரும் சுவர் மற்றும் முக்கிய கலைச்சிறப்புக் கொண்ட விடயங்கள் ஆகியன முதலாவது இதழில் இடம்பெற்றுப் பொலிந்தன.

'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் தொழார் எனின்' என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கொப்ப, முதல் இதழை இறைவன் திருமுன்வைத்து, பணிந்து, வெளியிட மிகவும் விரும்பினோம். அந்த வகையில் கலைக்கேசரியின் முதலாவது இதழின் பிரதியை ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் திருத்தலத்தில் வைத்து அந்த ஆலயத்தின் தர்மகர்த்தா டி. எம். சுவாமிநாதன் அவர்களுக்கு முதல் பிரதியை வழங்கி, வெளியீடு செய்துவைக்கத் தீர்மானித்தோம்.

ஆலயத்தில், எக்ஸ்பிறெஸ் நியூஸ் பேப்பர்ஸ்(சிலோன்) லிமிட்டெட்டின் நிர்வாக முகாமையாளர் கலைக்கேசரியின் முதல் பிரதியை திரு.டி.எம். சுவாமிநாதனிடம் வழங்கி வைக்க, அவரும் பெருமகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு, அங்கு பிரசன்னமாகவிருந்த நம் ஸ்தாபன ஊழியர்களான நம் எல்லோரையும் உபசரித்தமை ஒரு மனநிறைவான ஆரம்பமாகவே அமைந்தது.

இதனைத்தொடர்ந்து கலைக்கேசரியின் முகப்புப்படங்களாக இமயமலை (சிவனுறையும் கைலாசம்), பெரிய நந்தியுடன் நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலயத்தின் எடுப்பான கோபுரக்காட்சி, புதுவருடப் போர்த்தேங்காய் உடைப்புக் காட்சி, கந்தரோடை வரலாற்று எச்சங்கள், தஞ்சாவூர் ஓவியக்கலை (வீணை), போர்த்துக்கல் நகரக்காட்சி எனப் பல்வேறு படங்கள் இடம் பெற்றதுடன் விளக்கக் கட்டுரைகளும் இடம்பெற்றன. இதில் தமிழக அரசு, தமிழ்மொழி செம்மொழி அந்தஸ்தைப் பெற்றதையடுத்து, ஜூ ன் மாதத்தில் எடுத்த புகழ்மிக்க செம்மொழி விழாவின் போது, கலைக்கேசரி, கலையம்சம் நிறைந்த தமிழக கல்தேர் சிறப்பு முகப்புப் படத்துடன் கூடிய ஜூன் மாத இதழையும், செம்மொழி மாநாட்டுச் சிறப்பு மலரையும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அச்சிறப்பு மலருக்கு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் வழங்கிய சிறப்பு வாழ்த்துச் செய்தி, கலைக்கேசரிக்கு கிடைத்த ஒரு கௌரவமெனவே கருதுகிறோம்.

'மாநாட்டு வெற்றிக்குரிய ஆயத்தப் பணிகள் அனைத்தும் முழுமுச்சில் நடைபெறும் வேளையில், இலங்கை கலைக்கேசரி மாத இதழ் சிறப்புமலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடுவது பாராட்டுக்குரியது. மலர் செம்மொழித் தமிழின் மணம் பரப்பிட எனது உளமார்ந்த நல்வாழ்துக்கள் உரித்தாகுக' என முதல்வர் அச்செய்தியில் குறிப்பிட்டிருந்தார். இம்மலரில், தலைவர் ஓய்வுநிலைப் பேராசிரியரும், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆய்வரங்க அமைப்புத் தலைவருமான கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் வழங்கிய சிறப்புச் செவ்வி உட்பட, பல்கலைக்கழக அறிஞர்கள் பலரினதும் கட்டுரைகள் இடம்பெற்று, அனைவரதும் பாராட்டையும் பெற்றதை மறந்திருக்க மாட்டீர்கள்.


மேலும் வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டிடங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், முஸ்லிம் பள்ளிவாசல், அரபு எழுத்தணிக்கலை ஆகியன குறித்த கட்டுரைகளும் அதற்கான படங்களும் கலைக்கேசரி இதழுக்குச் சிறப்புச் சேர்த்தன. பல நூற்றாண்டுக் காலமாக சிற்பக்கலைக்கு அழகு சேர்த்த கட்டிடங்கள், உல்லாசப் பயணிகளை என்றும் கவந்திழுக்கும் ஆக்ரா நகரம், பழைய கியூபெக் நகரம், சீனாவின் மறக்கப்பட்ட நகரம், அங்கர் வற், கண்கவர் மலைப்பிரதேசமான கன்யன் டிரைவ் ஆகியன குறித்தும் தெளிவான கட்டுரைகளும் வண்ணப் படங்களும், புழைமையை விரும்பித் தேடும் வாசகர்களைப் பரவசப்படுத்தின என்பதனைக் கேட்டு உவகையுற்றோம்.

அத்துடன் நாட்டுக்கூத்து, நாடகக்கலை, நடனக்கலை, ஆகியவற்றில் அனுபவம் வாய்ந்த கலைஞர்களின் செவ்விகளை மகிழ்வுடன் தந்ததோடு இலக்கிய உலகினையும் மறக்காது, இலங்கைப் படைப்பாளிகள் பலரது செவ்விகளையும் பெருமையுடன் தந்தோம். மேலும் இலங்கைக் கவிஞர்களது வீச்சான கவிதைகள், பலவற்றை கலைக்கேசரி வெளியிட்டுவரும் விதம் அலாதியானதல்லவா ! ஐ.நா.கல்வி கலாசார அமைப்பு, புராதன இடங்கள் என இலங்கையில் அங்கீகரித்த 7 இடங்கள் குறித்த விபரங்களை, ஒன்றன்பின் ஒன்றாக அழகிய படங்களுடன் தந்த கலைக்கேசரி, அவ்விதம் உலகில் அங்கீகரிக்கப்பட்ட சில இடங்களையும் விபரித்தது என்பதை வாசகர்கள் அறிவார்கள். மென்மேலும் உலகப் பழைமையான புதுமைகளைத் தர கலைக்கேசரி முன்னிற்கும்.

பழைமையில் பார்வையை ஓடவிட்டாலென்ன, புதுமைக்குப் பாய்ந்தாலென்ன, நாம் வாழும் யதார்த்த உலகை மறந்துவிட முடியாதல்லவா? அந்த வகையில் மேலும் சில சமகால விடயங்களையும் நாம் தந்து கொண்டிருக்கிறோம். கலைக்கேசரி குறித்து வாசகர்கள் அனுப்பும் கடிதங்கள் எமக்கு உந்துசக்தியாக விளங்குகின்றன என்பதை நாம் அடிக்கடி குறிப்பிட்டு வரத் தவறவில்லை.

வாசகர்களே! இவ்விதமாக நாம் தெரிவிப்பதினால் எமது குறிக்கோள்களில் நிறைவு பெற்றுவிட்டோம் என்பது கருத்தாகாது. இதுவோர் முதல் அடியே. மேலும் நம் பாதையில் திருப்திகரமாக நடைபயில வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வரிய நோக்கிற்கு அறிஞர் பெரு மக்கள் எமக்கு தொடர்ந்தும் உறுதுணையாக இருந்து நந் தமிழ் அன்னையையும் எமது கலை பண்பாட்டுச் செல்வங்களும் மேன்மையுற உதவ வேண்டும் எனவும் தமிழ் கூறும் நல்லுலகம் நல்லாதரவை வழங்க வேண்டும் எனவும் விநயமாக வேண்டிக் கொள்கிறோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

micromax mobile
Nothing like Anything

# MIND BLOWING RANGE

**CHOOSE FROM OUR COLLECTION OF MIND BLOWING RANGE OF MOBILES.**



## X100
Color Screen
FM Radio
One Touch Torch
5-Way Navigation Key
Speaker Phone
Alarm Clock

RS.2,990



## X215
Dual SIM-Dual Standby
Stereo FM Radio
Color Display
Camera
Torch
MP3 Player
Expandable Memory (upto 2GB)

RS.3,990




## X330
Dual SIM-Dual Standby
Stereo FM Radio
4 Way Speakers
2 MP Camera
MP3 Player
Bluetooth
Torch
2.5" Display Screen
Expandable Memory (upto 8GB)

RS.7,490



## Q55 BLING
Dual SIM-Dual Standby
Navigation Keys made with ENLIGHTENED™-Swarovski elements
Compact Vanity Mirror
YAMAHA Audio Amplifier-Built in
One Touch Launch Facebook
Multi Instant Messenger Nimbuzz
Preloaded Opera Mini Browser
Bluetooth/ 2MP Camera
Expandable Memory (upto 8GB)

RS.14,500



## Q5 FB
Dual SIM-Dual Standby
One Touch Launch Facebook
QWERTY Keypad with Trackball
YAMAHA Audio Amplifier-Built in
Multi Instant Messenger Nimbuzz
Preloaded Opera Mini Browser
Bluetooth/ 2MP Camera
Expandable Memory (upto 8GB)

RS.14,990



## X550 QUBE
Dual SIM-Dual Standby
3D Cube User Interface
3.2" Full Touch Screen
Customizable Widget Arc
Touch Sensitive Wallpapers
2 MP Camera
Bluetooth/ GPRS/ WAP/MMS
MP3 Player
Video Player (AVI/3GP/MP4)
Expandable Memory (upto 16GB)

RS.14,500

6 Months 0% Interest Free Monthly Installments for credit card holders
SEYLAN HSBC Standard Chartered
*Conditions Apply

TRCSL APPROVED
DL/045/71-10/545-(C/1406)

**1 YEAR WARRANTY**
on Phone, Battery, Charger & Handfree only from Micromax

Hotline :
0719 415 416 | 0117 415 416

*Conditions Apply

Enjoy the benefits of
Mobitel SMART Connection
Free with every Micromax Mobile phone

Sri Lanka Telecom Mobitel
We Care. Always.

"Micromax Informatics Ltd is proposing, subject to market conditions and other considerations, a public issue of its equity shares and has filed a Draft Red Herring Prospectus ("DRHP") with the Securities and Exchange Board of India ("SEBI"). The DRHP is available on the website of SEBI at www.sebi.gov.in and the respective websites of the book running lead managers at www.jmfinancial.in, http://www.online.citibank.co.in/rhtm/citigroupglobalscreen1.htm, www.edelcap.com and www.nomura.com/asia/services/capital_raising/equity.shtml. Investors should note that investment in equity shares involves a high degree of risk and for details relating to the same, see the section titled "Risk Factors" of the DRHP. The equity shares have not been and will not be registered under the U.S. Securities Act of 1933, as amended ("U.S. Securities Act") or any state securities laws in the United States, and, unless so registered, may not be offered or sold within the United States except pursuant to an exemption from, or in a transaction not subject to, the registration requirements of the U.S. Securities Act and ap[illegible] offering of the equity shares in the United States".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிறைவாய் மிளிரவைக்கும் நீலக்கல்

உலகத்தை அதிகமாக ஆட்கொண்டிருக்கும் நிறம் நீலம் ஆகும். வானும் கடலும் நீல நிறமாகத்தான் காட்சி அளிக்கின்றன. இந்துக்கள் வழிபடும் கிருஷ்ண பரமாத்மா நீல நிறமாகவே தோற்றம் அளிக்கிறார். சிலர் தங்கள் வீட்டு வாசலில் நீல நிற வர்ணம் அடித்து இருப்பார்கள். இதற்குக் காரணம் தீய சக்தியை வீட்டுக்குள் வர விடாத பாதுகாப்புச் சக்தி நீல நிறத்துக்கு இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். நீல நிறமானது கெட்டவைகளை அண்டவிடாமல் காப்பதுடன் புனிதத் தன்மையானதாகவும் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட நீலக்கற்கள் ஆண்டவனுடைய அருளைப் பெற பெரிதும் உதவுகிறது. மோசேஸ்க்கு இறைவன் அருளிய பத்துக் கட்டளைகளும் நீலக் கற்பாறையில்தான் செதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குற்றமுள்ள நீலக்கற்களை அணிவதால் தீங்கு வந்து நேரும் என எல்லா மதத்தவர்களாலும் நம்பப்படுகிறது. மேலும் மருத்துவ ரீதியாக ஆராயும் போது பல்வேறு வகையான நோய்களைத் தீர்க்கக்கூடிய சக்தி இந்நீலக் கற்களுக்கு இருப்பதாக நம்பப்படுகிறது.



நீலம் இந்திர நீலம், மாநீலம் என இரு வகைப்படும். இந்திரன் விச்சுவருபனைக் கொன்ற பழியினைப் போக்கும் பொருட்டுச் செய்த அசுவமேத யாகத்தில் எழுந்த நறுமணப் புகையானது குதிரையின் இமையாத கண்ணுக்குள் நுழைந்து பீளையினைச் சிந்தச் செய்தது. அந்தப் பீளை சிந்திய இடத்தினின்றும் தோன்றிய மணி நீலம் ஆகும். இதை இந்திர நீலம் எனச் சிறப்பாக அழைப்பார்கள். அதாவது இந்திர வில்லிற் பொருந்திய நீலம் போன்றது எனப் பொருள்படும்.

**நவமணிகளில் மாணிக்கம், முத்து, வைரம், மரகதம், நீலம் என்னும் ஐந்தும் மிக்க ஒளியும் பெரு விலையும் உடையன. புருடராகம், வயிடூரியம், பவளம் ஆகிய நான்கும் மிக்க ஒளியுடையவேனும் சிறிய விலையுடையன.**

சூரியனின் மனைவியாகிய சஞ்சை என்பவள் தன் கணவனின் தழல் வடிவான உடலினைத் தழுவப்பெறாமல் அஞ்சி தனது உடல் நிழலினைத் தனது வடிவமாக (சாயாதேவியாக) நிறுத்தி, காட்டினை அடைந்து தவம் செய்தாள். அதனைச் சூரியன் ஞானத்தால் உணர்ந்து அவள் பின் தொடர்ந்து செல்ல, அது கண்டு சஞ்சை அஞ்சிப் பெண் குதிரை வடிவமாக ஓடினாள். சூரியனும் ஆண் குதிரை வடிவாய் அவளைப் பின் தொடர்ந்து சென்று காமத்தைப் பொறுக்கலாற்றாது இந்திரியத்தைச் சிந்தினான். அவ்விந்திரியம் சிந்திய இடங்களில் தோன்றிய மணி நீலம் எனப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலும் இது மாநீலம் எனப் பெயர் பெறும். இம் மாநீல மணியினை வானவர்களும் மனிதர்களும் விரும்பி அணிவார்கள் எனக்கூறப்படுகிறது. மாநீலம் பிறிதொன்றும் கலவாத வெண்மை, செம்மை, பொன்மை, கருமை ஆகிய நிறம் பொருந்தும். இவை முறையே அந்தணர் முதலிய நால் வகைச் சாதியினருக்கும் உரியதாகும். மாநீலத்தை அணிபவர்கள் எந்நாளும் நலன்கள் எய்தி வாழ்ந்திருப்பர். மாநீலத்திலும் பதினாயிர மடங்கு பெரு விலையினை உடையது இந்திர நீலமாகும். அதனைப் பசுவின் பால் நிறைந்த குடத்தில் இட்டால் அப்பாலின் நிறத்தைக் கீழ்ப்படுத்தி நூறு மடங்கு தன் நீல நிறம் மேம்பட்டு ஒளி விளங்கச் செய்யும். இவ்வகையான இந்திர நீலம் உலகில் கிடைப்பது மிக அரிது. பாலில் ஒளி தோன்றச் செய்வது மாநீலம் என்று உரைப்பாரும் உளர். 'கருமணியம் பாலகத்துப் பதித்தன்ன படியவாய்' என்கிறது சீவகசிந்தாமணி. நவ மணிகளில் மாணிக்கம், முத்து, வயிரம், மரகதம், நீலம் என்னும் ஐந்தும் மிக்க ஒளியும் பெரு விலையும் உடையன. புருடராகம், வயிடூரியம், பவளம் ஆகிய நான்கும் மிக்க ஒளியுடையவேனும் சிறிய விலையுடையன.

மேலும் பழைமையான நூல்களில் இருந்து இந்திர நீலம், ஜல நீலம் என்ற இருவகையான நீலக் கற்கள் புழக்கத்தில் இருந்துள்ளமை தெரியவருகிறது. மேலும் சீவகசிந்தாமணி, தண்டியலங்காரம் போன்ற நூல்களில் நீல மணியின் சிறப்புக்கள் எடுத்தியம்பப்படுகின்றன. நீலக் கற்களில் 'ஆறு நூல்' ஓடுகின்றவையும் உள்ளன. பார்ப்பதற்கு சிலந்தி இக்கல்லின் மேல் ஏறி நிற்பதைப்போல தோற்றம் கொடுக்கும். அக்கல்லைப் புரட்டிப் பார்த்தால் கோடுகள் அங்கும் இங்குமாகத் தெரியும். இதை ஆங்கிலத்தில் Star Sapphire என்று சிறப்பாக அழைப்பார்கள். இக்கற்களை ஆங்கிலேயர்கள் விரும்பி அணிவார்கள். மாணிக்க கற்கள் விளையும் இடங்களில் கிடைக்கும் நீலக் கற்களை 'அர்த்தநாரி' என்று அழைப்பார்கள். இதையே 'ஜல நீலம்' என்றும் சிறப்பாகக் கூறுவார்கள்.



இந்தியாவில் காஷ்மீர் பகுதிகளில் கிடைக்கும் கற்கள் சிறந்த கற்கள் என ஆராய்ச்சியாளார்கள் கூறுகிறார்கள். இலங்கையில் முதற்தரமான நீலக்கற்களும் ஆறு நூல் ஓடுகின்ற கற்களும் மிகத் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கிருந்து உலகின் பல நாடுகளுக்கும் அதன் பகுதிகளுக்கும் தரமான நீலக் கற்களை அனுப்புவதன் மூலம் நாட்டுக்கு சிறந்த அந்நியச்செலாவணி இலங்கைக்குக் கிடைக்கிறது. தாய்லாந்து, அவுஸ்திரேலியா, கம்போடியா, பிரேசில் போன்ற நாடுகளில் நீலக் கற்கள் கிடைத்தாலும் அவை தரத்தில் குறைந்தவையாகக் காணப்படுகின்றன. தரமான நீலக் கற்கள் பார்ப்பதற்கு நீல நிறத்துடன் ஒளிவீசும் தன்மையுடன் இருந்தாலும் பட்டை தீட்டத் தீட்ட அதன் பிரகாசம் இன்னும் அதிகரிக்கும் தன்மை அவற்றிற்கு உண்டு.

நீலக் கற்களை சித்த முறைப்படி பசுமம் செய்து சாப்பிட்டால் பித்தம், கபம் போன்ற நோய்கள் தீங்கும் எனவும் தோல் சம்பந்தப்பட்ட தீராத வியாதிகளையும் குஷ்ட வியாதியையும் தீர்க்கும் சக்தி இவற்றிற்கு உண்டு எனவும் சித்த வைத்தியம் கூறுகிறது.

இக்கற்களை சனியின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் அணிந்தால் சிறந்த அதிர்ஷ்டசாலிகளாக ஆகலாம். ஆனால் குற்றமுள்ள கற்களை அணிந்தால் பலன் தலைகீழாக மாறிவிடும். 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களும் பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண் 8 வருகிறவர்களும் நீலக் கல்லை அணிவதால் மிகச் சிறந்த பலன் கிடைக்கும் என எண்ஜோதிடம் கூறுகிறது. மேலும் 4, 13, 22, 31 போன்ற திகதிகளில் பிறந்த இராகு ஆதிக்கக்காரர்கள் வெளிர் நீலக்கற்களை அணிவதால் நல்ல பலன் கிடைக்கும்.

**கருத்து - வித்துவான் வசந்தா வைத்தியநாதன்**

**தொகுப்பு - பிரியங்கா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# 'புஷ்மென்' எனும் ஆபிரிக்க ஆதிவாசிகள்

ஒவ்வொரு நாட்டிலும் ஆதிவாசிகள் அந்தந்த நாட்டின் ஒதுக்குப் புறமாக காடுகளில் வாழுகின்றனர். மனித வரலாற்றில் மிகப் பழைய காலகட்டத்தின் வாரிசுகளாக விளங்கும் இந்த ஆதிவாசிகள் தத்தம் சொந்த வாழ்க்கை முறைகளையும், விட்டு விட விரும்பாமல் வளர்ந்து வரும் நவீன நாகரீக வாழ்விலும் அந்தந்த நாட்டுத் தேசிய நீரோட்டத்திலும் கலந்து கொள்ள மறுத்து ஒதுங்கி வாழ்ந்து வருபவர்கள். தொடர்ந்தும் அப்படியே சுதந்திரமாக வாழப் பெரிதும் விரும்புபவர்கள். இருப்பினும் நவீன விஞ்ஞான காலத்தின் அழுத்தம் இவர்களில் பலரை நவீன வாழ்வுக்கு மாற்றி விடுவதும் உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.

தென் ஆபிரிக்காவில் வாழும் ஆதிவாசிகள் இனக் குழுமங்களில் ஒன்றாக விளங்குவது 'புஷ்மென்' என்ற குழுவாகும். பொட்ஸ்வானா, நமீபியா, தென் ஆபிரிக்கா ஆகிய




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் புஷ்மென் இனத்தவர்கள் வாழ்கின்றார்கள். இவர்களது மொத்த தொகை சுமார் 90 ஆயிரம் பேர் எனக் கூறப்படுகின்றது. ஏனைய தென்ஆபிரிக்க ஆதிவாசிகளைப் போன்று புஷ்மென் மக்களின் பிரதான மரபு ரீதியான தொழில் வேட்டையாடுவதுதான். இவர்களிடையே உள்ள உபகுழுக்கள் ஜூ, ஹோான்ஸி, குங் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டாலும் பொதுப்படையாக புஷ்மென் என்றே குறிப்பிடப்படுகின்றனர்.

தென் ஆபிரிக்காவில் வாழும் புஷ்மென் ஆதிவாசி இனம் ஆகக் குறைந்தது 20000 ஆண்டுகளாக வாழ்ந்து வந்திருக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் நமா என்னும் மொழியைப் பேசுகிறார்கள். கலஹரி என்னும் இடத்தில் வாழ்கின்ற நவீன புஷ்மென் இருகடவுட் கொள்கை உள்ளவர்களாகத் தோன்றுகின்றனர். ஒரு கடவுள் கிழக்குத் திசையிலும் மற்றக் கடவுள் மேற்குத் திசையிலும் இருப்பதாக நம்புகின்றனர்.

புஷ்மென் தமது இடுப்பைச் சுற்றி சிறிய அளவில் ஆடை அணிகின்றனர். முதுகுப் பகுதியில் கம்பளித் துண்டுகளை அணிகின்றனர். இம் மக்கள் வில், அம்பு கொண்டு வேட்டையாடுபவர்களாகவும், சிறிய மிருகங்களைப் பிடித்து உண்பவர்களாகவும், கிழங்குகள், மற்றும் பழங்களை உண்பவர்களாகவும் உள்ளனர். குகைகள் அல்லது புல் மற்றும் மிருகத் தோலால் மூடிய குடிசைகளில் வாழ்கின்றனர்.

இவர்கள் மட்பாண்டங்களைச் செய்வதில்லை. அதற்குப் பதில் தீக்கோழி முட்டை ஓடு அல்லது மிருகங்களின் அங்கப் பகுதிகளை நீர் பதார்த்தங்களைச் சேமிக்க உபயோகிக்கின்றனர். இந்தக் காரணங்களினால் புஷ்மெனின் சமய மரபுகள், நாட்டுப் பாடல்கள், கலை, மற்றும் சமய வழிபாடுகளில் மிருகங்களும் இயற்கையும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவர்கள் நிலத்தினை நம்பியே முழுமையாக வாழ்க்கையை மேற்கொள்வதால் நாடோடி வாழ்க்கையையே வாழ வேண்டி இருக்கிறார்கள். அதற்காக இம்மக்கள் நோக்கமின்றிச் சுற்றுவதில்லை. ஒவ்வொரு பருவகாலத்திற்கும் மரஞ் செடிகளில் உணவு, பழங்கள் கிடைக்கக்கூடிய இடங்களுக்கு வருடாந்தம் திட்டமிட்ட பாதைகளில் செல்வார்கள்.



நாடோடியாகத் திரியும் இக்குழுக்களில் ஆண்கள், பெண்கள், சிறியவர்கள் எனச் சுமார் 25 பேர் இருப்பார்கள். வருடத்தில் சில பகுதிகளில் எல்லாக் குழுக்களும் ஒன்று சேர்ந்து கொள்ளும். அப்போது அவர்கள் செய்திகள் மற்றும் பரிசுகளைப் பரிமாறிக் கொள்வதுடன் திருமண ஏற்பாடுகள் செய்தல் மற்றும் சமூகநிகழ்ச்சிகள் ஆகியனவும் நடைபெறும். புஷ்மெனில் பல்வேறு இன மக்கள் உள்ளனர். ஆனால் எல்லோருக்கும் பொதுவான ஒருபெயர் வழங்கப்படவில்லை. புஷ்மென் சான், பசர்வா எனப் (பொட்ஸ்வானாவில்) பெயர்கள் வழக்கத்தில் உள்ளன. டச்சு வார்த்தைகளான பொஸ்ஸீஸ் மன் (Bossiesman) என்ற பெயரில் இருந்துதான் 'புஷ்மென்' என்ற பெயர் வந்தது. அதன் அர்த்தம் கொள்ளைக்காரன் அல்லது சட்டத்திற்கு புறம்பானவன் என்பதாகும். காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக நீண்ட காலம் நடைபெற்ற போரைத் தொடர்ந்து புஷ்மென் என்ற பெயர் அவர்களுக்கு வழங்கப்படலாயிற்று.


இப்பெயர் அந்நியர் ஆதிக்கத்துக்கு எதிராக தாங்கள் காட்டிய வீரத்தினை பெருமையுடன் குறிப்பதாக அவர்கள் கருதுகின்றனர். இன்றைய சான் அல்லது புஷ்மென் மக்கள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சான் மொழியைப் பேசுபவர்களாவர். பிரதான சான் மொழி பேசுவோர் தற்காலத்தில் பொட்ஸ்வானா, தென்ஆபிரிக்கா, நமீபியா, அங்கோலா ஆகிய இடங்களில் வாழ்கின்றனர். அவர்கள் பாந்து மற்றும் குடிவரவுக் குழுக்களால் மிகவும் ஒதுக்கப்படுபவர்களாக உள்ளனர். இவர்களைப் பொழுது போக்காக வேட்டையாடிக் கொன்ற சம்பவங்களும் உள்ளன. அதனால் தென்ஆபிரிக்காவில் புஷ்மெனின் மொத்த சனத்தொகை ஒரு இலட்சமாகக் குறைந்துள்ளது.

கஜ்ஜென் என்பது தென்பகுதி புஷ்மெனின் கடவுளாகும். அது எலென்ட், முயல், பாம்பு, வல்லூறு போன்ற பல உருவங்களாக அவர்களுக்குத் தோற்றம் காட்டும். அதிலும் எலென்ட் அவர்களது பக்திக்குரிய மிருகமாகும். சிறுவர்களது முதலாவது கொலை, சிறுமிகள் பூப்பெய்தல், திருமணம், மெய்மறதி ஆட்டம் ஆகிய சடங்குகளில் எலென்ட் தோன்றும். சிறுவன் ஒருவன் ஓர் எலென்டை கண்டு பிடித்து அம்பினால் ஒரே தரத்தில் எய்து அதனை விழுத்தவேண்டும் எனச் சொல்லிக் கொடுப்பது ஒரு சடங்காக நடத்தப்படும். அவன் பெரியவனானதும் அவன் முதலாவது பெரிய மிருகத்தை, நிச்சயமாக ஓர் எலென்டைக் கொல்லுவான். அந்த மிருகம் குத்திக் கிழிக்கப்பட்டு, அதன் தொண்டையிலும், தோள்மூட்டிலும் உள்ள கொழுப்பு எடுக்கப்பட்டு 'விறாத்து' (சாறு) செய்யப்படும். இதில் நிறைய சத்து உள்ளது.




சிறுமி பூப்படையும் சடங்கின்போது அவள் பூப்படைந்தவுடன் குடிசையில் இருந்து அப்புறப்படுத்தப்படுவாள். இப்பழங் குடியினரின் பெண்கள் எலென்ட் காளைமாட்டு நடனம் ஆடுவர். அங்கு அவர்கள் எலென்ட் பசுக்களின் இனச் சேர்க்கையை பாவனை செய்து ஆடுவர். ஒரு மனிதனும் இந்நடனத்தில் பங்கு கொள்வான். திருமணச் சடங்கின் போது, மணமகன் எலன்டின் இருதயத்தில் இருந்து எடுத்த கொழுப்பை பெண்ணின் பெற்றோருக்கு கொடுப்பான். பின்னர் ஒரு கட்டத்தில் பெண்ணுக்கு, எலெண்டின் கொழுப்பு உடலில் பூசப்படும்.



மெய்மறதி ஆட்டத்தில், எலன்ட் எல்லா மிருகங்களிலும் மிகவும் வீரியமுள்ள மிருகமாகக் கருதப்பட்டு, அந்த வீரியத்தை தான் பெறவேண்டும் என ஷாமன்கள் (வைத்தியம் செய்வோர்) வேண்டுவர். கஜ்ஜினின் விருப்பமான மிருகம் எலென்ட் என்று புஷ்மென் நம்பினார். ஷாமன்கள் ஒவ்வாருவரையும் இந்த ஆவிகள் மற்றும் நோய்களில் இருந்து காப்பாற்றினர். அது மட்டுமல்ல, மெய்மறதி நிலைக்குப் போய், இந்த மக்களுக்கு எதிர்வு கூறுவது, பருவ காலத்தில் கட்டுப்படுத்துவது, சிறந்த வேட்டையாடுதலை உறுதிப்படுத்துவது உட்பட பொதுவாக இம்மக்களது நன்மைகளைக் கவனிப்பது இவர்கள் தான்.

இந்த ஆதிவாசிகளின் சடங்குகள் மற்றும் கிரியைகளை அவர்களது ஓவியங்கள் நன்கு புலப்படுத்தும். எழுத்து மொழி இல்லாத இம்மக்களது வாழ்வில், குறியீட்டு விடயங்களும் கிரியைகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. தமது உணர்வுகளை வெளிப்படுத்தவும், மன அழுத்தங்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கட்டுப்படுத்தவும், கதை கூறுதல், பிறர் செயல்களைப் பாவனை செய்துகாட்டுதல், நடனம் ஆகியன பெரிதும் உதவுகின்றன. இந்த நடவடிக்கையில் மெய்மறதி நிலை முக்கியமானதாகும்.

பண்டைக் காலத்தில் குகைகளிலும் பின்னர் கன்வஸிலும் அவர்கள் தமது மன உணர்வுகளையும் மற்றும் அன்றாட வாழ்வின் முக்கிய விடயங்களில் வெளிப்படுத்தப்படும் பொருட்களையும் ஓவியமாகத் தீட்டினர். இவற்றில் மெய்மறதி நிலையில் பெறப்படும் அனுபவங்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. புஷ்மெனின் உறவுத்தொடர்பு அவர்கள் ஒருவருக்கொருவர் தங்கியிருக்கும் தன்மையைக் காட்டுவதாக உள்ளது. இந்த உறவு முறைமை எஸ்கிமோவரின் உறவு முறைமையைப் போன்றது. சிறுவர்களை எவ்விதம் பெயர் சொல்லி அழைப்பது என்பதனை வயோதிபர்களில் இருவர் எப்போதும் தீர்மானிப்பர். ஒவ்வொரு பிள்ளையும் அவனது பாட்டன், பாட்டி அல்லது உறவினர் பெயரால்தான் அழைக்கப்படுவான்.

விளையாடுவதைத் தவிர பிள்ளைகளுக்கு வேறு கடமைகள் ஏதும் இல்லை. புஷ்மெனின் எல்லா வயதினருக்கும் ஓய்வு முக்கியமானதாகும். பெருமளவான நேரம் கலந்துரையாடுதல், கேலி பேசுதல், சங்கீதம் மற்றும் புனித நடனங்களில் தான் செலவாகின்றன. சான் சமூகத்தில் பெண்கள் உயர்வாக கணிக்கப்பட்டு மதிக்கப்படுகின்றனர். தத்தம் குடும்பக் குழுக்களிலும் தலைவிகளாக இருக்கின்றனர். அவர்கள் குடும்பத்திலும் குழுவிலும் முக்கிய முடிவுகளை எடுப்பவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் உணவு வகைகளைச் சேமிப்பதுடன் வேட்டையாடுதல்களிலும் பங்கு கொள்கின்றனர்.

சான் மக்களின் மிக முக்கியமான விடயம் தண்ணீர் ஆகும். வரட்சி நீண்ட காலம் இருக்கும் போது தண்ணீர் நிலையங்கள் வற்றிவிடும். அப்போது அவர்கள் கிணற்றினை உபயோகிப்பர் அதாவது இதில் தண்ணீர் எடுப்பதற்கு ஈரலிப்பான நிலத்தினை ஆழமாகத் தோண்டி அதில் நீளமான துவாரமான புல்லை விடுவர் வெறுமையான தீக்கோழி முட்டை ஓட்டினை வைத்து நீரை உறிஞ்சி அதில் விடுவர். குறைந்தளவிலான கொழுப்பு உணவினை உட்கொள்வதன் காரணமாக பெண்கள் பூப்படைதல் வழமையான காலத்தைவிடப் பிந்தியே நடைபெறுகின்றது. 18 அல்லது 19 வயதளவில் தான் பிள்ளைப் பேறும் இடம்பெறுகிறது. பொதுவாக பிள்ளைப் பேறு நான்கு வருட இடைவெளி கொண்டதாகவே அமையும். தாய்ப்பால் பற்றாக் குறையும், ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செல்லவேண்டி இருப்பதால் தாய்பாலூட்டுவது மற்றும் பிள்ளைகளை தூக்கிச் செல்வதில் உள்ள சிரமமும் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

நஞ்சு தடவிய அம்புகளையும் ஈட்டிகளையும் பாவித்து வேட்டையாடி உண்ணும் புஷ்மென் பருவகால நிலைக்கேற்ப பயிர் வகைகள், கிழங்குகள் மற்றும் வெட்டுக்கிளி, மயிர்க்கொட்டி, வண்ணத்துப் பூச்சி போன்றவற்றையும் உண்பார்கள். ஈரல் ஆண்களாலும், வேட்டையாடுவோரினாலும் உண்ணப்படுகின்றன. அதில் பெண்களுக்கு பாதுகாப்பில்லாத நஞ்சு இருப்பதாக அவர்கள் எண்ணுவதால் பெண்களுக்குக் கொடுப்பதில்லை. 1990களில் இம்மக்களின் ஒரு பகுதியினர் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட நவீனத்துவ திட்டங்கள் காரணமாக, கால்நடை வளர்ப்பு வாழ்க்கைக்கு மாறியுள்ளனர். அத்துடன் தொழில்நுட்ப அபிவிருத்தி காரணமாகவும் வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் ஆகிய வேலைகளிலும் அபாயங்களை எதிர்நோக்குகின்றனர்.

- கங்கா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிஞர்கள் பகர்ந்தவை

## 'அறிவுக் கனிகளை மென் மேலும் எமதாக்குக!'

துணைவேந்தர் பேராசிரியர், கலாநிதி. நா. சண்முகலிங்கன்

பண்பாட்டின் மேன்மைகளைக் காக்கும் கலைக்கேசரி இதழுக்கு வயது ஒன்று நிறைகின்ற செய்தி பெறுமதியானது. வெளிவந்த இதழ்களின் பண்பாட்டுப் பெறுமதியின் வழி இந்த அர்த்தமும் அழகும் எமதானது. பண்பாட்டு மறதிக்குள் சுயம் தொலைக்கின்ற இன்றைய சமூக வாழ்வினை மீட்கும் காலப்பணியில் கல்வியாளர்களும், கலைஞர்களும், பண்பாட்டு ஆர்வலர்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது. இந்த வகையில் தொடர்பியலின் வல்லமைகளை, நவீன தொழில்நுட்பத்தின் ஆற்றல்களை வசமாக்கி தமிழில் அழகான இந்தச் சஞ்சிகையை வடிவமைத்துத் தரும் ஆசிரியர் குழாமையும் இவ்வறிவுக் களத்தினை அமைத்துத் தந்த இதழியலில் வரலாறு படைத்த வீரகேசரி நிறுவனத்தினரையும் பாராட்டுதல் நம் கடன். மனச் செம்மைக்கும் பண்பாட்டு மேம்பாட்டுக்குமான ஆக்கங்களை தேர்ந்து தருகின்ற கலைக்கேசரி மென் மேலும் சமூகப் பயனான அறிவுக் கனிகளை எமதாக்க எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்

## 'கலைக்கேசரியைக் கண்டவர்கள் கைவிடுவதில்லை '

பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா. (தமிழ்த்துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

கலைக்கேசரி ஒருவருடத்தை நிறைவு செய்வது மகிழ்ச்சிக்குரியது. கண்ணைக் கவரும் விதத்திலே அழகான அமைப்புடன் வெளிவந்து வாசகர்களைத் தம்பால் ஈர்த்துள்ள கலைக்கேசரி நின்று நிலைத்து நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன். எமது பண்பாட்டு அடையாளங்களை மாத்திரமன்றி உலகப் பண்பாட்டு அமிசங்களையும் அழகான வண்ணப் படங்களுடன் வெளியிடுவது பாராட்டிற்குரியது. வாசிப்புப்பழக்கம் அருகிவரும் இக்காலத்திலே, வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டும் வகையிலே வடிவமைக்கப்பட்ட கலைக்கேசரியைக் கண்டவர்கள் கைவிடுவதில்லையென்பதை நான் நன்கு அறிவேன். கலைக்கேசரி ஆசிரியர் முதிர்ச்சி பெற்ற, அனுபவமுள்ள ஊடகவியலாளர் என்பது தெற்றெனத் தெரிகின்றது. கலைக்கேசரிக்கு என்றும் எமது இனிய வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரியதாகும்.

## 'உள்ளம் உவக்கிறது'

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

கலைக்கேசரியின் ஓராண்டு நிறைவறிந்து மகிழ்கிறேன். தேசிய நீடோட்டத்தில் இருந்து விலகாமல், ஈழத்தமிழினத்தின் குரலாய் கடந்த 80 ஆண்டுகளாய் இயங்கி வரும் வீரகேசரியின் விழுதுகளில் ஒன்றாய் உருப்பெற்று. இன்று தாயை இனங்காட்டும் சேயாய் மிளிர்கிறது. கலைக்கேசரி உலகளாவிய சஞ்சிகைகளின் தரத்தைத் தொடும், புறத்தோற்றம், ஆச்சரியம் தருகின்றது. கலாசாரம், பண்பாடு, அரசியல், உலகசெய்திகளென, பல விடயங்களும் வண்ணமாய் மின்னுகின்றன. அனுபவம் மிக்க பத்திரிகையாளர் அன்னலட்சுமி இராஜதுரை அவர்களின் தலைமையில் இயங்கும் குழுவின் தேடலும், வலிமையும், சஞ்சிகையின் தரத்தில் வெளிப்படுகின்றன. நம் தேசத்தின் மூத்த பெண் பத்திரிகையாளரான அன்னலட்சுமி இராஜதுரை அவர்களுக்கு என் மனமுவந்த வாழ்த்துக்கள். ஓராண்டு வளர்ச்சியே இதுவென்றால் இனி... ...? கண்படாமல் வளரட்டும் கலைக்கேசரி. அதன் வளர்ச்சிக்காய், என்னை வாழ்விக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் பாடிப் பரவும் பரம்பொருளை வேண்டிப் பணிகின்றேன்.

## 'கலைத்துறையின் சுவைமிக்க கேசரி'

கந்தையா நீலகண்டன் (பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

பிறந்த முதலாண்டிலே தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்று தொடர்ந்து மலர்ந்து கொண்டிருக்கும் கலைக்கேசரி ஓராண்டு நிறைவு காண்பது மகிழ்ச்சிகரமான செய்தி. இலங்கை வாழ் தமிழ் மக்களின் கலைத்துறை அபிலாசைகளை நன்கறிந்த ஒரு சஞ்சிகையாக அனுபவம் மிக்க ஆசிரியையின் வழிகாட்டலில் கலைக்கேசரி வெளிவந்து கொண்டிருக்கிறது. கண்ணைக் கவரும் வண்ண அட்டை, வண்ண வண்ணக் கோலங்களில் நல்ல தரமான கடதாசியில் ஆழ்ந்த கருத்துக்கள் மிகு ஆக்கங்கள். கூடிய பக்கங்கள், கலைத்துறையின் சுவைமிக்க கேசரி என்றெல்லாம் புகழாரம் சூட்டக்கூடிய வகையில் கலைக்கேசரி மாதந்தோறும் வெளிவருகின்றது. பல்வேறு கலைத்துறைகளை சேர்ந்த படைப்பாளிகளின் கலைகளையும் வெளிக்கொணர்ந்து ஊக்கம் தந்து அவர்களை வளர்ப்பது இன்னுமோர் ஆக்கமிகு செயற்பாடு .வாழிய கலைக்கேசரி! கலைத்துறைக்கு நல்லதொரு பங்காளியாக சிறக்க ஆண்டவர் அருள்வாராக !

## 'கலைக்களஞ்சியமென்றால் மிகையில்லை'

டாக்டர். எச். எச். எம். ஹூசைர் (சமாதான நீதிவான்)

முத்தமிழின் கடந்தகால, இக்கால நிகழ்வுகளையும் உலகலாவிய அனைத்து சமுகத்தினரின் இலக்கியங்கள், நுண்கலைகள் தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்பவற்றுள் காலத்தின் தேவையறிந்து தேவையான விடயங்களை வெளியிட்டு வரும் கலைக்கேசரியை ஒரு கலைக்களஞ்சியமென்றால் மிகையாகாது. தரமான காகிதத்தில் பொருத்தமான வண்ணப் படங்களும் விளக்கங்களும் மாணவர்கள், வரலாற்று ஆசிரியர்கள், மற்றும் எம்போன்று கலை இலக்கிய ஆர்வலர்களுக்கும் பயனுள்ளதாக வெளிவருவது கலைக்கேசரியின் சிறப்பம்சமாகும். கூறும் நல்லுலகம், குறிப்பாக புலம்பெயர் தமிழ்பேசும் மக்களின் அடுத்தடுத்த தலைமுறையினரும் பயன்பெறக்கூடியதாக ஒவ்வொரு இதழையும் நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும் . கலைக்கேசரி மூலம் தொடரட்டும் உங்கள் கலைச்சேவை . வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மீண்டும் வெற்றி வாகை சூடியுள்ளது, சம்பத் வங்கி.**

"வருடத்தின் வங்கி" யாக இரண்டாவது முறையாகவும் த ∴பினான்ஷியல் டைம்ஸ் லண்டன் த பேங்கர் சஞ்சிகையினால் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது சம்பத் வங்கி.

நாம் நவீன வங்கித்துறைக்கு புதிய யுக்திகளை புகுத்தி எமது பங்குதாரர்களுக்கு கூடிய இலாபத்தை பெற்றுக்கொடுத்து எமது நிதி ஸ்திரத்தன்மையையும் பேணி வருவதால் உள்நாட்டு வங்கித்துறையில் தன்னிகரற்ற தலைமைத்துவத்தை தக்கவைத்துள்ளோம். உலகளாவிய ரீதியில் எமக்கு கிடைத்த கௌரவம் எம்மை ஸ்ரீலங்காவின் அபிவிருத்திக்கு சேவையாற்ற ஒரு உந்துசக்தியாக அமைந்துள்ளது.

Sampath Bank PLC - Company No. PQ 144 Grant McCann

www.sampath.lk

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

கிழக்கிலங்கையில் உள்ள பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் ஒன்றாக விளங்குவது கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தேசத்துக் கோயில்களில் ஒன்றாக விளங்கும் இவ்வாலயம் 13 ஆம் நூற்றாண்டில் இருந்து வீர சைவ மரபைப் பின்பற்றி வருகின்றது. ஏராளமான இந்து மக்கள் இவ்வாலயத்தில் வழிபாடியற்றி வருவதுடன் பெருமளவில் சமூக ஒன்றிணைவுக்கான இடமாகவும் இக்கோயில் விளங்குகின்றது.

இந்த ஆலயத்தின் தேரோட்டம் மட்டக்களப்பு மாவட்ட இந்துக்களின் பிரதான நிகழ்வாக இருந்து வருகிறது. இவ்வாலயத்தின் இரு தேர்களும் மிகப் பழைமை வாய்ந்தவையாகும். இவ்வாலயம் அமைந்துள்ள கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு வாவியின் மேற்கு கரையிலுள்ள ஒரு பெரிய கிராமமாகும். மட்டக்களப்பில் இருந்து மண்முனைக்குப் போகும் வீதியில் எட்டு மைல் தூரத்தில் மட்டக்களப்பில் இருந்து கல்முனைக்கு போகும் பாதையில் சுமார் ஐந்தாவது மைல்கல்லில் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் பிரசித்தமானது. இலங்கையை போர்த்துக்கேயர் ஆட்சிசெய்த காலத்தில் இந்த ஆலயத்தை அழிக்கும் நோக்கோடு, அங்கு வந்தான் அன்றைய போர்த்துக்கேய தேசாதிபதி கொன்ஸ்ரன்ரைன் டி சூசா என்பவன்.

ஆலயத்திக்குள் பிவேசித்த அவன், அங்கு பணிந்து நின்ற பூசகரிடம் ஆலயத்தில், ஈஸ்வரர் முன்பாக வீற்றிருந்த நந்தியைப் பார்த்து 'இந்த மாடு புல்லுத் தின்னுமா?' என்று கேலியாகக் கேட்டான். பூசகரும் 'பட்' என்று 'ஆம்!' என்று கூறிவிட்டார். அவனும் அதைப்பார்க்க மறுநாள் வருவதாகக் கூறிச் சென்றுவிட்டான்.

பூசகர் 'ஆம்' என்று கூறிவிட்டாலும் , மிகவும் அச்சமுற்றார். இரவிரவாக தான்தோன்றி ஈஸ்வரரை இடையறாது தியானித்து தம் வாக்கைக் காப்பாற்ற அருள் புரியுமாறு ஈஸ்வரரை வேண்டினர்.

மறுநாள் சொன்னபடியே அங்குவந்துவிட்ட தேசாதிபதி, மாடு புல்லைத் தின்பதைக் காட்டுமாறு கேட்டான். கல்லாய் இருந்த நந்திக்கு முன் பச்சைப் புல்லும் போடப்பட்டது. அஞ்சிநடுங்கிய பூசகர், ஈஸ்வரரை தியானித்து தம்மைக் காப்பாற்றுமாறு உருகி வேண்டினார். பூசகருக்குத் தான்தோன்றி ஈஸ்வரர் இரங்கினார்.

தேசாதிபதியும், பூசகரும் பார்த்து நிற்க, என்ன ஆச்சரியம்! தான்தோன்றி ஈஸ்வரர் அருட்கருணை புரிந்தார். கல்லினாலான நந்தி, திடீரென உயிர்பெற்று எழுந்து, இந்தப் புல்லைச் சாப்பிட்டதுடன் சாணியும் போட்டது! பின்னர் மீண்டும் கல்லானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைப்படைந்த தேசாதிபதி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போய்விட்டான். கோவிலும் அழிவுறாமல் தப்பியது. அந்த பிரசித்திபெற்ற நந்தி, இன்றும் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

மூலஸ்தானமும் அதனோடிணைந்த உயர் கட்டிடமுமே பழைய கட்டிடக்கலை மாதிரியில் உள்ளது. நீடித்த போர்ச்சூழல் காரணமாக திருத்த வேலைகளைக் காணாத ஏனைய ஆலயங்கள் போல இருந்த இவ்வாலயத்திலும் சமீபத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு அண்மையில் கும்பாபிஷேகம் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயம் குறித்தும், அதன் தொன்மை குறித்தும், வரலாற்று ரீதியாக விளக்குகிறார் வரலாற்று நூலாசிரியரான செல்வி க. தங்கேஸ்வரி (பி.ஏ தொல்சிறப்பு, மட்டக்களப்பு) அவர்கள். இவர் கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு, மட்டக்களப்பு கலை வளம், மாகோன் வரலாறு, குளக்கோட்டன் தரிசனம் ஆகிய நூல்களின் ஆசிரியராவார்.

### கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்


இலங்கையின் வரலாறு கூறும் மகாவம்சம் விஜயன் இலங்கைக்கு வந்த காலத்திலிருந்து (கி. மு. 543) சிங்கள மன்னர்களது ஆட்சியைப் பற்றியே கூறுகிறது. விஜயன் வருகைக்கு முன்பிருந்த இலங்கை பற்றியோ அக்காலத்தில் இருந்த திராவிட மக்கள் பற்றியோ எதுவும் கூறவில்லை. ஆனால் பல்வேறுபட்ட தொல்லியல் தடயங்கள் மூலம் இலங்கையில் நிலவிய புதிய கற்கால, பெருங்கற்கால பண்பாடுகள் பற்றி அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. இவை எல்லாம் ஆதித்திராவிடரது காலத்தவை என்ற உண்மை நிரூபணமாகியது. இந்த ஆதித் திராவிடர்கள் பெருமளவில் வாழ்ந்த பிரதேசம் தென்னிலங்காபுரி என்பதும் தெளிவாகியது.[1]

தென்னிலங்காபுரி என்பது பண்டு திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கிய பிரதேசமாகும். வடக்கே வெருகல் முதல் தெற்கே குமணை வரை பரந்திருந்ததோடு தற்போதைய அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களையும் கதிர்காமம், விந்தன, வெலலச ஆகிய பிரதேசங்களையும் உள்ளடக்கிய பரந்த பிரதேசமாகும்.[2]


இப்பிரதேசத்தில் தம்பலகாமம், திருக்காசை, வெருகல், சித்தாண்டி, மாமாங்கேஸ்வரம், கொக்கட்டிச்சோலை, போரதீவு, மண்டூர், தாந்தாமலை, உகந்தை, திருக்கோவில், கதிர்காமம் முதலிய பழைமையான தலங்கள் ஒரே நிலக் கோட்டில் அமைந்திருந்தன. இவற்றில் சில முருக தலங்களாகவும் சில சிவத்தலங்களாகவும் அமைவதைக் காண முடியும். இவைகளை உள்ளடக்கிய பிரதேசம் 'தெட்சனாபதி' எனவும் வழங்கப்பட்டது.

### திருமூலர் கூறிய 'சிவபூமி' தென்னிலங்காபுரி

திருமூலர் இலங்கையை சிவபூமி என்று குறிப்பிட்டுள்ளார். சிவ வணக்க தலங்கள் அனைத்தும் கிழக்குப் பிரதேசத்திலே குவிந்துள்ளன. சிவ வணக்கம், ஆதித்திராவிடரின் பாரம்பரிய




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இளவரசி உலகநாச்சியாரும் சகோதரர் உலக குருநாதனும் இலங்கை வருதல்.



மட்டக்களப்பு மன்னன் மேகவண்ணனை சந்தித்து நாடு பெறுதல்.



வேடுவரை கொண்டு காடுவெட்டும் போது குருதி பாயக் காணல்.

வழிபாடாகும். இதிகாச புருஷனாகிய இராவணன் இலங்கையில் வாழ்ந்த ஆதித் திராவிட மன்னன் என்னும் கருத்து அண்மைக் காலமாக வலுப்பெற்று வருகிறது.

இராவணன் சிவபக்தன், புகழ் பெற்ற பழம் பெரும் தலங்களான திருக்கேதீஸ்வரம், மாமாங்கேஸ்வரம், திருக் கோவில் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்புடையவன். இராவணனுடன் தொடர்புறும் கர்ணபரம்பரைக் கதைகள் அதன் பின்னணியிலுள்ள வரலாற்று உண்மையை உணர்த்துகின்றன.[3] மாமாங்கேஸ்வரம் ஆதியில் லிங்கக் கோயிலாகவே இருந்துள்ளது. இராவணன் ஆயிரம் லிங்கங்களை ஸ்தாபித்தான் என வரலாறு கூறும்.

### தொன்மை வழிபாடு

தமிழ் நாட்டில் ஆரம்ப காலங்களில் மரங்கள், மிருகங்கள் தெய்வத் தன்மை வாய்ந்தனவாகக் கருதப்பட்டன. ஆரம்ப கால கோயில்கள் மரங்களின் கீழ் அமைக்கப்பட்டன. உலகெங்கும் ஆதி வழிபாடு, மர வழிபாடு என்பது ஆய்வாளர்களது கூற்றாகும். முருகன் 'கடம்பன்' எனவும் சிவன் 'கொன்றை வேந்தன்' எனவும் 'ஆல்கெழு கடவுள்' எனவும் அழைக்கப்பட்டனர். வேம்பு, கடம்பு, ஆல், புன்னை போன்ற மரங்கள் வணக்கத்துக்குரியனவாகக் கருதப்பட்டன. இவை ஈழத்து யக்ஷ, திராவிட வழிபாடுகளில் இடம்பெற்றன.[4] தென்னிலங்கை, கிழக்கிலங்கை உட்பட்ட பிரதேசம் ஆதித் திராவிடர் வாழ்ந்த இடம் என்பதற்கு பல்வேறு சான்றாதாரங்கள் உள்ளன. ஆதிக் குடிகள் 'ஒஸ்ரலோயிட்' இன மக்கள் எனவும் அவர்களது வழி வந்தவர்களே கிழக்கிலங்கையில் இன்றும் வாழும் வேட இன மக்கள் என்பதும் வரலாற்றாய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டதாகும்.

### லிங்க வழிபாட்டுத் தொன்மை

ஆதிக் குடிகளின் வணக்க முறை நடுகல் வழிபாட்டிலிருந்து ஆரம்பிக்கிறது. ஆதியில் மரத்தினடியில் நிறுத்திய கல்லையும், வேலையும் வழிபட்டனர். பின்னர் இது லிங்க வழிபாடாகவும், முருக வழிபாடாகவும் பரிணமித்தது. இதனடிப்படையிலே புதிய கற்காலம், பெருங்கற்காலம் ஆகிய காலப் பகுதிகளிலே லிங்க, வேல் வழிபாடு முக்கியம் பெற்றிருந்தது. இவ்விதமே கொக்கட்டிச்சோலையிலும், மாமாங்கேஸ்வரத்திலும் லிங்க வழிபாடு முக்கியம் பெற்றிருந்தது. விஜயன் இலங்கைக்கு வரும் போது ஐந்து ஈச்சரங்கள் இருந்ததாக மகாவம்சமும், யாழ்ப்பாண வைபவமாலையும் குறிப்பிடும் செய்தி முக்கியமான சான்றாகும்.[5]

இவ்வாறு ஐந்து ஈச்சரங்கள் இருந்ததாக மகாவம்ச ஆசிரியர் குறிப்பிட்டாலும் அதே காலப் பகுதியிலே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமும் மாமாங்கேஸ்வரமும், திருக்கோவில் வெள்ளை நாவற் பதியும் லிங்கக் கோயில்களாக இருந்தன என்பதை மகாவம்சம் கூறாமல் விட்டு விட்டது. இங்கெல்லாம் லிங்கக் கோயில்கள் காணப்பட்டன என்பதற்கு கிரேக்க அறிஞன் தொலமியின் குறிப்பும் படமும் ஆதாரமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஆதித் திராவிட இயக்க மன்னனான இராவணன் ஆட்சி நிலவிய பிரதேசங்களாகும். மகாவம்சம் குறிப்பிடும் இயக்கத் தெய்வங்களான இராவண, வைஸ்ராவண, குபேர, மகேஸ, விபூசன என்போர் இராட்சதர் என மகாவம்சம் கூறினாலும் இவர்களே ஆதித் திராவிடரில் இருந்து வந்தவர்கள் என்பதும் இவர்களின் சந்ததியினரே வேடர் எனப்பட்டவர்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இவ் வேட பரம்பரையினரே கொக்கட்டிச் சோலைப் பகுதியில் பண்டு வாழ்ந்தனர் என்பதும் கொக்கட்டி மரத்தடியிலே லிங்கத்தைக் கண்டவர்கள் என்பதும் தெளிவான உண்மையாகும். ஆகவே இது ஆதித் திராவிட பிரதேசம் என்பது தெளிவானது.

### உலக நாச்சி வருகை

உலகநாச்சி வரலாறு பற்றி மட்டக்களப்பு மான்மியம் கூறும் செய்தி வருமாறு, 'மட்டக்களப்பிலே குணசிங்கன் ஆட்சியின் போது *(கலி 3500)* கலிங்க ஒரிசா தேசத்தை ஆட்சி செய்த குகசேனனின் மகள் உலக நாச்சி கௌதம புத்தரின் தசனத்தையும், *(தந்தம்)* கைலயங்கிரியில் முகவம்சத்தார் வைத்திருந்த சிவலிங்கத்தையும் கூந்தலுக்குள் மறைத்து வைத்துக் கொண்டு வந்தாள்.


### அரசன் மேகவர்ணன் (கி. பி. 301 - 382)

இவருக்கு பரிசாக மண்முனை காட்டுப் பிரதேசத்தைக் கொடுத்தான். அவள் காடு திருத்தி நாடமைத்து குகவம்ச சிறைக் குடிகள் 30 பேரைத் தருவித்து மண்முனைப் பிரதேசத்தை அரசாக்கி ஆட்சி செய்தான்.[6] இதனை மகாவம்சம் கூறும் குறிப்பும் உறுதி செய்கிறது.[7]

உலக நாச்சி அமைத்த ஆலயங்களின் விபரமும் மட்டக்களப்பு மான்மியத்திலே கூறப்பட்டுள்ளது. உலக நாச்சி கொண்டு வந்த சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து கோபுரத்துடன் கூடிய பாரிய கோயில் அமைத்த இடம் கோயில் குளமாகும். இதற்கு இங்கு தோண்டி எடுக்கப்பட்ட கல்நிலைகள், கந்து விளக்கின் பாகங்கள், தியான புத்தர் சிலை என்பன சான்றாகின்றன.

தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தையும் உலகநாச்சி அமைத்தாள் என மட்டக்களப்பு மான்மியம் கூறும். அக் கூற்றை பின்வருமாறு கொள்ள வேண்டும். ஏற்கெனவே ஆதித் திராவிட வழிவந்த வேடர்களில், ஒருவனால் *(திடகன் என்னும் வேடன்)* கண்டுபிடிக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்த கொக்கட்டி மரத்தடி லிங்கத்திற்கு உலக நாச்சி பெரிய கோயில் அமைத்தாள் என்றே கொள்ள வேண்டும். இன்றும் கொக்கட்டிச்சோலை ஆலயத்திற்கும் கோயில் குளத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. கோயில் குளத்திலிருந்து கொக்கட்டிச் சோலைக்கு வேல் கொண்டு வரும் வழக்கம் இருந்தது. கோயில் குளம் ஆலயம் அழிவுபட்ட பின்னர் ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலுடன் தொடர்புடையதாக உள்ளது.

கோயில் குளம், கொக்கட்டிச்சோலை, தொடர்பு போலவே தாந்தாமலையுடனும் நெருங்கிய தொடர்புடையது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கட்டிச்சோலை ஆலயத்தின் பொக்கிஷங்கள் தாந்தாமலையின் குகைகளில் மறைத்து வைக்கப் பட்டிருப்பதாகவும் அதனால் அது தாண்டவமலை அல்லது பொக்கிஷமலை எனவும் கூறப்படுகிறது

தொடர்ந்து, பாண்டிய ,சோழர் ஆட்சியின் போது இடையிடையே இவர்கள் செல்வாக்கு ஏற்பட்டது. கொக்கட்டிச் சோலை ஆலய கட்டிடமானது பாண்டியர் கால அமைப்பு முறையினை உடையது. இதனை டாக்டர் இந்திரபாலா உறுதிப்படுத்தி உள்ளார்.[8] இங்குள்ள தேரும் பாண்டியர் பாணிச் சிற்பங்களை உடையன. ஆனால் சோழர் காலத்தில் தருவிக்கப்பட்டவை எனப்படுகிறது.

### கலிங்கர் காலமும் கலிங்க மாகோன் தொடர்பும்

கலிங்க மாகோன் 40,000 படை வீரர்களுடன் வந்தான் என மகாவம்சம் கூறும். இவன் முழு இலங்கையையும் கைப்பற்றி பொலநறுவையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான் என வரலாறு கூறும்.[9] 1215 - 1255 வரை முழு இலங்கையுமே ஆட்சி செய்த கலிங்க மாகோனும் இவரது உப ராசனான சோழகங்கனும் (சோழகங்கன் எனப்படும் குளக்கோட்டன்) திருகோணமலை, திருக்கோவில், வெருகல், கோயில் போரதீவு சித்திரவேலாயுதர் கோயில், கொக்கட்டிச்சோலை போன்ற பல இடங்களிலும் நிவந்தங்கள் வழங்கி, வன்னிமைகள் வகுத்து, கட்டுக்கோப்பான முறையிலே ஆட்சி செய்தனர். இவை அனைத்தும் குறித்து மாகோன் வரலாறு, குளக்கோட்டன் தரிசனம் போன்ற நூல்கள் தெளிவாகத் தருகின்றன.[10]

### மாகோன் வகுத்த வன்னிமை

கலிங்க மாகோன் காலம் கிழக்கிலங்கையில் ஒரு பொற்காலமாகும். (கி. பி. 1215 - 1255) 40 வருடங்கள் கட்டுக்கோப்பான முறையில் ஆட்சி செய்த கலிங்க மாகோன் கொக்கட்டிச்சோலை ஆலயத்தில் மட்டுமல்ல இப்பிரதேச கோயில்கள் பலவற்றிலும் நிர்வாக முறைகளைச் சீர்ப்படுத்தினான்.


ஆலய நிர்வாகத்தில் முற்குகர் இனத்தில் கலிங்கர் குடியினர், படையாட்சி குடியினர், உலகிப் போடிகுடியினர், நிர்வாகத்தில் முக்கியமாக சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களே சமுகத்தில் முன்னுரிமை பெற்று வந்துள்ளனர். படையாட்சி குடியினர் கலிங்க மாகோனின் படையாட்சி வன்னிமைக்காக பங்குபற்றினர். இவ்விதம் கலிங்க மாகோன் கொக்கட்டிச்சோலையின் ஆலய நிர்வாகத்தில் இட்ட கட்டளைகள் இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

### அடிக் குறிப்புகள்

1. Heritage of Ceylon - Majumdar PP 8,40,235
   The Vaddahs by sheligmen PP. 419 - 430
   History and Culture of Indian People by - Banerjee.
2. Censes of Ceylon Batticaloa - 1963 PP 112 - 113
3. மட்டக்களப்பு மான்மியம்-பதிப்பு FXC நடராசா 1952- பக். 43
4. மரவழிபாடு - இறையரசன் - சென்னை.
5. யாழ்ப்பாண வைபவமாலை-மயில்வாகனப் புலவர் கி.பி. 1736.
6. Mahavamsa William Gaiger - CH xxx vii PP 40 41
   Vamsathipikasini Commentary on the Mahavamsa PTS. II
   GP Malalasehara Edition London 1935 PP 685
7. மட்டக்களப்புமான்மியம் FXC நடராசா PP 68.1952 PP பக். 43
8. Mahavamsa - ed Willham Gaiger - ch 37
   Epigraphic India XV 246
9. திராவிடக் கட்டிடக் கலை Dr. இந்திரபாலா.
10. மட்டக்களப்பு மான்மியம் FXC நடராசா மட்டக்களப்பு 1952 பக் - 50.
11. மாகோன் வரலாறு - க. தங்கேஸ்வரி - மட்டக்களப்பு.
    குளக்கோட்டன் தரிசனம் க. தங்கேஸ்வரி - மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 ஜனவரி 6, 7, 8, 9

இருபதாம் நூற்றாண்டு தமிழ் ஒரு பன்னாட்டு மொழியாக, செம்மொழியாக, நவீன மொழியாகச் செழுமையுற்று நிற்பதை உலகிற்குப் பிரகடனப் படுத்திய, உறுதிசெய்த நூற்றாண்டு.

பெருவாரியான தமிழ் மக்களை உலகின் எட்டுத்திக்கிலும் புலம் பெயர்ந்து வாழச் செய்ததும், தமிழன் நவீன எழுத்துக்கும், ஆய்வு, திறனாய்வு, இதழியல், ஊடகவியல், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகளில் அதன் வளர்ச்சிக்கும், பெருமைக்கும் வித்திட்டு நீர்பாய்ச்சி செழுமையுறச் செய்த நூற்றாண்டும் இந்த இருபதாம் நூற்றாண்டே.

அவைகளைத் தொகுத்தும், கணித்தும் காணவிழையும் ஒரு முயற்சியே இந்த சர்வதேச எழுத்தாளர் மாநாடு.

இலக்கியம் எங்களிடம் உயிர்ப்புடன் இருக்கும் வரை அது எல்லாவிதமான அரசியல் கேள்விகளுக்கும் முகம் கொடுக்கும். தேசிய அளவிலும் உலக அளவிலும் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் அங்கீகாரம் தேடும் இந்த முயற்சி ஒரு செயற்பாட்டின் ஆரம்பம் மட்டுமே.

செயற்பாடு என்பது நிச்சயமாக வெற்றியல்ல. ACTIVITY IS NOT SUCCESS வெற்றியை நோக்கி இட்டுச் செல்லுகின்ற ஒரு முயற்சியே.

சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாடு என்னும் இம்முயற்சி ஏறத்தாழ ஒரு வருடத்துக்கு முன்பே - 2009 ஏப்ரல் அளவில் முன்னெடுக்கப்பட்ட ஒரு திட்டம். இப்போது தான் கைகூடியுள்ளது.

திடீரென இம்மாநாட்டுக்கு ஒரு அகில உலகப் பிரசித்தமும் சித்தித்துவிட்டது. அதற்கான சகல தரப்பினரும் பாராட்டுதலுக்குரியவர்களே.

2011 ஜனவரி 6, 7, 8, 9 ஆகிய தினங்களில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் விழா கொழும்பில், கொழும்புத் தமிழ்ச் சங்கம் மற்றும் இராமகிருஷ்ணமிஷன், மண்டபங்களில் நடைபெறுகின்றன.

1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குப் பிறகு இலங்கையில் நடக்கும் ஒரு சர்வதேச எழுத்தாளர் மாநாடு இது என்பது குறிப்பிடக் கூடியது.

ஈழத் தமிழர்கள் இருட்டுக்குள் தள்ளப்பட்டுக் கிடக்கும் ஒரு காலகட்டத்தில் ஈழத்தில் இம்மாநாடு நடைபெறுகின்றது என்பது தான் அதன் முக்கியத்துவம். நமது எதிர்காலம் மீதான பார்வைகள், விசாரணைகள், அறிவியல் ரீதியான சிந்தனைகளுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த அறிவியல் சிந்தனைக்கான களங்களை விரிவாக்கம் செய்வதற்கான நோக்கமும் இந்த மாநாட்டின் குறிக்கோள்களில் முக்கியமானது.

அனைத்துத் தமிழ் பேசும் மக்களது ஒன்றுபட்ட செயற்பாட்டுக்கான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த விழைவதும் இந்த சர்வதேச எழுத்தாளர் மாநாட்டின் இன்னொரு நோக்கம்.

அதன் சரி பிழைகளை, வெற்றி தோல்விகளை காலம் நிர்ணயிக்கும்.

எந்த அரசின் ஆதரவும் இன்றி உலகத் தமிழ் சமுகத்தின் உதவியை மட்டுமே கொண்டு இந்த மாநாடு திகழ்கிறது என்று 2000 ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற 'தமிழ்இனி' மாநாட்டின் அமைப்பாளர்கள் தாங்கள் வெளியிட்ட 1000 பக்கங்கள் கொண்ட பெரிய மாநாட்டில் வாசிக்கப்பட்ட 100க்கும் மேலான ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய மாநாட்டு மலரின் பின் அட்டையில் கொட்டை எழுத்தில் பதித்துள்ளனர்.

எல்லா மாநாடுகளுக்குமே இப்படி ஒரு புரளி கிளப்பப்படுவது உண்டுதான்!

இந்த சர்வதேச எழுத்தாளர் மாநாட்டுக்கும் அப்படியான புரளிகள் கிளப்பப்பட்டன தான். என்றாலும் அவைகள் வெறும் புரளிகள் மட்டுமே. இந்த மாநாட்டின் முதல் நாள் அரங்கு வண.சேவியர் எஸ். தனிநாயகம் அடிகளார் பெயரில் அமைகின்றது.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்றதுமே நம் மனதில் எழும் முதற்பெயர் தனிநாயகம் அடிகளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடையதுதான். அண்மையில் கோவையில் நடந்தேறிய உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் அடிகளாரின் பெயர் ஏனோ மறைக்கப்பட்டு விட்டது. கலைஞர் கருணாநிதிக்கும் சர்வதேச தமிழாராய்ச்சி மன்றத்தினருக்கும் என்ன தகாரறோ தெரியவில்லை.

ஈழத்து இலக்கியம், உலகத் தமிழ் இலக்கியம், சிறுவர் இலக்கியம், சிற்றிதழ்கள், மொழிபெயர்ப்பு, நிகழ்த்து கலைகள், செவ்விதாக்கம், பெண்ணியம், இணையமும் வலைப் பதிவுகளும், ஊடகவியல் உட்பட பல கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

ஆரம்ப நாள் அரங்கு தனிநாயகம் அடிகள் பெயரில் அமைந்துள்ளதைப் போலவே இறுதிநாள் கலை நிகழ்ச்சிகள் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் அரங்கில் நடைபெறுகின்றன.

கோ.நடேசய்யர், பேராசிரியர் சு.வித்தியானந்தன், இலங்கையர் கோன் , சுவாமி விபுலானந்தர், ஆறுமுக நாவலர், சோமசுந்தரப்புலவர், வரதர், எஸ்.டி. சிவநாயகம், அருள் வாக்கி அப்துல் காதிருப்புலவர், சித்தி லெவ்வை, மங்களநாயகம் தம்பையா ஆகியோரைக் கௌரவப்படுத்தும் வண்ணம் கருத்தரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

எதிர்கால இளம் இலக்கியப் பரம்பரையினருக்கு ஒரு ஊக்குவிப்பாகவும், உந்துசக்தியாகவும் இலக்கியத் தகவல்களறியும் களமாகவும் இவ்வரங்க மேடைகள் அமைகின்றன.

செவ்விதாக்கம் என்பது ஒரு கலை. படைப்பாளியை வழிநடத்துவதோ - படைப்பைச் சீர்செய்வதோ அல்ல. படைப்பே முதல். படைப்பவனே முதல்வன் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள் நாங்கள். இதற்கான வாய்ப்பை, செவ்விதாக்கம் பற்றியதான ஒரு கருதரங்கிற்கான வாய்ப்பை முதல் முறையாக ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது இந்த சர்வதேச எழுத்தாளர் மாநாடு. தமிழில் சிறுகதை தோன்றியபோது அதற்கும் ஏகப்பட்ட எதிர்ப்புக்கள் இருந்தன தான். எதிர் வினைகள் நடந்தேறின தான். விமர்சனத்துறைக்கும் அப்படியே. புதுக் கவிதைத்துறைக்கும் அப்படியே.

அவைகள் எல்லாம் இன்று அசைக்க முடியாத தனித்தனித்துறைகளாக செழுமையுடன் வளர்ந்து நிற்கின்றன. செவ்விதாக்கமும் ஒரு மேல் நாட்டுக் கலைதான். தமிழுக்கு கொண்டு வந்து பார்ப்போமே.

முல்க்ராஜ் ஆனந்தின் **"UNTOUCHABLES"** உலக பிரசித்தி பெற்ற நாவல். இந்த நாவல் பிறந்த கதை பற்றி முல்க்ராஜ் இப்படிக் குறிக்கின்றார்.

இது தீண்டத் தகாதவர்கள் பற்றிய நாவல் என்பதால் அப்போது ஹரிஜனர்கள் பற்றிக் கூடுதலாகப் பேசிய, எழுதிய காந்திஜியிடம் இதைக் காட்டி அபிப்பிராயம் கேட்க வேண்டும் என எண்ணினேன். முந்நூறுபக்கங்களுக்கு மேலான இந்த நாவலுடன் மூன்றுவாரம் அவருடன் பேசி, கலந்துரையாடி, அபிப்பிராயம் பெற்றுத் திரும்பிச் சென்றேன். 150 பக்கங்களுடன் நாவல் வெளிவந்தது என்கின்றார்.

இதுதான் செவ்விதாக்கம். ஒரு படைப்பு நூலாக வெளிவரும் முன்னர் அப்படைப்புப் பற்றிய ஒரு கலந்துரையாடல் கருத்துக் கோரல்.

இந்த மாநாட்டில் முக்கியத்துவம் பெறும் இன்னொரு அரங்கு மொழிபெயர்ப்பு அரங்கு. மொழிபெயர்ப்புத்துறையின் சவால்கள், சங்கடங்கள் பற்றி ஆராயப்படும் இந்த அரங்கின் போது மொழிபெயர்ப்பு நூல்களின் கண்காட்சி ஒன்றும் இடம் பெறுகின்றது.

இந்த அரங்கின் முக்கிய நிகழ்வாக ஒரு முன்னோடி நிகழ்வாக **BEING ALIVE** என்னும் அவுஸ்திரேலியத் தமிழ்ச் சிறுகதையாளர்களின் தமிழ்ச் சிறுகதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பதினைந்து தமிழ் எழுத்தாளர்களின் இச்சிறுகதைகள், கனடாவில் வாழும் சியாமளா நவரட்ணம் அவுஸ்திரேலியாவில் வாழும் நவீனன் ராஜதுரை ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

நான் ஏற்கனவே கூறியதுபோல் இம்மாநாட்டின் வெற்றி தோல்விகளை காலம் நிர்ணயிக்கும் என்பதுடன் எதிர்வரும் காலங்களில் சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாடு வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு இடங்களில் நடைபெறுவதற்கான முன்னெடுப்புகளும், அத்திவாரங்களும் இடப்பட வேண்டும். அதற்கான அனைத்துலகத் தமிழ் எழுத்தாளர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவினையும் இவ்வமைப்பு கோரிநிற்கின்றது.

**- தெளிவத்தை ஜோசப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# குடாநாட்டு மாட்டு வண்டிச் சவாரி

காலவரையறை கணக்கிட முடியாத காலத்தில் இருந்தே கிராமிய வீர விளையாட்டுக்களில் உன்னதம் ஆனது மிகப் பிரபல்யம் வாய்ந்தது வண்டிச் சவாரியாகும். இதில் போட்டியும் உண்டு. 1967- 1968 வரை பிரமுகர்கள் சொந்தக் கூடாரம் அமைத்த மாட்டுவட்டியிலேயே பிரயாணம் மேற்கொண்டனர்.

1955 ஆம் ஆண்டு வரை குதிரை வண்டி உபயோகமும் தெல்லிப்பழை, புத்தூர், பலாலி, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் இருந்தது.

1930 இல் இருந்து மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி உச்சம் பெற்றிருந்தது.

இன்றும் கந்தரோடை, அளவ்வை ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன. அக்காலத்து வீரகேசரியை விரித்தால், பிரித்துப் பார்ப்பது சவாரித் தம்பரின் நாட்டு நடப்புச் செய்தி தான். அதில் நெட்டையர், குட்டையர், என இரு பாத்திரங்கள். நெட்டையரின் நோஞ்சான் உடம்பையும் பானை வயிற்றையும், குட்டையரின் அண்ணாந்த ஆவல் பார்வையையும் பார்த்தால் போதும். வயிறு வலிக்கச் சிரிக்கலாம்.

மாட்டுவண்டி பழைய போக்குவரத்துச் சாதனமாகும்.. இப்படிச் சொல்லும் போது ஒன்றையொன்று விலத்திஓடும் தன்மையால் வண்டிச் சவாரி விளையாட்டு குடாநாட்டில் மிகப் பிரபலமானது. தென் தமிழ் நாட்டில் இன்றும் உன்னதபோட்டியாய் மாட்டு வண்டிச் சவாரி விளங்குகின்றது.

**பராமரிப்பு**

போட்டிக்குரிய காளை தொழுவத்தில் கட்டப்படுவதில்லை. தனியாக பெரிய மண் அணைகட்டி , நடுவில் பெரிய குடில் அமைத்த தொட்டிலில் கட்டுவர். முன் கால்கள் இரண்டும் உயரத்தில் இருக்க அமைத்து உணவு பரிமாறுவர். ஊறல், பச்சை அரிசி, கஞ்சி, உழுந்து பயறு, எள்ளு, கடலை, பச்சிலை ஆகியவற்றை உணவாக அளிப்பர். மற்றும் சுத்தமான தவிட்டினை நீரில் கரைத்து கொடுப்பதுமுண்டு. சிலர் ஓய்வு நாளில் மதுசாரம் கொடுப்பர். மாட்டை நீள் கயிற்றில் பிணைத்து மெது நிழல் வெளி இடங்களிலும் உலவவிடுவதுண்டு. தார் போடாத றோட்டுகளில் ஓட்டப் பயிற்சி அளிப்பதையும் காணமுடியும்.

விவசாயத்தொழில், வியாபாரம், திருமணபந்தம், போன்ற காரணங்களால் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை, மட்டுநகர் மற்றும் வன்னிபிரதேசத்திற்கு குடியேறியவர்கள் அங்கு இந்த மாட்டுச் சவாரிப் போட்டியை தொடர்ந்து நடத்தினர். அவ்விடங்களில் வண்டிச் சவாரி மிகப் பிரபல்யம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனது. குதிரைப் பந்தயத்தில் பந்தயம் கட்டுவது போன்று இதிலும் ரசிகர்கள் உற்சாகமாகப் பந்தயம் கட்டுவர். இதன் விளைவாக சில வேளைகளில் கைகலப்பு, கொலை நிகழ்ந்ததும் உண்டு. எதிர்பார்த்த காளைகள் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக முன்னரே இரகசியமாக அதன் சொந்தக்காரருக்கும் உதவுவர்.

அறுவடைக்காலம், பொங்கல் காலம், ஆகியவற்றின் போது மட்டுநகர், திருகோணமலையில் வண்டிச் சவாரி நடைபெற்றதாம். இது தற்போது குறைந்து விட்டது. வன்னியில் மீண்டும் தொடங்குகிறது. செட்டிக்குளம், நெடுங்கேணி பிரதேசங்களில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் பிரசித்தம், தர்மலிங்கம், சோமு, சீவரத்தினம் ஆகியோர் இவ்விடத்தில் பிரபலமானவர்கள்.

சாவகச்சேரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நவரத்தினம் அவர்கள் தலைப்பாகை கட்டி பல தடவைகள் கொடி அசைத்து மாட்டு வண்டிச் சவாரியை ஆரம்பித்து வைத்தார்கள். கொடிகாமம் கதிரேசு, சங்கத்தானை விதானையார், மட்டுவில் சண்முகம், சுன்னாகம் இளையதம்பி போன்றவர்கள் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் அங்கு பிரபல்யம் பெற்றவர்கள். ஒவ்வொரு பொங்கலிலும் காளைகளுக்கு பூசை செய்யும் வழக்கமும் உண்டு.

வண்டிச் சவாரி கீழ், மத்தி, மேல். என மூன்று பிரிவுகளாக நடைபெறும். ஒற்றைத் திருக்கல் வண்டி தனியானது. மூன்று பிரிவு இரட்டைமாட்டு வண்டிச் சவாரிப்போட்டியைப் பார்த்தால், பென்கர் என்ற ஆங்கிலத் திரைப்படத்தின் குதிரை வண்டிப் போட்டி ஈடாகமுடியாது.

இதற்கென்றே இளங்காளைகளைத் தயார் செய்வர். இதில் பழக்கப்பட்டவர்களுக்கு அதன் அங்க இலட்சணங்கள் நன்கு விளங்கும். அம்மாடுகளின் சுழி, நிறம், கால்கள் ஆகியனவற்றை அறிந்தே வாங்கி வளர்ப்பர், செங்காரை வெள்ளையன், வெள்ளைக் கறுப்பன், நரையன், வீரன், சூரன் என்று நிறங்களை வைத்தே பெயர் சூட்டி வளர்ப்பர்.

வீட்டு அம்மா உணவு ஊட்டும் போது 'எழும்படா வீரா'' என்றால் எழும்பி நிற்கும். ஆரம்பத்தில் வயல் வெளிகளில் ஓட விட்டுப் பழக்குவர். நாணயம் பூட்டியபின் வண்டியில் பூட்டிப் பழக்கி, கீழ்ப் பிரிவில் இருந்து மேற்பிரிவு வரை இந்த சோடி 'போட்டிக்கு ஓடுகிறேன்' என்பதை நன்கு புரிந்து ஒரு கை பார்ப்போம் என்று, போட்டி நடைபெறும்.

நேர் வீதிக்கு வந்ததும் முன் கால்களைத் தயார்ப்படுத்தி ஆயத்தமாகும். தொல்காப்பியரின் உயிர்ப் பகுப்பின்படி மாட்டுக்கு ஐந்தறிவுதான். ஆனால் ஆற்றல் படைத்த ஓட்டுனன் 'டேய் வீரா? சூரா? விடாதையுங்கோ, பாயுங்கடா' என்று ஒரு சத்தம் கொடுக்க, பாய்ந்து வெற்றிக் கோட்டைத் தாண்டும்.

கன கச்சிதமான மண்ணிற வர்ணம் தீட்டிய வண்டியை எல்லாம் சரிபார்த்து, நாக படத்தில் நுகம் பூட்டி எசமான் நாணயக் கயிற்றைப் பிடிக்க, பக்கத்தில் இருப்பவர்கள் நுனியில் ஊசி பதித்து மூன்றரை அடி துவரத் தடியை ஓங்க, நடுவர் கொடி அசைத்ததும் இரணை மாடுகளும் புரிந்து



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொண்டு புழுதி பறக்கப் பாயும். விசேஷம் என்னவெனில் போட்டியில் முன் வண்டியை முந்திக் கொண்டு கடைக் கண்ணால் பின் வண்டியை ஒரு பார்வை பார்த்துப் பாயுமே அது கண்கொள்ளாக் காட்சி!

காளைகள் கடினப்பட்டால், துவரந்தடி ஊசி பின் பக்கம், வண்டியில் இருக்கும் உதவியாளரால் குத்தப்படும், அவசியம் ஏற்பட்டால் வாலையும் கடிப்பர். சவாரி வண்டியில் இருவரே இருப்பர். பாதையின் இரு மருங்கிலும் பார்வையாளர்கள் நிறைந்திருப்பர். காளைகள் தறிகெட்டு ஓடி ஜனங்களுக்குள் புகுந்து விபரீதங்களும் இறப்புகளும் நடப்பது வழமை. பாதையை விட்டோடும் வண்டியைக் கண்டால் பார்வையாளர்கள் தலை தெறிக்க நாலா பக்கமும் சிதறி ஓடுவர். இதிலும் விபத்து உண்டு. போட்டி காரணமாக கைகலப்பு, கொலையும் இடம்பெறுவது உண்டு.

வெற்றிக்குப் பரிசாக நிறைகுடம், குத்துவிளக்கு, பணம், சான்றிதழ் எல்லாம் பெறுபேறு பார்த்து வழங்கி மகிழ்வார். உறவினர், நண்பர் விருந்து மற்றும் பரிசும் உண்டு. நீண்ட காலப் பயிற்சியில் இருக்கும் காளைகள் தங்கள் எசமானரைக் கைவிடா. போட்டியில் தோற்ற காளைகள் 2, 3 நாட்கள் சோர்ந் திருக்கும் கிறவல் வீதிகள் உள்ள அளவ்வை, கிராயிட்டி அளுக்கை, கந்தரோடை, புத்தூர், நீர்வேலி, வட்டு ஆகிய இடங்கள் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிக்கு பிரசித்தம். சுன்னாகம் ஐயக்கோன், இளையதம்பி ஐயர், அளவை சின்னத்தம்பி, கலையைச்சந்தி இளையதம்பி ஆகியோர் இதில் பிரதானமானவர்கள். வருடப் பிறப்புடன் போட்டி தொடங்கி வைகாசி வரை தொடரும், முன்பு யாழ் முற்ற வெளியில் மாட்டுச் சவாரிப் போட்டி மிகப் பிரசித்தம். ஏராளமான வண்டிகள் வரும். நடுவர்களும், இரகசியமாக இடையிடையே கண்காணிப்பாளர்களைவைத்து ஏதாவது ஏமாற்று குழறுபடி நடைபெற்றதா என்று அறிந்தே தீர்ப்பு வழங்குவர். போட்டியில் சில குள்ளர், கள்ள வேலையும் செய்வர். பார்வையாளர் மத்தியில் இருந்து வெருட்டுவர்.

இன்றும் தவற விடாது மிக உன்னதமாக நடைபெறும் இம்மாட்டுச் சவாரிப் இப்போட்டிக்கென்றே ஒரு சாரார் கிராமங்களில் பணம் செலவு செய்து கண்ணும் கருத்துமாக இருந்து தமிழரின், வீர விளையாட்டை தீரத்துடன் செய்து வருவது பண்பாட்டின் சிறப்பே. உள்ளக விளையாட்டான தாச்சி (கிளித்தட்டு) கிட்டிப்புள், கெற்றப்போல், கெந்தல், வட்டம் சுற்றி ஓடியடித்தல் ஆகியன நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. சவாரி வண்டியில் பூட்டப்படும் காளைகளின் நடையே தனி அழகு. கயப்பாக்கம் சோம சுந்தரம் செட்டியார் இதை 'விடை நடை' என்பார். நாட்டை இராகத்தில் அமைந்த சம் பந்தருடைய முதற்பண் 'தோடுடைய செவியன்' என்ற பாடலில் தாள நடை, விடையின் துள்ளல் நடை என விளக்குவர். வண் டிச் சவாரி தொடராட்டும் பார்த்து மகிழ்வோம்

- கலைமாமணி பொன். தெய்வேந்திரன்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சமூக பண்பாட்டு மாற்றங்களிடையே
# கண்ணகியின் அடையாளம்

- பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்

அடையாளம் தொடர்பான சமூக / மானிடவியல் ஆர்வமானது குறியீட்டு மானிடவியலாளரான கிளிபட் கீட்ஸ் (Clifford Geertz) போன்றோர் தொடக்கம் இன்றைய பின்னை நவீனத்துவச் சிந்தனையாளர் வரை வெளிப்படும். பண்பாட்டைக் குறியீடுகளின் தொகுதியாகக் காணும் அதே வேளையில் சமூக மாற்றங்களிடை இக்குறியீடுகள் காணும் மாற்றங்களும் இவர்களின் ஆய்வு ஆர்வத்திற்குள்ளாகும். இன்றைய பண்பாட்டியல், சமயத்தின் சமூகவியல்சார் ஆய்வுகள் குவிமையமாக உணரப்படும். இப்புலம் சார்ந்ததாகவே இவ்வாய்வும் அமைகின்றது.

சமூகப் பண்பாட்டு மாற்றங்களிடை கண்ணகியின் அடையாளம் என்பது ஆய்வுப்பொருள்.

சிலப்பதிகாரம் என்பது ஓர் அடையாளமாக, குறியீடாகத் தமிழர் பாரம்பரியத்தில் பதிவு பெறும் இலக்கியமாகும். பண்டைய பெருமையினை மீள்உருவாக்கம் செய்யும் தொல்லியல், பண்பாட்டியல் ஆய்வுகள் இலக்கியச் செழுமைக்கும், நாகரீகச் சிறப்பிற்கும் களமாக அதனைக் காண்கின்றனர். சிலப்பதிகார மேன்மை என்பது வெறுமனே அதன் இலக்கிய வடிவம், இலக்கண அமைதி சார்ந்தது மட்டுமல்ல, அதன் பாத்திரவார்ப்புகள் சார்ந்ததும்தான். அந்த வகையில் சிலம்பின் மையப்பாத்திரம் கண்ணகி, காவியத்தின் பெயரில் கண்ணகி இல்லாத போதும் கண்ணகியின் சிலம்புதான்.



பல தொன்மைக் குறியீடுகளின் வாழ்வும், தொடர்ச்சியும் அதன் பண்பாட்டுப்புலத்தின் கைகளில் தங்கியுள்ளது. சிலம்பின் கண்ணகி ஒரு வழிபாடு தெய்வமுமாகிய நிலையில் இலக்கிய வாழ்வு இசைவுக்கான தளம் வாய்ப்பாகின்றது.

ஒரு நீண்ட காலத்தையும் தாண்டி கண்ணகியின் இருப்பும் தொடர்ச்சியும் நீள்வது உணர்வுபூர்வமான சடங்காசாரங்களில் இருந்து கண்ணகியா? மாதவியா? பட்டிமன்ற விவாதங்கள் வரை இந்த நீட்சியை உணர முடியும். இந்த ஆய்வும் இந்த நீட்சியின் ஒரு பகுதி தான்

சிலம்பின் இந்த தொடர்ச்சி, இந்த அடையாளத்தின் நிலைபேற்றின் சாத்தியம் எவ்வாறானது.

இந்த சிலப்பதிகார நாயகியின் இருப்பும் அடையாளமும் நிலைபேறான, எல்லா இடங்களிலும் சாரப்படுத்தத்தக்கதாக இருந்ததா? இருக்கின்றதா?

காலவெளியில் இந்த குறியீட்டமர்வு (Symbolism) கண்ட பண்பாட்டு நெருக்கடிகள், மாற்றங்கள் எத்தகையன.

ஒரு சமூக மானிடவியலின் மாணவனாக எனக்குள் எழுந்த இந்த வினாக்கள் என் குருதேவரான பேராசிரியர் கணநாத் ஒபயசேகர அவர்களுடனான அவர் பத்தினி ஆய்வுக் களங்களிடை முளைவிடும். கூடவே அவருடனான அனுபவப் பகிர்வுகளிடையே துளிர்விடும். இந்த அனுபவத் தளத்திடை பின்னர் யாழ்ப்பாணத்தில் முதன்மையுடன் எழுச்சிபெற்ற துர்க்கையம்மன் பற்றிய என் ஆய்வு களங்களிடை (2002) நான் சந்தித்த சமயத்தின் சமூகவியல்சார் அனுபவங்கள் அதன் தொடர்ச்சியினால் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு கிராமப்புலங்களிடை அம்மன் வழிபாட்டின் சமூக, மானிடவியலைத் தேடிய என் பயணங்கள் தான் இந்த ஆய்வின் அடிப்படைகள்.

கூடவே என் நாட்டாரியல் ஆய்வு ஆர்வ விளைவுகளாய், இந்த புலங்களிடை சேகரித்த, சந்தித்த சிலப்பதிகாரத்தை பேசும் இலக்கியங்களில் கண்ணகியைப் பாடும் காவியங்கள் எல்லாமும் தரவு மூலங்களாகும்.

இன்னும் எம் பண்பாட்டுப்புல சமஸ்கிருதமயமாக்கல் தொடர்பான என் கள ஆய்வுத் தரவுகளும் - கள விசாரணைகள், நேர்காணல்களும் இந்த ஆய்வின் ஆதாரங்களாகும்.

கண்ணகி பற்றிய ஆய்வு என்பது, தாய்த் தெய்வ வழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய ஆய்வாக அமைதல் தவிர்க்கமுடியாதது. சமூக மானிடவியல் புலங்களிடையே Robert Briffault & R. Taylor (1927 ) Erich Newman (1963) போன்றோர் ஆய்வுகளைத் தொடர்ந்து சில தசாப்த மௌனம் / மந்தம் வெளியுண்டு. இந்த மந்தம் கலைந்து மீளவும் ஆய்வுகள் தலைப்பட்டபோது மானிடவியலோடு, சமய ஆய்வுகள் (Religious Studies) பெண்ணிய ஆய்வுகள் (Feminist studies) வழி இது பற்றிய புதிய ஆய்வு வெளிச்சங்கள் எம்மைச் சேர்வன.

இந்த வகையில் பேராசிரியர் கணநாத் ஒபயசேகர அவர்களின் The cult of the Goddess Pattini (1984) James J. Perston இன் Mother Worship : Theme and Variation (1982) Cult of the Goddess (1985) என்பன குறிப்பிடத்தக்கன.

சமயம் பற்றிய மானிடவியல் ஆய்வுகள் , முழுதளாவியம் (Anthropological Holism) எனும் தளத்தில் நிகழும் போது தான் முழுமைபெறுவன.

1. கருத்தியல் தளம் (ideological)

2. அமைப்பு செயற்பாட்டியல் தளம் (Structural Functional) வசதிக்கான இந்தப் பிரிப்பு, பகுப்புக்கள் துணையானபோது இந்த இரண்டிற்குமிடையிலான இடைவினைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியன.

சமய மரபுகள் / வழிபாட்டு மரபுகள் என்பன பல்வேறு நம்பிக்கைகள் அவற்றினைப் பேணுவதற்கான ஐதீகங்கள் சடங்காசாரங்கள் - இவற்றினை நிலைபேறாக்கும் கருத்தியல்கள் எனும் இசைவுச் செயற்பாடுகளின் வழிதான் நிலைபெறுவன. இசைவு இயலாதபோது நிலைமாறுவன.

காவிய உருவாக்களின் பல்வேறு வழக்காறுகளும், இலக்கிய மரபுகளும் சங்கமமாவதுண்டு. வரலாற்று உண்மைகளும், ஐதீகங்களும் இசைந்து சிலப்பதிகார மூலங்கள் பற்றி தேடலும் அதற்கு முன்னைய கால நாட்டார் வழக்குகள், பிற புலங்களுக்கு எமை அழைத்துச் செல்வது தவிர்க்க முடியாதது. அவ்வாறு சிலப்பதிகாரத்தின் பின்னையதான பல்வேறு நாட்டாரிலக்கிய வழக்காறுகளும், நிலவும் கண்ணகிசார் வழிபாட்டு மரபுகளின் பரப்பெல்லை வட - தென் பாரதப் பரப்புக்களைத் தழுவுதல் தொடங்கி, இலங்கையின் சிங்கள - தமிழ்ப் பண்பாட்டுப் புலங்கள் வரை விரிவன. இந்த நடைமுறை மரபுகளையும் மேலே தரப்பட்ட பரந்த இலக்கிய எல்லைகளையும் உள்ளடக்கிய பகுப்பாய்வு ஒன்றின் மூலம்தான் கண்ணகியின் அடையாள எல்லைகளை இனங்காட்ட முடியும்.

சிலப்பதிகார இந்துப் பண்பாட்டுப் புலங்களில் வழக்கிலுள்ள கோவலன் கதை, சிலம்பு கூறல், கண்ணகி வழக்குரை மற்றும் பல்வேறு தோத்திரங்கள், காவியங்கள், சிங்களப் பண்பாட்டின் பத்தினி கதா, பத்தினி தெவியோ போன்ற பல நூல்கள் மூலங்களாகின்றன.

பருநிலையில் இந்த இலக்கிய / நடைமுறைகள் தொடர்பான பதிவுகளின் பகுப்பாய்வுகளிடை கண்ணகியின் இருப்பு



எல்லைகளை இனம் காட்டும் இந்த ஆய்வு, நுண்நிலையில் குறிப்பான சில பண்பாட்டு புலங்களை மையமாகக் கொண்டு இலங்கையில் அதன் இருப்பின் / எதிர்கொண்ட நெருக்கடிகளின் சமூகவியலை வெளிக்காட்டும்.

கண்ணகியின் மூலம் கண்ணகி கதையின் மூல ஓலைகள் பற்றிய தேடல் கண்ணகி சார்ந்த இலக்கியங்களில் பேசப்படும் சில நாட்டார் வழக்கு சித்திரிப்புகளுக்கு எம்மை இட்டுச் செல்வது தவிர்க்க முடியாதது.

நற்றிணை 219 ஆம் பாடலில் வரும் "முலை குறைந்த திருமாவுண்ணி" கண்ணகியாக இருக்கலாம் என்ற ஆய்வாளரின் கருத்து எம் கவனத்திற்குரியதாகும்.

இந்த "ஒற்றை முலைச்சி" என்றே கேரளத்து மலையன் மாரிடை ஒரு தெய்வம் வழக்கில் உள்ளது. இந்த ஒற்றை முலைச்சியும் திருமாவுண்ணியும் ஒருவராக அல்லது ஒத்த கதை மாந்தராக இருக்கலாம்.

வேங்கை மரத்தடியில் கண்ணகி தெய்வமானதாக சிலம்பு கூறும் முன்னை இனக்குழு வாழ்வில், தெய்வ வழிபாட்டின் தடைகளிடை தான் கண்ணகியின் தெய்வமாதலை நாம் இனம் காணமுடியும்.

* நற்றிணையில் வரும் வேங்கை மரத்தடியில் நின்ற திருமாவுண்ணி

* சிலப்பதிகாரத்தில் வேங்கை மரத்தடியில் நின்ற கண்ணகி தொங்க மரத்தடியில் நின்ற இயக்கி

* மலையர்கள் வணங்கும் பாலை மரத்தடியில் நிற்கும் ஒற்றை முலைச்சி

ஆகிய இந்த மரத்தடி தெய்வங்கள் (Free Goddesses) யாவுமே பழங்கற்காலத்து தாய்த் தெய்வ வழிபாட்டின் வெளிப்பாடாகக் கொள்ளத்தக்கன.

மலையாளர்களின் நீலி வழிபாடு கண்ணகியின் முற்பிறப்புப் பற்றிய சிலம்பு கூறும் நீலியுடன் இணைத்து நோக்கப்படக் கூடியது.

சிலப்பதிகார வரிக்கூத்துக்களில் ஒற்றை முலைச்சி பற்றிய குறிப்புகளைக் காணலாம். கண்ணகி தெய்வமானதை மலைவாணர்தான் செங்குட்டுவனுக்கு அறிவித்ததாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காணமுடிகிறது. பழங்குடி வழிபாடான ஒற்றை முலைச்சி வழிபாட்டுடன் கண்ணகி வழிபாட்டு அடையாளப் படுத்தப்பட்டதாகக் கொள்ளமுடியும்.

தாய்த் தெய்வங்கள் தொடர்பாகப் பின்னாலே பல்வேறு ஐதீகங்களும் மரபுகளும் கண்ணகியுடன் இசைவாக்கம் கொள்வதும், பிற தாய் தெய்வங்களுடன் கண்ணகி இயைபாக்கம் காண்பதும் வரலாறு ஆகும்.

இந்திய பண்பாட்டு புலத்தில் வடமலையாளத்து வழிபாடு மரபுகளிடை பகவதியாக கண்ணகியின் அடையாளம் நிலைபெறக் காணலாம். இங்கு இன்றும் வழக்கில் உள்ள மந்திரப் பாடல்களிடையேயும் பகவதிதோத்திரங்களிடையேயும் கண்ணகிக்கான அடையாளம் உறுதிப்படுத்தப்படும்.

கேரளத்தில் விஷாரிகாவில் தமிழ் என அறியப்படாமலேயே பாடப்படும் பின்வரும் பாடலடிகள் கண்ணகையம்மனை பகவதியம்மனாக விழித்து நிற்பதைக் காணலாம்.

ஆதி முதல் காவேரிப் பூம்பட்டினத்து
ஆயிரவூர் வங்கிசத்தில்
அரிய கண்ணகை அம்மன் ஆகவேதான்
பிறந்து அதிரூபமான பொழுது
தீதிலா கோவிலருடன் பாரியாளாகவும்
சிறிது காலம் சென்றபின்
திங்கள் முகமாய் வந்து தனிக்காக
மதுரையில் சிலம்பு கூறினாளில்



.......................................
நீதியரசு சென்றான பாண்டினாடெத்திநீ
நீறாயெரித்த சோதி
ஆதி காலத்திலும் மகிமையாய் நீவந்த
அதிசயமும் ஆரறிவாரோ!
ஆணைக்குளம் வளர் பகவதி அம்மையே
ஆனந்த மகமாயியே!

கண்ணகி பகவதியானதன் பின்புலத்தில் பௌத்தர்களின் தாய் தெய்வமான நாகதேவதை தாராதேவியின் செல்வாக்கினை ஜைனரின் பத்மாவதி ஆய்வில் இனங்காட்டுவர். (சாமி 1975) அடுத்த கட்டத்தில் நீலி-காளி, பகவதி, பழந்தமிழரின் கொற்றவை / துர்க்கை என்னும் தாய்த் தெய்வங்களோடு கண்ணகி அடையாளப்படுகின்றமையைக் காணலாம்.

எல்லா பெண் தெய்வங்களின் அம்சங்களும் பொருந்திய ஒருவராகக் கண்ணகையம்மன் வடிவம் பெற்றுக் கொண்டது. வல்லமை அதிகம் கொண்ட தெய்வமாக மதிப்பும் சேர்ந்தது.

இலங்கையில் கண்ணகி: இலங்கையில் கண்ணகி, தமிழரிடை கண்ணகியம்மாள் என்றும், சிங்களரிடை பத்தினி தெய்யோ என்றும் இருபெரும் இனத்துவக் குழுக்களின் வழிபாட்டு மரபுகளிலும் முதன்மை பெறுவாள்.

இரண்டும் தத்தம் நோக்கில் தமது பண்பாட்டு அமைவுக்கு ஏற்ப கண்ணகியை வடிவமைக்கும். இங்கு நிகழ்ந்த சமூக மாற்ற அலைகளிடை பத்தினி / கண்ணகியின் நிலைப்பேறும் முக்கியத்துவம் பெறும். ஏற்ற இறக்கங்களைச் சந்திக்கும்.

'எத்திறத்தாலும், வரந்தரும் இவள் பத்தினிக் கடவுளாகும் எனக் கொண்டு விழாவொடு சாந்தி செய்ய, நாடுமலிய, மழை பெய்ய, நோயும் துன்பமும் நீங்கினர்' எனும் சிலப்பதிகாரத் தெய்வத் தன்மையே இலங்கை சூழலிலும் வியாபகமாகும். நுண்நிலையில் கொப்புளிப்பான், சின்ன முத்து, கண்நோய், வெப்பு நோய்களிலிருந்து எம்மை பாதுகாக்கவும் மழையை வேண்டியும் வழிபாடு நடக்கும்.

சிலப்பதிகார வஞ்சி காண்டம் பேசுவது போல,

அது கேட்டு கடல் சூழ் இலங்கைக் கயவாகு என்பான்
நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டம் முந்தறுத்து
ஆங்கு அரத்தை கெடுத்து வரந்தரும் இவளென
ஆடத்திங்களவையின் ஆங்கோர்
பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப
மழை வீற்றிருந்து வளம்பல பெருக்கிப்
பிழையா விளையுள் நாடாயிற்று

என ஆண்டுதோறும் கண்ணகி விழா எடுத்து இசைந்த கயவாகு மன்னன் ஆடிமாத கண்டி எசல (ஆடிப்பெரஹரா - (பிரகாரம் எனும் வட மொழி பதத்தின் இசைவு) ஊர்வலத்திருவிழா எனப் பொருள்படும். பத்தினி தெய்வத்துக்கு எடுக்கப்பட்ட இந்த விழாவில் முதல் பெரஹரா பத்தினிக்கானது. பின்னாளில் தான் புத்த தந்த முதன்மை வந்து சேர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த தேசத்தில் இந்துத் தமிழ் தெய்வமான கண்ணகிக்கு எப்படி முதன்மையென விருந்தினராக வந்த தாய்லாந்து பௌத்த பிக்குகளின் கேள்வியைத் தொடர்ந்து, பத்தினி பின்னுக்குத் தள்ளப்பட்டபோதும் தவிர்கமுடியாத அம்சமாக இன்று வரை தொடரக் காணலாம்.

சிங்கள பௌத்த மரபுடன் கண்ணகியை இசைவாக்கம் செய்யும் / அடையாளப்படுத்தும் நிலைமைகள், ஒரு புறத்து திட்டமிட்ட அரசியலாகவும், மறுபுறத்து மக்கள் சமய நம்பிக்கையாகவும் வெளிப்படக் காணலாம். பத்தினி தெய்வம் பற்றிய சிங்கள இலக்கியங்களிடையே இவற்றினைக் காணமுடியும். பத்தினி ஆணாகப் பிறந்து, அதன் வழி புத்தரின் நிலையை (Buddha – hood) அடைய விரும்புவதாக Pahan Gambura பாடல்கள் பேசும்.

பத்தினியைப் பௌத்த மரபின் எழு கிரியம்மாக்களில் ஒருவராகக் காண்பதும், பௌத்த பெண் தெய்வமான அமராவதியுடன் இணைத்து நோக்குவதும் உண்டு.

இந்த அடயாளப்படுத்தல்களுக்கு அப்பால் தனிச்சிங்கள தெய்வமாகவே அவளைக் கருதும் வழமைகளை நிலைநாட்டும் சந்தர்ப்பங்களையும் காண முடியும்.

பேராசிரியர் கணநாத் ஒபயசேகர அவர்களுடனான நேர்காணல் தரவாக கப்புராளை ஒருவரின் பின்வரும் கூற்று, இந்த வகையில் கவனத்திற்குரியதாகும்.

"பத்தினி ஒரு சிங்கள பௌத்ததெய்வம். சடங்கு இங்குதான் நடக்க வேண்டும். ஏனெனில் பௌத்தம் இந்தியாவில் செத்து விட்டது."

பேராசிரியர் கணநாத் அவர்கள் குறிப்பிடுவது போல சிங்கள தேசாபிமானத்தின் உச்சம், நவகமுவ பத்தினி மேற்பாடப்பட்ட Dalumura Pujava எனும் இலக்கியத்தில் பின்வருமாறு வெளிப்படும்.

"நவகமுவவில் வாழும் அழகிய பெண் தெய்வமே, உன்
வல்லமையால் தமிழ் கடவுளர்களைத் தண்டித்தவளே"

என "சிங்கள பௌத்த" அடையாளப்படுத்தல்களிடை கண்ணகியின் இருப்பு காக்கப்பட்டாலும், கண்ணகியின் சுய தமிழ் அடையாளம் எப்பொழுதுமே இந்த இருப்புக்கு அச்சுறுத்தலாகவே தொடர்ந்திட காணலாம். கூடவே வெப்பம் சார்ந்த நோய்களுடன் இணைத்து சிறப்பான கவனத்தைப்பெற்ற பத்தினியின் இடம், சுதந்திர இலங்கையின் சுகாதார வசதிகள் - வாய்ப்புகளிடை குறைந்து செல்வதும் தவிர்க்க முடியாததாகியது. (Obeyesekere – 1977)

தமிழ்ப் புலங்களைப் பொறுத்தவரையில், கண்ணகியின் இருப்பும் உயிர்ப்பும் சிங்களப் புலங்களைவிடவும் இன்றுவரை உயிர்ப்புடன் பேணப்படுதலைக் காணலாம். குறிப்பாக தென் தமிழ்த் தேசப்பரப்பான மட்டக்களப்பில் கண்ணகையம்மன் வழிபாட்டின் முக்கியத்துவம் முதன்மையானது. சிலப்பதிகார கண்ணகியின் பிறந்தகமான தமிழகத்தினை விட மட்டக்களப்பு பிரதேசத்துக் கண்ணகியின் உயிர்ப்பும், பரவலும் அதிகமானது.



அவ்வாறே ஈழத் தமிழரின் புவிசார் அடையாளப்படுத்தல்களுக்கு உகந்ததாக வடக்கு - கிழக்கு இணைந்த கதிர்காம யாத்திரையின் மைய ஸ்தானமான வன்னி நிலப்பரப்பின் கண்ணகி வழிபாட்டின் உயிர்ப்பும் உச்சமானது. இப்புலங்களின் வாழ்வியலோடு கண்ணகியம்மன் கோயில்களும் சடங்குகளும் இரண்டறக் கலந்துள்ளன.

புற அலைகள் அதிகளவு செல்வாக்குச் செலுத்த முடியாதபடி தனித்த சூழலிய அமைவும், அதன் வழி அதிகளவு மாற்றங்களைச் சந்திக்காத மரபுவழி கிராமிய அமைப்பும், விவசாய பொருளாதார உற்பத்திக் கட்டமைப்பும் இப்புலங்களில் கண்ணகையம்மனின் உயிர்ப்புக் குன்றாமையின் அடிப்படைகள் எனலாம்.

மாரியை அடக்கி வரு சக்தியை நிறுத்து
மங்களா தேவியைக் காவலாய் வைத்து
கைதவளை அன்று பெலியுண்ட பத்தினியையும்
காவலாய் நில் என்று கட்டளை புரிந்தாய்

என வன்னியில் கண்ணகியை நிறுவி குளம் தொட்டு வளம் பெருக்கிய குளக்கோட்டன் பற்றிய வரலாற்றுப் பதிவுகள் உணர்த்தும் சூழலும் தேவைகளும் இன்னமும் தொடர்வனவே.

நாவலரின் சமஸ்கிருதமயமாக்க அலைகளிடை, யாழ்ப்பாணத்தில் சில கண்ணகி அம்மன் கோயில்கள் அடையாளத்தினை இழந்ததுண்டு. செட்டிச்சியான சாதாரண பெண்ணுக்கு எப்படி கோயில் அமைக்க முடியும் என்ற தீவிர கேள்விகளிடை சில கோயில்களைப் பிறதாய்த் தெய்வங்களுடன் இசைவாக்கி பிழைக்க வைத்ததுமுண்டு. பல்வேறு தடைகள், மாற்ற முயற்சிகளையும் தாண்டி, சுட்டிபுரம், பூநகரி, புளியங்கூடல், சாவகச்சேரி, பன்றித்தலைச்சி, கோப்பாய், அச்செழு போன்ற இடங்களில் மீளவும் கண்ணகி உயிர்ப்புக் குன்றாமல் நிலைபெறுவதும் இங்கு கவனத்திற்குரியது.

ஈற்றில் கட்டப்பட்ட இரண்டு ஆலயங்களிலும் நிகழ்ந்த அடையாள மாற்ற முயற்சிகளை, பின்வரும் இரண்டு விடயக்கலை ஆய்வுகளும் தெளிவுபடுத்தும்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லெல்லாம் கதை சொல்லும் இராசராசபுரி




தமிழகத்திலுள்ள கோவில்களை வழிபாட்டுத் தலங்கள் என்று மட்டும் கூறிவிட முடியாது. அவை அந்நாட்டு மக்களின் பண்பாட்டை, கலையுணர்வை, சமூக ஒருங்கிணைப்பை பிரதிபலிக்கும் தளவாடிகளாக விளங்குகின்றன.

பண்டை நாளில் சமுதாயக் கூடங்களாகத் திகழ்ந்த கோயில்களில்தான் கலைவளர் பணிக்கூடங்கள் செயற்பட்டன. தமிழ்க் கலைகளைப் பொறுத்தவரை எந்தவொரு கவின் கலையும் அரசர்களின் அத்தாணி மண்டபத்திலோ, அந்தப்புறத்திலோ வளர்ச்சி பெறவில்லை. மாறாகக் கோயில்களில்தான் அவை பல நிலைகளில் வலம் வந்தன. கலைஞர்கள் மன்னர்களின் சேவகர்கள் அல்லர் என்பதையும் அவர்கள் கடவுளின் தொண்டர்கள் என்பதையும் ஊருக்கு செயல்முறையில் உணர்த்தும் வகையிலும் கோவில்கள் சமய வரையறைகளையும் கடந்து பண்பாட்டுக் கருவூலங்களாகத் திகழ்ந்தன.

## இராசராசபுரம் தாராசுரமானது

தஞ்சாவூர் மாவட்டத்தில், தஞ்சை - கும்பகோணம் வீதியில் கும்பகோணத்திற்கு சிறிது முன்பாகவே (மூன்று கிலோ மீற்றர் தூரம்) நகரத்தின் ஜன சந்தடியிலிருந்து ஒதுங்கி நிற்கும் ஊர் தாராசுரம். ஊரில் பட்டுப்புடவை உற்பத்தியில் ஈடுபடும் மக்கள் அதிகம் வாழ்வதால் வீதிகளில் பளபளக்கும் பட்டு நூல் காய்கிறது. இங்கு இரண்டாம் ராசராசனால் (கி.பி 1146 -1173) ஏறத்தாழ கி.பி. 1150 இல் கட்டப்பட்ட ஐராவதேஸ்வரர் கோயில் 'சிற்பிகளின் கனவு' என்று இன்றளவும் கருதப்படுமளவிற்கு சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது. இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பிறகு கி.பி.1150-இல் சோழ மண்டலத்தில் மாமன்னனாக முடிசூடியவன் இரண்டாம் இராசராசனாவான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பழையாறை, நந்திபுரம், இராசராசபுரம் என்றழைக்கப்பட்ட தாராசுரம், சுந்தரசோழர் காலத்தில் பழையாறை சோழர்களின் தலைநகராக விளங்கியது. சில தலைமுறைகளுக்குப் பிறகு இரண்டாம் இராசராசன் இந்நகரைப் புதுப்பித்து, விரிவாக்கம் செய்து, இராசராசபுரம் என தனது பெயரைச் சூட்டினார். காலப்போக்கில் இராசராசபுரம் மருவி தாராசுரம் என்று அழைக்கப்படலாயிற்று.

## சேக்கிழார் பெருமானும், ஒட்டக்கூத்தரும்

பெரிய புராணம் நூலினை யாத்த சேக்கிழாரும், தக்கயாகப் பரணி, மூவருலா ஆகிய நூல்களை யாத்த ஒட்டக்கூத்தரும் இரண்டாம் இராசராசசோழன் காலத்தில் வாழ்ந்தவர்களாவர். இந்நகரை ஒட்டக்கூத்தர் 'எண்டிசைத் தேவரும் புகுதும் இராசராசபுரி செம்பொன் மாட நிரை இராசராசபுரி' என்று போற்றுகின்றார். இத்திருக்கோயில் ஈசனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 'தக்கயாகப் பரணி' எனும் அருந்தமிழ்க் காப்பியம் படைக்கப்பட்டு, இக்கோயிலில்தான் மலர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சேக்கிழார் பெருமானும், ஒட்டக்கூத்தரும் வழிகாட்ட, சேக்கிழாரின் பெரியபுராண அடிப்படையில் வரலாற்றுச் சிற்பங்களும் தக்கயாகப்பரணி குறிப்பிடும் 'சாக்த நெறி'யும் இக்கோயிலின் சிற்ப அமைப்பு முறைகளில் பின்பற்றப்பட்டுள்ளன. திரும்புமிடமெல்லாம் புராணக் கதைகளையும் வரலாற்றுக் கதைகளையும் சிற்றுருவ சிற்பத் தொகுதிகளாகத் தாங்கி நிற்கும் இத்திருக்கோயில் ஓர் அரிய கற்றளியாகும்.

இந்தியத் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இந்த ஆலயம், 2004 ஆம் ஆண்டு யுனெஸ்கோவினால்



**அட்டைப்பட விளக்கம் :**
அட்டதிக்குப் பாலகர் (எண்திசைக் காவலர்) வகையைச் சேர்ந்த இச்சிற்பம் தாராசுரம் ஐராவதேஸ்வரர் ஆலயத்தில் காணப்படுகின்றது. 11 அடி உயரமான ஒரே கல்லினால் ஆன சிற்பமாக இது சிறப்புப் பெறுகின்றது. கற்சிற்ப வகையைச் சேர்ந்த இது அங்க அளவீடுகளில் எந்தவொரு இடத்திலும் குறைபாடு இல்லை என்பதுதான் இதன் சிறப்பம்சமாகும். சிற்பத்தின் இடதுகால் தரையிலும் வலதுகால் ஆடல் வடிவிலும் தோன்ற, மூன்று முகத் தோற்றத்தோடு முன்புறத்தில் நான்கு கைகளுடனும் வலப்பக்கம் இடப்பக்கமாக, ஒவ்வொரு கையுமாக ஆறு கைகள் காணப்படுகின்றன. உடலில் மொத்தம் 14 சர்ப்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதுகாக்கப்பட வேண்டிய உலக புராதன இடமாக பிரகடனப்படுத்தப்பட்டது. கோவிலைச் சுற்றிலும் சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பில் புல்வெளி அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### ஸப்தஸ்வர படிக்கட்டுகள்

நுழைவாயிலில் நந்தியினருகே அமையப் பெற்றிருக்கும் இசைப்படிகள் மற்றுமொரு சிறப்பு. அதுதான் 'ஸப்தஸ்வர'ப் படிக்கட்டுகள். கோவிலின் நுழைவு வாயிலில் நந்தியின் அருகில் காணப்படுகின்றது. ஏழு படிக்கட்டுகளில் ஒவ்வொரு படிக்கட்டும் ஒவ்வொரு ஸ்வரத்தைக் கொண்டமைந்துள்ளது. நாணயக் குற்றியினாலோ அல்லது சிறிய கற்களாலோ அல்லது வேறு எவ்விதமாகவும் ஓசை எழுப்பினால் 'ஸ, ரி, க, ம, ப, த, நி, ஸ என்ற சப்தஸ்வரங்கள் துல்லியமாக கேட்கின்றன. ஒரு நாணயத்தை முதல் படியில் விழச் செய்தால் அது ஒவ்வொரு படியில் விழும்போதும் ஸ்வரங்கள் பிறக்கின்றன. அங்குள்ள சிறுவர்கள் குறும்புக்காக ஸப்தஸ்வரப் படிக்கட்டுகள் மீது கற்களை வீசுவதால் அதனை பாதுகாக்கும் பொருட்டு இரும்புக் கம்பியினால் வேலி அமைக்கப்பட்டுள்ளது.

### ரதவடிவ மண்டபம்

கோயிலின் உட்பகுதி, தரைமட்டத்திலிருந்து சுமார் ஐந்தடி தாழ்வாக கட்டப்பட்டிருக்கிறது. இக்கோவிலின் முன்பக்கமுள்ள மண்டபம் ஒரு ரதத்தின் வடிவில் அமைக்கப்பட்டு அதனை பக்கத்திற்கு ஒன்றாக இரு குதிரைகள் இழுத்துச் செல்வது போல் செதுக்கப்பட்டுள்ளது. மேலும் மண்டபத்தின் பக்கவாட்டில் அமைந்துள்ள படிக் கட்டுகளில் பரதநாட்டிய முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன. மண்டபத் தூண்களில் ஒவ்வொன்றிலும் நான்கு புறங்களிலும் பல புராணக் கதைகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. போர்க்கள குதிரைக் காட்சிகளும், திருமணக் காட்சிகளும் என நுணுக்கமான பல சிற்பங்களினால் மண்டபம் நிறைந்திருகிறது. தூண்களில் நர்த்தன கணபதி, நாட்டியத்தின் முத்திரைகள் காட்டும் பெண்கள், வாத்தியக் குழுக்கள் என உள்ளங்கை அகல அளவிலான சிற்பங்கள் தெளிவாக செதுக்கப்பட்டுள்ளன.

### சர்ச்சையைக் கிளப்பும் புத்தர் பெருமானின் கற்சிற்பங்கள்


மேலும், இம்மண்டபத்தின் தென்புற அதிஷ்டானத்தில் இருகாட்சிகள் எழிலுறு சிற்பங்களாக இடம்பெற்றுள்ளன. முதற்காட்சியில் கருவறை ஒன்றினுள் பத்மாசன கோலத்தில் புத்தர்பிரான் அமர்ந்து தன் வலக்கரத்தை மேலுயர்த்தி போதனை செய்யும் நிலையில் காணப்பெறுகின்றார். அவருக்கு பின்புறம் போதிமரம் திகழ்கின்றது. புத்தர் பெருமான் அமர்ந்துள்ள கருவறையின் வாசலின் இருபுறமும் ஜயன், விஜயன் எனும் இருவாயிற் காவலர்கள் சங்கு, சக்கரம் ஏந்தியவாறு நிற்கின்றனர். உள்ளே புத்தராகத் திகழ்பவர் திருமால் என்பதை உணர்த்த சங்கு சக்கர தாரிகளாக இக்காவலர்கள் நிற்கின்றனர். இக்காட்சித் தொகுப்பை அடுத்து இடபக்கொடி பறக்க, தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









ஒன்றின் மீது சிவபெருமான் திரிபுராந்தகர் கோலத்தில் காட்சி தருகின்றார். புத்தர் பெருமானின் கற்சிற்பங்களைக் கண்ணுற்ற சில ஆராய்ச்சியாளர்கள் பின்புலத்தை ஆராயாமல் பௌத்த விகாரைகளை இடித்து சோழர்கள் சிவாலயம் எடுத்தனர் என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் மேற்குறித்த சிவாலயங்களில் இடம்பெற்றுள்ள புத்தரின் திருவுருவங்கள் சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் சார்ந்தவை என்பது கலையியல், வரலாறு, புராணம் ஆகியவை அடிப்படையில் ஆழமாக நோக்கும்போது மட்டுமே புலப்படும்.

### எங்கும் காணக்கிடைக்காத அரிய சிற்பங்கள்

மகாமண்டபத்தின் நுழைவாயிலில் காணப்படும் கண்ணப்ப நாயனார் மெல்லிய செருப்பு அணிந்திருக்கிறார். கர்ப்பகிரகத்தில் லிங்கத்தின் இருபுறமும் துவாரபாலகர்கள் காணப்படுகின்றனர். இது பிற சிவன் கோயில்களில் காணப்படாதது. பிறகோயில்களில் இல்லாத, அதிசயமான சிற்பங்கள் இங்கு உண்டு. கையில் வீணையில்லாத சரஸ்வதி, மூன்றுமுகப் பாம்புகள், எட்டு கைகளுடன் அர்த்தநாரீஸ்வரர், மேல்கரங்களில் சிவனுக்குரிய மானும், கோடரியும், கீழ்க் கரங்களில் அழகான புல்லாங்குழல் ஏந்திய சிவனும் குழலூதும் கண்ணனும் இணைந்த சிவன், காலை மடக்கி ஓய்வாக உட்கார்ந்திருக்கும் சிவன் என நம்மை ஆச்சரியப்பட வைக்கும் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஒருபுறத்தில் யானையாகவும், எதிர்ப்புறத்தில் காளையாகவும் தோன்றுமொரு சிற்பமும் தோன்றுகிறது. குழலூதும் சிவன் இங்கு மட்டுமே காணப்படும் அரிய சிற்பமாகும். மண்டபத்தின் மேல் நாயன்மார்கள், பிரகாரத்தில் சிவாச்சார்யார்களின் 108 உருவங்கள் ஆகியவை காணப்படுகின்றன.

இந்திரனை சுமந்த ஐராவதம் என்னும் வெள்ளை யானைகள் கர்ப்பக்கிரகத்தின் தெற்கு வடக்கு நுழைவாயில்களில் காணப்படுகின்றன. சிங்கங்களை வேட்டையாடும் யானைகள், அன்னப் பறவை, இரண்டு பாம்புகள் ஒரு எலியைப் பிடிக்கும் காட்சி, யானைகளுக்கு குட்டிகள் பிறக்கும் காட்சி என்று கல்லில் ஒரு மிருகக்காட்சிச் சாலையும் அமைத்திருப்பது நம்மை பிரமிக்க வைக்கும். திருச்சுற்றுகளில் அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாறுகளின் சிறந்த பகுதிகள் கருங்கற்களில் சிறந்த கலை நுட்பத்துடன் செதுக்கப்பட்டுள்ள. பிரகாரங்களின் மற்றொரு அழகான அம்சம் அங்கு அமைக்கப்பட்டுள்ள காற்றோட்டமிக்க மண்டபங்கள். சதுர, செவ்வக, நீள்சதுர, வட்ட, பூக்கள் வடிவிலான குறுக்கும் நெடுக்கிலும் காற்று நுழையும்படி அமைக்கப்பட்ட கருங்கல் சன்னல்களைப் பார்க்கலாம். சுவரின் கீழ்ப்பகுதியில் மண்குடத்தை ஒருவர் தட்டி தாளம் எழுப்புவதாக ஒரு சிற்பம் காணப்படுகின்றது. அதுவே கடம் தோன்றியதின் தொடக்கமாக இருந்திருக்கலாம்.

கோபுரத்தை சுற்றி வருகையில் பின்புற சுவரில் மங்கிப்போன ஓவியங்கள் தென்படுகின்றன. கோபுரம் ஐந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை மாடங்களுடன் 85 அடி உயரமாய் நிமிர்ந்து நிற்கிறது. இரண்டாம் பிரகாரத்தின் கிழக்குப்புறத்தில் மிகப்பெரிய அடித்தளங்களுடன் விளங்கும் இக்கோபுரத்தின் உட்பீடம், அதிஷ்டானம், பித்தி, தேவகோஷ்டங்கள் ஆகியவை பெரியனவாகவும் அழகிய வேலைப்பாடுகள் உடையனவாகவும் விளங்குகின்றன. கோபுர கோஷ்ட தெய்வங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பெயர்கள் எழுதும் மரபு தாராசுரம், திருவாரூர், தில்லை ஆகிய கோவில்களைத் தவிர வேறெங்கும் காணப்படவில்லை. இவை முறையே பிரம்மன், ரிஷி, நிருசி, விஷ்ணு, கணபதி ஆகும்.

கோபுரத்தின் கீழ்ஆவர்த்தனத்தில் சாஸ்தா, ஹர்லேகாதேவி, ருத்ராணி, வைஷ்ணவி, பிரதிஷ்தா தேவி, நிவிர்த்திசக்தி, வீரபத்திரர், தக்ஷபிரஜாபதி, சங்கநிதி, பத்மநிதி ஆகிய தெய்வ உருவங்கள் புதுமையாக இடம்பெற்றுள்ளன. அதாவது சக்தி வடிவங்களும், சாஸ்தா, வீரபத்திரர், தக்ஷபிரஜாபதி போன்ற சிற்ப உருவங்களை வேறு எங்கும் காணமுடியாது. அழிந்தவைபோக எஞ்சிய சக்தி வடிவங்களில் ஹர்லேகாதேவி, ருத்திராணி, சாந்தி சக்தி, பிராம்மி போன்றவை தலை இழந்தும், உடல்உறுப்புகளை இழந்த நிலையிலும் உள்ளன. கோபுர சிற்ப வரலாற்றில் முதன்முறையாக ஐயனார் இடம்பெறுவதும் இங்குதான்.

இக்கோபுர கோஷ்டத்தில் திகழ்ந்த சிற்பங்களான ரதி - காமதேவன், அக்நி, நிருதி ஆகியவை தற்போது தஞ்சைக் கலைக்கூடத்தில் காணப்படுகின்றன. தேர் ஒன்றினைக் குதிரை இழுக்க, அதன்மேல் வில்லேந்திய காமனும் ரதியும் நிற்கும் சிற்பம் சோழர்கால சிற்பக்கலைக்கு சிறப்பும் சேர்க்கின்றது.

விமானத்தின் வடபுறச் சுவரில் புடைப்புச் சிற்பமாக கைலைமலை மீது சிவனும், தேவியும் அமர்ந்திருக்க, முன்புறம் ஐந்து தலைகளும் பத்துக் கரங்களும் விளங்க, கைலையை இராவணன் பெயர்த்து மேலே உயர்த்துகின்றான். இக்காட்சிக்கு மேலாக சிவனும் தேவியும் அமர்ந்து அனுக்கிரகம் செய்ய, இராவணன் நின்று வணங்கும் காட்சியும் காணப்படுகிறது.

## பெண்ணின் பெருமைகள் பேசும் சிலைகள்


இரண்டாம் ராசராசன் பெண்ணின் பெருமையை கலையிலும் பக்தியிலும் உயர்த்தியவன். சோழர்கள் காலத்தின் இறுதிக்கட்டத்தில்தான் சக்தி வழிபாடு முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. அதற்கு வித்திட்டவன் இரண்டாம் ராசராசன். கோயில் மூலத்தலத்தின் வலதுபுறம் அம்மனுக்கு தனி சன்னதி அமைக்கப்பட்டு தமிழ்நாட்டுக் கோயில்களின் சரித்திரத்தில் முதன்முதலாக புதுமை செய்தான் என கோயிலின் உள்ளே உள்ள இந்தியத் தொல்பொருள் காட்சியகத்தில் செய்தி எழுதி வைக்கப்பட்டுள்ளது. இந்த அம்மன் கோயிலின் உள்ளே மகாமண்டபத்தின் இடது, வலது பக்கங்களில் இரு எழில்மிக்க வீரப்பெண்மணிகளின் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோவிலின் குளம் 'யமதீர்த்தம்' என்றழைக்கப்படுகிறது. ரிஷியின் சாபத்தினால் உடலெங்கும் தீக்காயங்கள் பெற்ற யமன் மரணத்திற்கு போராடுகையில் இக்கோவிலுக்கு வந்து தரிசித்து விமோசனம் பெற்றதாக ஐதீகம். ஆகையால் குளம் இப்பெயரைப் பெற்றது. இரண்டாம் ராசராசனின் இசை, கலை, இலக்கியம், பக்தி இப்படி எல்லாவற்றையும் அங்குள்ள சுவர்கள், தூண்கள், சிற்பங்கள், சிலைகள் சொல்லுகின்றன.

-பஸ்ரியாம்பிள்ளை ஜோண்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபல கர்நாடக, திரையிசைப் பாடகி

# பி.லீலா



*1944 ஆம் வருடம் ''சென்னை வித்வத் சபை'' இசைப் போட்டி ''இராகம், தாளம், பல்லவி''யில் திறமை காட்டி முதன்மை இடத்தைப் பிடிக்கப் போகிறவர் யாரென்ற பரபரப்பும் விறுவிறுப்பும் சபையோரை நிமிர்ந்து உட்கார வைத்திருக்கிறது. போட்டியின் தரத்தைத் தீர்மானிக்கும் நடுவர்களாகப் பாலக்காடு மணி ஐயர், ஜி.என். பாலசுப்பிரமணியம் போன்ற மேதைகள் முன்வரிசையில் அமர்ந்து அவதானித்துக் கொண்டு இருக்கின்றார்கள். இறுதியில் முடிவு தெரிவிக்கப்படுகிறது. பத்தே பத்து ஆண்டுகள் நிரம்பிய சிறுமி பி. லீலா என்பவர் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.*

*அங்கு கூடியிருந்த ரசிகர்கள், ஏன் இசை உலகமே அச்சிறுமியின் ஆற்றலை வியந்து பாராட்டி வாழ்த்தியது. 'கிண்'ணென்று ஒலிக்கும் குரலின் இனிமை, ஸ்ருதி சுத்தமும் உச்சரிப்புத் தெளிவும் அழுத்தமும் கர்நாடக சங்கீத மேதைகளையே கவர்ந்து கொண்டதென்றால் லீலாவினுடைய இசைத் திறமை இளமையிலேயே பளிச்சிட்டதெனலாம்.*

*இதற்கு மூல காரணமாக அமைந்தவர் இசையையே உயிராக நேசித்த, பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்த குஞ்சன் மேனன் என்ற இவருடைய தந்தையார். லீலா பிறந்து மழலை பேசத் தொடங்கும் போதே மேனன் அவருக்கு சரளிவரிசைப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். குழந்தை இசை பயில வேண்டுமென்ற பேரவாவில் தான் வாழ்ந்த இடமான எர்ணாகுளத்தில் மணிபாகவதரிடமும் பின் வடக்கஞ்சேரி ராமபாகவதரிடமும் இசை கற்ற லீலாவையும் மனைவி மீனாட்சிக்குட்டியையும் அழைத்துக்கொண்டு தனது வேலையை இராஜினாமாச் செய்துவிட்டு வந்து சென்னையிலே குடியேறினார்.*

*மகளின் இசை வளத்தைப் பெருக்கச் சென்னையே சிறந்த இடமெனத் திட்டமிட்டு பத்தமடை கிருஷ்ணையரிடம் தீட்சிதர் கீர்த்தனைகளையும் மருத்துவக்குடி ராஜகோபால அய்யரிடம் தியாகராஜ கீர்த்தனைகளையும் கற்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். தனது குழந்தை கர்நாடக இசைத் துறையில் கரைகண்டு பேரும் புகழும் ஈட்டி இசைப்பணி செய்ய வேண்டுமென்பதே மேனனின் கனவாக அமைந்தது.*

*இன்றைய பரத நாட்டிய மேதை பத்மஸ்ரீ பத்மா சுப்பிரமணியத்தின் தந்தையார் திரைப்பட இயக்குனராகக் கலைவாணி பிலிம்ஸ் என்ற நிறுவனத்தை அமைத்திருந்தார். இவரது அலுவலகத்திலே லீலாவின் இசைக் கச்சேரி அவரது 12ஆவது வயதிலே அரங்கேறியது. இவருடைய கச்சேரியை வியந்து புகழாதோரே இல்லையெனக் கூறுமளவிற்கு எல்லோருடைய செவிகளிலும் லீலாவின் இன்னிசை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீங்காரமிட்டுச் கிறங்க வைத்தது.

இவருடைய பாடல்களைத் திரையில் பிரயோகித்தால் எத்தனை சிறப்பாகப் பல ஊர்களிலுள்ளவர்களும் அனுபவித்து ரசிக்கலாமேயென்றொரு யோசனை கலைஞர் மத்தியில் கோடி காட்டியது. எனவே இந்த வேண்டுகோளை மேனனிடமும் மகளிடமும் தெரிவித்தார்கள். அவர்களிருவருமே என்னமோ ஏதோ எனப் பயந்து ஒன்றுபட்ட குரலில் மறுத்தேவிட்டனர். எப்படியும் இவரது இசையைத் திரையினுள் கொண்டு போய் விட வேண்டுமென்று அந்த விடாக் கண்டன்கள் இவரை வழமை போல மேடையில் இருந்து பாட வைத்தே முதற் தெரிவில் சினிமாவுக்குரிய விதமாக அப்பாடலைப் பதிவு செய்தனர். இப்பாடல் கே.ஆர். இராமசாமியும் மேனகாவும் இணைந்து நடித்த ''கங்கணம்'' என்ற படத்துக்கான திரையிசைப் பாடலாகும்.

பி. லீலாவினுடைய குரலே முதன் முதல் இரவல் குரலாக திரையில் ஒலித்தது என்றே அறியக் கிடக்கிறது.

இசையென்னும் சமுத்திரத்தில் இன்னும் இன்னும் ஆழம் காண வேண்டுமென்ற ஆர்வம் முந்துற தந்தையின் அரவணைப்பும் சேர மிகவும் பேர் புகழோடு பிரபலமாக இருந்த இசைமேதை சுப்பராயனிடமும் தொடர்ந்து இசையைக் கற்றார் லீலா. இசையுலகின் ஜாம்பவானாக விளங்கிய சுப்பராயனும் திரையுலகில் இசையமைக்கவும் செய்பவராகையால் தனது மாணவியை கோரஸ் பாடவும் நடனத்திற்கான சில பாடல்களைப் பாடவும் முதலில் இசையவைத்தார்.

> 'ஓரிடந்தனிலே','அமைதி இல்லாதென் மனமே', 'என்னதான் உன் பிரேமையோ','வாராயோ வெண்ணிலாவே' என்பது தொடக்கம் 'எனையாளும் மேரி மாதாவே', 'தாழையாம்பூ முடிஞ்சு', 'இன்று நமதுள்ளமே' என்று பலரையும் கவர்ந்த பல நூற்றுக்கணக்கான திரையிசைப் பாடல்களை பாடிப் பெருமையைத் தேடிக் கொண்டவர் லீலா.

அழகிய முகவெட்டும் வசீகரமான தோற்றப் பொலிவும் கொண்டோராயிருந்தும் இசையறிவின்மையால் திரைக்கு வர முடியாமல் விலக்கப்பட்டிருந்த நடிக, நடிகைகள் - லீலாவினால் அறிமுகமான பின்னணிப் பாடல் முறையைப் பயன்படுத்தி வாய்ப்புக்களைப் பெற்றமை அவர்களுக்கோர் வரப்பிரசாதமேயாகும். இதனாலும் லீலா பலரின் மதிப்புக்கும் விருப்பத்துக்குமுரியவராக வலம் வந்ததார்.

திரையிசைக்கு வந்ததால் தமது பொருளாதாரம் சுமுகமான நிலைமை எய்துவதையிட்டு லீலாவும் அவருடைய தந்தையார் மேனனும் அமைதியாகினர். மந்திரிகுமாரி, மருதநாட்டு இளவரசி, லைலா மஜ்னு, தேவகி, மணமகள், பாதாள பைரவி, சிங்காரி என ஏராளமான திரைப்படங்களில் லீலாவினுடைய குரல் கிண் ணாரமிட்டபடியே இனிமை தரும்.

புன்னாகவராளி இராகத்தில் ஜி. இராமநாதனின் இசையமைப்பில் திகம்பர சாமியார் படத்தில் லீலா பாடிய ''நாதர் முடி மேலிருக்கும் நாக பாம்பே'' பாடலைக் கேட்டு மகிழாதோர் இல்லையென்றே அடித்துக் கூறலாம். இப்பாடலைப் பாடியதால் லீலா நடனத்துக்கான பாடல்களைப் பாடத் துணிவையும் வழியையும் திறந்து விட்டதெனலாம். ராஜ ராஜன் படத்தில் 'ஆடும் அழகே அழகு' என லலிதா- பத்மினி நடனமாடப் பாடியவர்கள் லீலாவும் சூலமங்கலம் ராஜலக்ஷ்மியும். இப்பாடலைப் புகழ்ந்து எழுதாத பத்திரிகைகளே அன்று இல்லையென்று சொல்லுமளவிற்கு இப்பாடல் யாவராலும் புகழப்பட்டது.

கர்நாடக சங்கீதத்தின் நுட்பங்களையெல்லாம் நன்கு கற்றறிந்து அப்பாரம்பரிய இசையில் தோய்ந்த குரல் வளம்மிக்க லீலா கர்நாடக இசையை மட்டுமின்றி மெல்லிசை, நாட்டுப்பாடல், குறத்தி பாடல் தெம்மாங்கு என எந்த இசையையும் அதற்கேற்ற பண்புடன் இனிமையாகப் பாடி நேயர்களைக் கட்டிப் போடும் வல்லமை கொண்டவர். அத்தனை திறமையும் அவருக்கு இருந்ததனால் தான் 1957 ல் வெளியான 'ஒரே வழி' என்ற படத்தில் கர்நாடக இசை விற்பன்னரான எம்.எல். வசந்தகுமாரி அவர்களோடு கல்வி பெரிதா? செல்வம் பெரிதா? எனத் தர்க்கிப்பது போன்ற பாடலாக அமைந்த பாடலை போட்டியாகப் பாடிப்பலரது பாராட்டுக்களையும் பெற்றார். இப்படியே 'வஞ்சிக் கோட்டை வாலிபன்' படத்திலும் பத்மினி- வைஜயந்திமாலாவிற்கிடையில் நடனப் போட்டி, 'வெண்ணிலவே தண்மதியே என்னுடனே வாவா.' 'ராஜா மகள் புது ரோஜா மலர்....' என லீலாவும் ஜிக்கியும் ஒவ்வொரு நடன மாதருக்குமாகப் பாடியவை பார்ப்பாரையே வியப்பிலாழ்த்தியது!

உடுமலை நாராயணகவி இயற்றிய சிம்மேந்திர மத்திமராகப் பாடலான ''எல்லாம் இன்ப மயம்'' என்ற பாடல் திரையிசையிலேயே மிகச் சிறந்த கர்நாடக இசைப் பாடலாகக் கருதப்படும். இப் பாடலைப் பத்மினிக்காக எம்.எல்.வி.யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லலிதாவுக்காக லீலாவும் பாடினர். இந்த ராகமாலிகை பாடலுக்கான ஸ்வரப் பிரஸ்தாரங்களை லீலாவின் குருவான சி.ஆர். சுப்பராயனே அமைத்திருந்தார்.

'எல்லாம் இன்பம் மயம்' என்ற பாடலில் கையாளப்பட்டுள்ள அடுக்கு ஸ்வரங்களைப் போல் இதற்கு முன்னர் யாருமே அமைக்கவில்லை. இத்தகைய கடினமாக அழகாக அடுக்குகளை அமைத்தாலும் அதனைத் தெளிவாகப் பாட எல்லோராலும் முடியுமா? என்பது ஒரு கேள்விக்குறியேதான்.

இவ்வாறு பல இசை விற்பன்னர்களே பின்வாங்கக் கூடிய நிலையில், கர்நாடக இசையை நன்கு துறை போகக் கற்றும் மேடைக் கச்சேரியோடு திரை இசையிலும் பாடிப் புகழ்பெற்ற லீலா கர்நாடக இசை கச்சேரி மேடையில் கொடிகட்டி பறந்த எம்.எல். வசந்தகுமாரியோடு சமதையாக எள்ளளவேனும் பிச்சுப் பிசகின்றி அநாயாசமாகப் பாடிப் பலருடைய உள்ளங்களிலும் தன் இருப்பைத் தேடிக் கொண்டார்.

கள்ளமில்லாத இனிய குரலில் 'தாயே தயாகரி', 'காத்திருப்பான் கமலக் கண்ணன்' என்ற இராகமாலிகைப் பாடல் எனப் பக்தி இசைமிக்க பல பாடல்களைப் பாடி மனித மனங்களின் துன்பங்களை நீக்கி இறைவன் வயப்படுத்தும் திறமையும் இவர் இசையில் அதிகம் மிளிர்ந்தது.

'லவகுசா' படத்தில் 'ஜகம்புகழும் புண்ணிய கதை இராமனின் கதையே' என்ற பாடலை லீலாவுடன் இணைந்து பாடியவர் இசை நிபுணத்துவம் மிக்க இன்னொரு பாடகி சுசீலா.

மக்கள் பலராலும் போற்றி வழிபடப்படும் ஸ்ரீ சத்யசாயி பாபா பகவானே தான் இப்பாடலின் ரசிகனென்றும், இவ்விரு பாடகிகளையும் 'லவகுசா' என்று தான் அழைப்பதுண்டு எனவும் கூறியுள்ளாராம்.

'நீயே கதி ஈஸ்வரி' என்ற கவிஞர் மருதகாசியின் பாடலை லீலா பாடும்போது தமிழ் மொழியின் தெளிவான உச்சரிப்பும் ராகத்தின் பாவமும் குரலின் குழைவும் மனதில் ஒருமித்த இனிமை சேர்க்கும் தன்மையன.

வேலைக்காரி படத்தில் 'ஓரிடந்தனிலே' என்ற பாடல் 'அமைதி இல்லாதென் மனமே', 'என்னதான் உன் பிரேமையோ', 'வாராயோ வெண்ணிலாவே' என்பது தொடக்கம் 'எனையாளும் மேரி மாதாவே', 'மாயமே நான் அறியேன்', என்ற மிஸ்ஸியம்மா பாடல்கள், 'தாழையாம் பூ முடிஞ்சு', 'இன்று நமதுள்ளமே' என்று பலரையும் கவர்ந்த பல நூற்றுக்கணக்கான திரையிசைப் பாடல்களை ஆரம்ப நாட்களிலேயே பாடிப் பெருமையைத் தேடிக் கொண்டவர் லீலா. இவர் பல இசை மேதைமைமிக்க திரை இசைப் பாடகர்களான திருச்சி லோகநாதன்,கண்டசாலா, தியாகராஜ பாகவதர், ஏ.எம். ராஜா, மகாதேவன், டி.எம். சௌந்தரராஜன், வி.என். சுந்தரம், சீர்காழி கோவிந்தராஜன் ஆகிய பாடகர்களுடனும் இணைந்து பாடி வெற்றியீட்டியுள்ளார்.


1992 ல் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயலலிதா 'கலைமாமணி' என்ற பட்டத்தை லீலாவுக்குச் சூட்டியதோடு, இப்பட்டம் லீலாவுக்கு முன்னரே கிடைக்க வேண்டியது, தாமதமாகவே கிடைத்துள்ளதென்றும் தான் லீலாவின் இசையை ரசிக்கும் அவரது விசிறியெனவும் கூறியுள்ளார். புதிய புதிய இளம் பாடகர்கள் திரை இசைக்கு வரவும் அவர்களுக்கு இடம்விட்டு லேசாக ஒதுங்கி கொள்ள விரும்பிய லீலா, தான் அடிப்படையில் கர்நாடக சங்கீதப் பாடகிதான், திரை இசைப்பாடல்கள் தனக்கு விளம்பரத்தையும் புகழையும் தேடித் தந்தன என நெகிழ்ச்சியோடு கூறியிருக்கிறார். லீலா அமைதியும் அடக்கமுமான சுபாவம் கொண்டவர். இசையுலகில் பல வெற்றிகளைக் கடந்த அவருக்கு மணவாழ்வு சோபிக்காமல் தோல்வியையே சந்திக்க நேர்ந்தது. இசையையே முற்று முழுதாக நேசித்து, காதல் செய்த அவருக்கு மண வாழ்வின் தோல்வி ஒரு பொருட்டாகக் கருத்தில் எடுபடவில்லை.

கேரளத்துக்காரியான இவர் திரைப்படங்களில் தமிழ், தெலுங்குப் பாடல்களைப் பாடிச் சிறப்பித்தாலும் மனப்பூர்வமாக அவர் விரும்புவதும் சங்கமிப்பதும் கர்நாடக இசையுடனேதான். இசை ஆசிரியரின் வற்புறுத்தலாலும் திரைப்பட தயாரிப்பாளரின் மீறமுடியாத வேண்டுதலுக்காகவும் திரை இசையில் சஞ்சரித்த லீலா, தனது மன அமைதிக்காகவும் இசைத் துறையில் மென்மேலும் பல வளர்ச்சிப் பாதைகளைக் கண்டறியவும் கர்நாடக இசைக்குள்ளே பிற்காலத்தில் தன்னை மூழ்கடித்துக் கொண்டார்.

தன் இனிய இசையால் மக்களின் மனங்களையெல்லாம் அமைதியாக்கி சாந்தப்படுத்தி மகிழ்வித்த லீலாவின் குரல் சில ஆண்டுகளுக்கு முன் தன் ஓசையை நிறுத்திக் கொண்டாலும் இசைத் தட்டுக்களில் பதிவான இவரது பாடல்கள் ரசிகர் குழாமை இன்றும் குளிர்வித்து மகிழ்ச்சியடையவும் அவரது நினைவையும் மீட்டுகின்றன.

- பத்மா சோமகாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்ற
# கதக் நடனம்

ஏழு இந்தியக் கலாசார நடனங்களில் முக்கிய இடம் பெறும் ஒரு நடன வகையாக விளங்குவது வடஇந்திய நடனமான கதக் ஆகும். அடிப்படையில் கதக் நடனம், 'கதா' என்னும் பதத்தை அடித்தளமாகக் கொண்டு எழுந்தது. இந்த ஆடல் வடிவம், ஒரு குறிப்பிடப்பட்ட, கோயில்களுடன் தொடர்புபட்ட சமூகத்தினரால், உருவாக்கப்பட்ட கதை வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது எனலாம்.

இக்கதை வடிவங்ளுக்கு மெருகூட்டி ஆதாரபூர்வமாக வளர்க்க, முகபாவங்கள், நளினமான கைமுத்திரைகள், அசைவுகள் மூலம் பார்வையாளர்களைப் பரவசத்தில் கட்டி ஈர்க்கும் நிலைப்பாடுகளையும், துரித பாதவேலைப்பாடுகள், தாளலய சுதிபேதங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய வட இந்திய ஆடல் வடிவமே உலகளாவிய ரீதியில் இன்று கதக் என்று பிரபல்யம் பெற்று விளங்குகின்றது.

இக்கலையின் வரலாற்று வளர்ச்சிப் பின்னணியினை எடுத்து நோக்குமிடத்து இவ்வெழில் கொஞ்சும் கலைவடிவமானது, இயல்பாகவே ஏறத்தாழ கி.பி. 15 ஆம் நூற்றாண்டிற்கும் 16 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்ததாக, வைஷ்ணவ மதப் பக்தி நெறியினை அடித்தளமாகக் கொண்டதாக, இக்கதக் நடனம் விளங்குகின்றது.

குறிப்பாக ராதாகிருஷ்ண சிருங்கார ரச உணர்வுக் கதைகளை கருப் பொருளாகக் கொண்டு புனையப்பட்டு இக்கதக் நடனம் வளர்ந்து வந்துள்ளது.

ஏனைய இந்தியக் கலாசார நடனங்களைப் போன்று ஆன்மீக உணர்வில் திளைந்து வளர்ந்த ஆடல் வடிவம் கதக் எனலாம்.

ஆங்காங்கே நாடக வடிவமைப்பைச் சார்ந்து எழுந்த ராசலீலா, என்னும் பொதுப்படைக் கண்ணோட்டத்தில் இவ்வாடல் வடிவம் தொடர்புபடுத்தப்பட்டு, பிரபல்யம் பெற்றுள்ள ஆன்மீக ஆடல் வடிவம் கதக் எனக் குறிப்பிட்டால் மிகையாகாது.

இச்சாஸ்திரீக ஆடல்வடிவம், கிராமியப் பின்னணி, பாடல், பாடல் வரிகளுக்கு மத்தியில் வசன நடைப்பரிமாற்றம் மற்றும் ஆடல் கலந்த நளின, லாவண்ய நிலைத்தோற்றங்களை ஒருங்கே உள்ளடக்கியதாக விளங்குகின்றது.

காலக்கிரமத்தில் வட இந்தியாவானது இஸ்லாமிய ஆதிக்கத்துக்கு உட்பட்ட கால கட்டத்தில் ஆலயங்களை மையமாகக் கொண்டு எழுந்த இக்கலை வடிவம், காலக்கிரமத்தில், அரண்மனை ஆடல் வடிவமாக மலர்ந்து பரிணமிக்கத் தொடங்கியது.

எது எவ்வறாயினும், அரண்மனை நடனமாக உருவெடுத்த இவ்வாடல் வடிவம், இந்து அரண்மனைகளை ஒரு புறமாகவும், இஸ்லாமிய அரண்மனைகளை ஒரு புறமாகவும் மையமாகக் கொண்டு மலரத் தொடங்கியது. ராஜஸ்தான் மாநிலத்தில் இந்து அரண்மனைகளை மையமாகக் கொண்டும், டில்லி, ஆக்ரா மற்றும் லக்னோ, ஆகிய மாநிலங்களில் இஸ்லாமிய அரண்மனைகளை மையமாகக் கொண்டும் காலக்கிரமத்தில் கதக் ஆடல் வடிவம் வளர்ச்சியுற்று எழுச்சி பெறத் தொடங்கியது.

எது எவ்வாறாயினும் மெருகூட்டப்பட்டு பண்பாட்டு விழுமியங்களால் மிகைப்படுத்தப்பட்டு உள்ளங்களைக் கொள்ளை கொள்ளக் கூடிய, ஒரு தனித்துவ தனி நபர் ஆடல் வடிவமாகவே ஆரம்பத்தில் இந்நடனம் உருவெடுத்தது.

இந்து அரண்மனைகளில் ராஜஸ்தான் மாநிலத்தில் பரிணமித்த கதக் வடிவமானது நிருத்த கலை அம்சங்களுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி முக்கியத்துவம் கொடுத்தும் தாளலய, கால, கதி பேதங்களுக்கு சிறப்பிடம் கொடுப்பதுவும் வழமையாயிற்று. ஆயினும் இஸ்லாமிய அரண்மனைகளை மையமாக் கொண்டு வளர்ந்த கதக், இயல்பாக வாழ்வில் நடைமுறையுடன் ஒன்றியும் ஒட்டியும் இரண்டறக்கலந்த ஊடகமாகக் கருதப்பட்டது. இந்த வகையில் நிருத்திய கலை வடிவங்களான முகபாவம், ரசம், அபிநயம், நளினம், நிறைந்த கலைக் கூறாக இக்கதக் ஆடல் வடிவம் இஸ்லாமிய ஆதிக்கத்தில் பரிணமித்து வளர்ச்சியடைய தொடங்கியது எனலாம்.

பரத நாட்டியத்தில் எவ்வாறு பாணிகள், அல்லது மரபு வடிவங்கள், சில தனித்துவ உத்தியியல் முறைமைகளால் தனித்துவம் பெற்று விளங்குகின்றனவோ, அவ்வாறே கதக் நடனத்திலும், பாணிகள் அல்லது மரபுகள் சிறப்பிடம் பெற்று தனித்துவமும் பெற்று மிளிர்கின்றன.

இவை பொதுப்படையில் மரபியல் உத்தியியல் முறைமையில் தனித்துவம் பெற்று சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன என்பது பொதுவும், சிறப்பும், ஆன அம்சம் எனலாம். இன்று பரத நாட்டியத்துறையில் பந்த நல்லூர் மரபு, வழுவூர் மரபு என்பன எவ்வாறு தமக்கே உரித்தான உத்தியியல் முறைமைகளுடன் பிரபல்யம் பெற்று விளங்குகின்றனவோ, அவ்வாறே ராஜஸ்தான் மாநிலத்தின் இந்து அரண்மனைகளை மையமாகக் கொண்டு மலர்ந்த கதக் நாட்டியம், ஜெய்ப்பூர் கிரகண என்றும், இஸ்லாமிய ஆதிக்க அரண்மனைகளை மையமாகக் கொண்டு விளங்கிய பாணி பொதுப்படையில் லக்னோ கிரகண என்றும் கணிப்பிடப்படுகின்றது.

ஜெய்ப்பூர் கிரகண என்னும் கதக் ஆடல் வடிவத்தின் வழி காட்டியாய் வாழவைத்த பெருமை குரு ஜெய்லால் என்பவருக்குரியது. காலக்கிரமத்தில் அவரது பாணி அவரது சகோதரராலும், அவரது சீடப் பரம்பரையினராலும் முன் எடுக்கப்பட்டு வாழ வழிவகுக்கப்பட்டது.

'லக்னோ கிரகண என்றும்' கதக் மரபுப் பாணி 'வஜித் அலிசா' என்னும் கடைசி நவாப் காலத்தில் உருவெடுத்து வளர்ச்சி அடையத் தொடங்கியது. ஆயினும் தகூர் பிரசாத் என்பவராலும் அவரது இருமகன்மார்களாலும் மட்டுமே காலக்கிரமத்தில் இது மெருகூட்டி வளர்க்கப்பட்டது.

எது எவ்வாறாயினும் எம்மத்தியில் புழக்கத்தில், காணப்படும் கதக் அடிப்படையில் பண்டைய கால கதக் மரபில் இருந்து சில பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது என்பதினை எவரும் மறுக்க முடியாது. கோயில் கலை அம்சமாகவும், அதேவேளை அரண்மனை ஆடல் வடிவமாகவும், ஒருங்கே உருவெடுத்த இவ்வாடல் வடிவம், உயர்ந்த ஆடல் உத்திக்கலை வடிவமாகவும், அதே சமயம் உணர்ச்சிபூர்வமான மனோதர்ம வெளிப்பாட்டினை கொண்ட கலை வடிவமாகவும், ஒருங்கே திகழும் ஓர் உன்னத ஆடல் வடிவமாகும். அடிப்படையில் அதன் பண்டைய பரிமாணப்பாங்குகள் அவ்வப்போது நழுவ விடப்பட்டபோது ஆங்காங்கே இன்றும் அதன் சாஸ்திரீகச் சம்பிரதாயபூர்வமான பரிமாணங்கள், ஆடை, ஆபரண அலங்காரங்கள், நிருத்திய நித்திய ஆடல் அம்சங்கள், அனைத்தும், பண்டைய நிலைப்பாட்டிற்கு அமையவே இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இது உயிர்துடிப்புமிக்க வழிபாட்டு ஆடல் வடிவமாக மட்டும் விளங்காது , பெரிதும் சிருங்கார ரசனை இணையோட்டம் மிக்க ராதா கிருஷ்ண லீலைகளை பிரதிபலிக்கும் கலை வடிவமாகவே கதக் கலை வடிவம் இன்றும் விளங்குகின்றது. அடிப்படையில் கட்டுப்பாடான, மட்டுப்படுத்தப்பட்ட பக்கவாத்தியப் பிரயோகத்துடன் மட்டுமே இக்கலை அம்சம் மேடை ஏற்றப்படுகின்றது. கால்களுக்கு பல பட்டுப்பட்டான சதங்கைகளும், தபலா என்னும் தாளலய வாத்தியங்களும் சரங்கை என்னும் வாத்தியமும் அடிப்படையில் முக்கிய பக்க வாத்தியங்களாகக் கையாளப்படுகின்றன.

சரங்கை என்னும் வாத்திய நாதத்துடனேயே ஆடல் வடிவம் ஆரம்பமாவது வழமையாகும். கழுத்து அசைவு, இடுப்பசைவு நளினமான அங்க அசைவுகளுடன் நாட்டியம் ஆடுவது என்பது வழமையாகும். மென்மையான நளின லாவண்ய நிலைப்பாட்டுடன் தொடங்கி படிப்படியாக தாளலய காலகதி பேதங்களுடன் கூடிய நிருத்த வடிவங்களுடன் ஒன்றித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவரும் ஓர் ஆடல் வடிவமாக இது விளங்குவது. ஆடலை ரம்மியப்படுத்தும் உத்தியியல் ஆகும். தட் என்னும் நிருத்த அம்சங்களுடன் ஆரம்பமாகி 'அமத்', 'சலாமி' என்னும் ஆடல் துணுகுகளுடன் தொடர்ந்து தட்டகார் தோரகாஸ் மற்றும் கட்ஸ் என்னும் ஆடல் அம்ச துணுக்குகள் மேலும் தொடர்வனவாகின்றன.

கட்டுக்கோப்பான தாளலய அம்சங்களுடனும் துரித பாதவேலைபாடுகள் சுழற்சி நிலைப்பாடுகளை ஒருங்கே கொண்டு விளங்கும் இச்சாஸ்திரீக வட இந்திய நடனம், அடிப்படையில் தட்டகார் என்னும் அடிப்படை பாத வேலைப்பாட்டுடன் ஆரம்பமாவது வழமையாகும். சகல தாளங்களும் தட்டகார் பாத வேலைகள் ஈடு கொடுப்பது இந் நாட்டியத்தின் சிறப்பம்சமாகும். மூன்று முக்கிய கால கதிபேதங்களிலும் இது இடம்பெறுவது வழமையாகும். கால் வேலைப்பாடுகள் துரித கதியில் தட்டகார் மூலம் கையாளும் போது கை அசைவோ தோள் மூட்டு நிலைபாட்டோ பெரிதும் கவனத்தில் கொள்ளப்படுவது இல்லை.

தோராஸ் என்னும் ஒரு ஆடல் துணுக்கு இந்நாட்டியத்தில் முக்கிய இடம்பெறுகின்றது. இத்தோராஸ் ஆடல் துணுக்கில் பாதவேலைப்பாடுகளுடன் தலை, கை, கழுத்து ஒருங்கே இடம்பெறுவதும் நடைமுறை வழமையாகும். அமத் எனக் குறிப்பிப்படுவது சாதாரண வார்த்தைகளில் வருகை எனப் பொருள்படும். அஃதாவது நாட்டிய ஆரம்பத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. அமத் பார்வையாளர்களை பெரிதும் கட்டியீர்க்கும் ஆடல் அம்சமாக மட்டுமன்றி பார்வையாளர்களை பரவசப்படுத்தி ஆடல் நிகழ்வுக்கு களைகட்டும் அம்சமாகவும் விளங்குகின்றது. இதனைத் தொடர்ந்து இடம்பெறும் அம்சம் சலாமியாகும். சலாமியானது நளினமான வகையில் பார்வையாளர்களை வாழ்த்தி வரவேற்பதாகும்.



கட் எனக் குறிப்பிடப்படுவது பாவரசம் மூலம் கதையின் உட்கருப் பொருளை எடுத்தியம்புவதாகும். கட் என்னும் தனித்துவ ரச உணர்வு மூலம் உள் உணர்ச்சி அலைகளை பாடல் வரிகளின் கருத்தாழத்தை நடனக் கலைஞர் வெளிப்படுத்துவது எனப் பொருள்படும். பொதுப்படையில் கிருஷ்ண பரமாத்மாவையே பாட்டுடைத் தலைவராகக் கொண்ட பா வடிவங்களுக்கே கதக் நடனத்தில் நடனக் கலைஞர் ஆடல் அபிநய ரசபேதங்கள் மூலம் மொழிபெயர்ப்பு செய்து ஆடல் மூலம் வெளிபடுத்தப்படுவதாகும். கட்ஸ் எனக்குறிப்பிடப்படும் அம்சம் அடிப்படையில் மிகவும் இலகுவான பாவரச வெளிப்பாடேயாகும். ஆயினும் கதக்கில் இடம்பெறும் தும்பிரி என்னும் பாடல் வடிவமானது தனித்துவமிக்கதாகும். இந்துஸ்தானி சாஸ்திரிக சங்கீத பாணியில் இருந்து ஒட்டு மொத்தத்தில் இது மாற்றம் பெற்று விளங்குகின்றது. இஸ்லாமிய ஆதிக்க காலத்தின் இறுதியில் சாஸ்திரீக கதக் ஆடல் வடிவத்தில் உட்புகுந்த இசை வடிவம் எனலாம். தும்பிரி இசையியல் உருப்படியானது நான்கு அல்லது ஐந்து வரிகளை மட்டும் கொண்ட பா வடிவங்களாகவே விளங்குகின்றன. ஒவ்வொரு பா அடியும் மீண்டும் மீண்டும் நிரவல் செய்யும் இடத்து அதனை நிரவல் செய்யும் பாங்கும் பாணியும் வேறுபடுவதுடன் தனித்துவம் பெற்று விளங்குகின்றது.

எது எவ்வாறாயினும் அதனை நிரவல் செய்யும் ஒவ்வொருவரியும் அதன் பாவ உணர்ச்சியை வெளிப்பாட்டிற்கு அமைய நடன நர்த்தகியினால் ஆழமாக உணர்வியல் பூர்வமாக ரச உணர்வுப் பேதங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. உணர்வியல்பூர்வமாகச் சிருங்காரம் சொட்டும் பாவரசம் வெளிப்படுத்துமிடத்து அவை துல்லியமாக அமைவது மட்டுமின்றி ஒழுக்க முறை கையாளுகையில், கட்டுக்கோப்பான வகையில் அமைவது இன்றியமையாதது ஆகும்.


இந்த வகையில் கதக் என்னும் வட இந்திய சாஸ்திரீக ஆடல் வடிவம் என்றும் உலகளாவிய ரீதியில் தனித்துவம் பெற்று தனக்கே உரித்தான நுட்பவியல் ரீதியில் பார்புகழும் பிரபல்யமிக்க பைங்கலையாக மலர்ந்துள்ளது. பல ஆடல் வடிவத்தில் ஆழமான சாதுரியமான ஒரு சாஸ்திரீக கலையாக மாற்றம் பெற்றுள்ளது. இன்று இலங்கையில் கூடுதலாகச் சிங்கள மக்களால் பெரிதும் விரும்பி பயிலப்பட்டு வரும் ஒரு ஆடல் வடிவமாக இது விளங்குகின்றது.

- மதுரா மதுசூதநன்

பட உதவி : அனுஷ்கா ஏக்கநாயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Lanka's Heritage in Hospitality... Galle Face Hotel



## Other unique properties of Galle Face Hotel Management Company



**Queen's Hotel**
Kandy



**Suisse Hotel**
Kandy



**Lihiniya Surf Hotel**
Bentota

## Managed by

*Galle Face Hotel Group*

The Galle Face Hotel, No. 2, Galle Road, Colombo 03
Tel: (94) 11 2541010-16, 2543565-77, Fax: (94) 11 2541072/74
Visit : www.gallefacehotel.com

LANEX


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீதை அம்மன் கோவில்



இராவணன் சீதையை சிறைவைத்திருந்த இடமான சீத்தாகொட்டுவவிலிருந்து மனதிற்கு ரம்மியமான உலகத்தின் சொர்க்கபுரி என்று வர்ணிக்கப்படும் அசோக வனத்திற்கு கொண்டு செல்கின்றான். புசல்லாவையிலுள்ள போர்ட்டோபீற் எஸ்டேட்டில் காணப்படும் தேரின் பயண சுவடுகள் போன்ற எச்சங்கள் மேலே கூறிய சம்பவத்துடன் இணைத்துப் பேசப்படுகின்றது.

மேலும், அசோக வனத்திற்கும் இராவணனின் தலைநகரான லங்காபுரிக்கும் இடையில் இராவணன் அடிக்கடி பயணம் செய்திருந்தாகவும் இராவணன் தன்னுடைய இராச்சியத்தின் அழகை சீதைக்குக் காண்பிப்பதற்காக இப்பாதையில் இருந்த இயற்கைச் செல்வங்களை எடுத்துச் சென்றதால், இந்த இடத்தில் எந்தவொரு பயிரினமும் விளைவதில்லை என்றும் அறிய முடிகின்றது.

அனுமன் முதன் முதலாக இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்த இடம் இப்பகுதிதான் என நம்பப்படுகின்றது. இந்த மலை லங்காபுரி மற்றும் அசோகவனம் ஆகியவற்றை விட சற்று உயரமானது. இதன் பெயர் பாவல மலையாகும். இலங்காபுரியிலிருந்து சீதையை அசோக வனத்துக்கு அழைத்துச் செல்லும்போது, தேர் சென்ற பாதையின் வழியே சீதை அழுத கண்ணீர் இன்றும் காய்ந்து விடாமல் சிறிய ஏரிபோல் காணப்படுகின்றது என்று இலங்கை உல்லாசப் பயணத்துறையின் ஏடுகளில் காணக்கிடைக்கின்றது. இங்கு காணப்படும் செழிப்பு மிக்க மரங்கள் கூட சிவப்பு நிறத்தில் பூக்களைச் பூத்துச் சொரிகின்றன. இவற்றை 'சீதாமலர்'கள்' என்று அழைக்கின்றார்கள். இலங்கையில் வேறு எங்கும் இந்தவகை மலர்கள் காணப்படுவதில்லை என்பது கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயமாகும்.

திறந்தவெளிச் சிறைச்சாலை என்று சொல்லக்கூடிய சீதா எலிய என்ற இடத்தில்தான் சீதை சிறைவைக்கப்படுகின்றாள். சுற்றிவர காவல் பெண்மணிகள் சீதைக்கு காவலிருந்ததாகவும் இதிகாசம் கூறுகின்றது. இங்கு சிறிய கற்பாறை காணப்படுகின்றது. அதனருகில் சிறிய நீரூற்று சலசலத்து மனதுக்கு ரம்மியத்தைத் தரும் வகையில் ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த இடம் இயற்கைச் சூழ்நிலைகள் அமைந்த மனதுக்கு ரம்மியமான ஓர் இடமாகும். இந்த இடத்தில்தான் சீதை தன்னுடைய பொழுதைக் கழித்ததாகவும் அருகில் ஓடும் அருவியில் தான் குளித்ததாகவும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூறப்படுகின்றது. இந்த இயற்கைச் சூழ்நிலையில் சீதை மனதைப் பறிகொடுத்து தானாகவே மனம்மாறி விடுவாள் என்ற எதிர்பார்ப்பு இராவணனுக்கு இருந்திருக்க வேண்டும் எனவும், இங்குள்ள சூழல் அவளைத் தன்னுடைய ஆசைக்கு இணங்க வைத்து விடும் என்றும் எண்ணி சீதாஎலிய என்ற இடத்தை இராவணன் தெரிவு செய்ததாக அறியமுடிகின்றது.

சீதை சிறை வைக்கப்பட்டிருந்த அசோக வனம் எனும் பகுதி பீதுருதாலகால மலையில் கடல்மட்டத்திலிருந்து 1868 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. நுவரெலியா நகரிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் பைன் மரங்கள் அடர்ந்தும் உயர்ந்தும் வளர்ந்திருக்கும் இயற்கை எழில் கொஞ்சும் பகுதியாகும்.

இந்த இடத்தில் இதிகாச காலத்தைச் சேர்ந்த புராதன சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை ராமன், சீதை, லக்குமணன், அனுமான் ஆகியோரது உருவங்களாகும். இவை இலங்கையுடன் இராமாயண நிகழ்வுகள் சம்பந்தப்பட்டிருப்பதை உறுதி செய்வதாக அமைகின்றது என அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த இடம் அசோக வனமாக திகழ்ந்திருப்பதற்கான நிகழ்தகவுகள் மிகஅதிகமிருப்பதாக உறுதிசெய்கின்றனர். பரம்பரை பரம்பரையாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே, ஆயிரமாயிரம் வருடங்கள் கடந்து விட்ட நிலையில் இந்த இராமாயண நிகழ்விடங்கள் நாம் வாழும் சூழலுக்குப் பக்கத்தில்தான் நடந்தேறி இருப்பதை எண்ணும் போது ஆச்சரியமாக இருக்கவில்லையா?

**சீதையைத் தேடிவரும் அனுமான்**

'அண்ணல் அவ்இராமன் ஏவிய
வெவ்விடை அனையபோர் வீரத்தூதன்'

இலங்கையில் சீதையைத் தேடிவரும் அனுமானின் வீரதீர பராக்கிரமங்களை விளக்குவதற்கு கம்பன் தேர்ந்தெடுத்த வரிகளே இவையாகும். சீதையைத் தேடும் வண்ணம் இராமன் பலதிசைகளுக்கும் தூதுவர்களை அனுப்பிய போதிலும், அனுமனை தென்திசைக்கு செல்லுமாறு பணித்து, தனது அன்புத் தலைவியின் உருவ அடையாளங்கள் யாவற்றையும் விளக்கி, மேலும் தான் அணிந்துள்ள மோதிரத்தையும் அடையாளமாகக் கொடுத்து அனுப்புகிறார். அனுமான் வாயு புத்திரன் என்பதனால் விண்ணில் மிதந்து பயணிக்கக்கூடிய சக்தியும் நினைத்த மாத்திரத்தில் தன்னுடலை சிறிதாகவோ பெரிதாகவோ உருமாற்றிக் கொள்ளக்கூடிய திறனும் உள்ளவர். அனுமான் தான் எடுத்த முயற்சியில் எல்லாம் வெல்லும் செயற்திறனும் பகைவர்களை எதிர்த்து வெல்லும் போர்த்திறனும் கைவரப்பெற்றவர்

நாயகன் றூதனும் விரைவி னண்ணினான்
ஓய்வில னுயர்மரப் பணையி னும்பரான்

சீதாதேவியைத் தேடியவாறு திரிகின்ற அனுமான், அசோக வனத்திலுள்ள உயர்ந்த மரக்கிளையொன்றின் மேல் ஏறியவனாய் கூர்ந்து கவனிக்கின்றான். ஆராய்ச்சி உள்ளம் படைத்த அனுமான் அங்கு காவல்காக்கும் கூட்டத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டவுடன் ஐயம் கொண்டு உற்றுப் பார்க்கின்றான். காவல்காக்கும் மகளிர் நடுவில், கண்ணீர் விட்டழுதபடி இருப்பவள் சீதாதேவியே என்ற முடிவுக்கு அனுமான் வருகின்றான். சீதையைக் கண்ட அனுமான் இராமனுடைய அடையாள மோதிரத்தை சீதையிடம் கையளித்து, 'தங்களைக் காப்பாற்ற ராமன் வருவார்' என்ற நம்பிக்கையையும் அளிக்கின்றார்.

நூற்றாண்டுகள் கடந்த பழைய ஆலயத்தின் அடையாளத்தை சீதா எலியவில் கண்டுகொள்ள முடியும். இப்பொழுது அழகான புதிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்திற்கு அருகில் அனுமனுக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. சீதா அம்மனுக்கு ஆலயம் அமைந்திருக்கின்றது என்றால் இங்கு மட்டும்தான். இந்த இடம் ஹக்கெல பூந்தோட்டத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது.

சீதா எலிய குன்று அசோக மரங்களால் சூழப்பட்டுள்ளது. சீதை இங்கு சிறை வைக்கப்பட்ட பொழுது பள்ளத்தில் ஓடிக்கொண்டிருக்கும் நீரோடையில் நீராடுவாராம். தற்போதுள்ள ஆலயம் இந்த நீரோடைக்கு அருகிலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வீதியிலிருந்து சாய்வான இறக்கத்தில் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தினுள் படிக்கட்டுகளின் துணையுடன் இறங்கிச் செல்ல முடியும். ஆலயத்தில் இராமன், சீதாதேவி மற்றும் லக்குமணன், அனுமன் ஆகியோருக்கு பீடங்கள் காணப்படுகின்றன.

இங்கு கவனிக்கத்தக்க விடயம் யாதெனில், பாறைகளில் காணப்படும் அனுமானின் கால்தடயங்கள் ஆகும். அதாவது அனுமான் சீதையைத் தேடி இலங்கைக்கு வந்த போது அசோக வனப்பகுதியில் கால்பதித்த இடம் அதுதான் எனக் கருதப்படுகின்றது. அனுமானின் காலடித்தடயங்கள் எனச் சந்தேகிக்கப்படும் இப்பதிவுகள் சில பெரியனவாகவும் சில சிறியனவாகவும் காணப்படுகின்றன. இதன் காரணமாக பெரிதாகவும் சிறிதாகவும் காணப்படும் பாத தடங்கள் சாத்தியமாகி இருக்ககலாம் என நம்பப்படுகின்றது. ஏனெனில் அனுமான் நினைத்த மாத்திரத்தில் உருவத்தை மாற்றும் சக்தி படைத்தவராவார்.

நுவரெலியா - ஹாவெலி பிரதான சாலையைக் கடக்கும் போது இந்த ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தின் பின்புறத்தில் அமைந்துள்ள காடு மிகவும் இருண்ட நிலையில் காணப்படுகின்றது. இலங்கையில் இடம்பெற்ற இராமாயணக் கதைச் சம்பவங்கள் என்று எடுத்துக் கொண்டால் அவை ஏதோ ஒருவகையில் தொடர்புபட்டிருப்பதைக் காணலாம். இராமாயண பாத்திரங்களின் பெயரை இலங்கையில் உள்ள ஓரிடம் கொண்டிருத்தல், அல்லது புவித்தோற்றத்தை அல்லது நில அமைப்பை கொண்டிருத்தல், மற்றும் நீரோடைகளின் அமைவிடம், மண்ணின் நிறம் ஆகியவை இந்த சம்பவங்களைத் தொடர்புபடுத்தியே காணப்படுகின்றன.

- மிருணாளினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவினை போக்கும் திலகம்

தமிழர் வாழ்வில் மஞ்சள் மற்றும் குங்குமம் இரண்டுமே இரண்டறக் கலந்துள்ளதுடன் மங்கலப் பொருட்களாகவும் இவை கருதப்படுகின்றன. குங்குமப் பொட்டு பெண்களுக்கு மங்கலத்தைக் கொடுக்கும் சின்னமாக தமிழர் மரபில் கருதப்படுகிறது. பெண்களின் நெற்றிக்கு அழகு கொடுப்பதுடன் பொட்டுக்களில் சிறந்தது குங்குமம் என்ற கருத்து எம்மிடம் உண்டு. அது மட்டுமல்லாமல் மற்றவர்களின் குறிப்பாக ஆண்களின் வசீகரிக்கும் பார்வையில் இருந்து பெண்களைக் காக்கக் கூடிய சக்தி குங்குமத்துக்கு இருக்கிறது. பெண்களுக்கு மாலை, பொட்டு ஆகியவற்றை கணவன் மாத்திரமே இடவேண்டும். வேற்று ஆடவர்கள் பெண்களுக்கு திலகம், மாலை என்பவற்றை அணிவிக்கக் கூடாது. பெண்களின் நெற்றிக்கு அழகு சேர்க்கும் குங்குமத்தின் சிறப்புக்களை 'குங்கும பஞ்சதசி' சிறப்பாக எடுத்துரைக்கிறது.

தற்காலத்தில் திருமணமான பெண்கள், திருமணமாகாத பெண்கள் என அதிகளவான பெண்கள் ஸ்ரிக்கர் பொட்டு என்று அழைக்கப்படுகின்ற ஒட்டுப் பொட்டுக்களையே அதிகம் அணிவதற்கு விருப்பங்கொண்டவர்களாக உள்ளார்கள்.



சக்தியின் வடிவமாக இருக்கும் அன்னையின் பிரசாதமாக கோவில்களில் வழங்கப்படும் குங்குமத்தை சகல வயதுப் பெண்களும் தங்கள் நெற்றியில் பொட்டாக இடலாம். ஆனால் உச்சி வகிட்டில் திருமணமான பெண்கள் மாத்திரமே குங்குமப் பொட்டினை வைக்கவேண்டும் எனும் பாரம்பரியம் நம் தமிழர் மரபில் உண்டு. இதைச் 'சிந்தூரம்' எனச் சிறப்பாக அழைப்பார்கள்.

மேலும் நரம்பு முடிச்சுகள் ஒன்று கூடும் நெற்றியில் திலகம் இடுவது சிறந்தது. இந்திய தேசத்து வட நாட்டு திருமணமான ஆண்கள், பெண்கள் என அனைவரும் தமிழர்கள் போன்று உச்சி வகிட்டில் குங்குமம் வைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். திருமணமான பெண்களுக்கு தாலி, மெட்டி மற்றும் குங்குமம் என்பவை முக்கியமானவையாகவும் சிறப்பானவையாகவும் கருதப்படுகிறது. அவர்கள் தங்கள் மாங்கல்யத்திலும் இக்குங்குமத்தை வைப்பார்கள். ஸ்ரிக்கர் பொட்டுக்கள் செயற்கை முறை மூலம் தயாரிக்கப்படுவதுடன் அளவுக்கதிகமான பசை சேர்க்கப்படுவதால் அவர்களின் மென்மையான நெற்றிக்கு தோல் ஒவ்வாமையைக் கொடுக்கும். சில பெண்களுக்கு உடனடியாக தோல் ஒவ்வாமை ஏற்படும்; பலருக்கு காலங்கடந்து பாதிப்பு ஏற்படும்.

ஒரு பெண்ணின் நெற்றியைப் பார்த்ததும் அவள் திருமணமானவளா அல்லது திருமணமாகாதவளா என உணரக்கூடிய வகையில் தமிழர்கள் வாழ்க்கைமுறை அமைந்துள்ளது. திருமணமாகாத பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்கு சிறந்த திலகமாக 'சாந்துப் பொட்டு' கருதப்படுகிறது. தேவையான அளவு சவ்வரிசியை எடுத்து, நன்றாக வறுத்து, சிறிது தண்ணீர் சேர்த்து காய்ச்சும் போது சுத்தமான சாந்துப் பொட்டு கிடைக்கிறது. இப்பொட்டில் வாசனைக்காக செவ்வரத்தம் பூ போன்ற இயற்கை வாசனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை கிராமப்புற மக்கள் சேர்த்துக் காய்ச்சுவார்கள். துருவிய தேங்காய்ச் சிரட்டையை நன்றாக செதுக்கி, சுத்தப்படுத்தி, காய வைத்து அச்சிரட்டையில் காய்ச்சிய கறுப்பு சாந்துப் பொட்டை இட்டு வைப்பார்கள். மேலும் சிறு குழந்தைகளுக்கு நெற்றியில் மாத்திரமன்றி கன்னத்திலும் சிறு பொட்டு ஒன்றை வைப்பதன் மூலம் அக்குழந்தையை தீய சக்திகள் அண்டாது என்பதுடன் அக்குழந்தைகள் மேல் திருஷ்டி படாது என்பதும் நம்பிக்கையாகும். திருமணமான பெண்கள் உச்சி வகிட்டிலும் நெற்றியிலும் வைக்கும் தூய குங்குமத்தை பழங்காலத்தில் எவ்வாறு தயாரித்தார்கள் என்பதை கீழே தருகிறோம்.

### சுத்தமான குங்குமம் செய்யும் முறை

30 தோலா கெட்டியான உருண்டை மஞ்சள் எடுத்துச் சிறு சிறு துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவேண்டும். இதர்கு சம எடை எலுமிச்சம் பழச்சாறு விதையில்லாமல் வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். மஞ்சள் முதலியன கடையில் தோலாக் கணக்கில் எடை போட்டு வாங்குவது போல, எலுமிச்சஞ் சாற்றுக்கு வீட்டில் எடை பார்ப்பது முடியாதது. அதனால் முகத்தல் அளவையில் வீட்டில் இருக்கக் கூடிய அவுன்ஸ் கிளாஸில் அளந்து போடுகிற வீதத்தில் சொன்னால் 16 அவுன்ஸ் பழச்சாறு எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பழச்சாற்றில் நன்றாகப் பொடித்த வெங்காரமும் படிக்காரமும் ஒவ்வொன்றும் 3 தோலா போட்டுக் கரைக்க வேண்டும். மஞ்சள் துண்டங்களை இக்கலவையில் போட்டு நன்றாக கலக்கி வைக்கவும். வாயகன்ற ஈயம் பூசிய பாத்திரத்தில் வைப்பது உத்தமம். இதை ஒரு நாளில் மூன்று தடவை நன்றாகக் கிளறவும். பழச்சாறு மஞ்சளில் சேர்ந்து சுண்டிய பிறகு நிழலில் வைத்து நன்றாக காயவைக்கவும். பின்னர் உரலில் இடித்து வஸ்திராயணம் செய்யவும். மெல்லிய துணியில் பொடியை வடிகட்டுவது வஸ்திராயணம் அல்லது வஸ்திரகாயம் எனப்படும்.

இப்படி விழுகிற சுத்தமான மஞ்சட் குங்குமத்தை வாயகன்ற சாடியில் பத்திரப்படுத்தவும். இக்குங்குமத்தில் ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி சுத்தமான பசு நெய் விட்டு கட்டி தட்டாமல் நன்றாகக் கலக்கச் செய்து வைத்தால் காப்பும் புனிதமும் ஆகும்.

இராமாயணத்தில் கூனியின் சொல் கேட்டு மதி இழக்கும் கைகேயி கோபத்தில் தன் மலரை பிய்த்து எறிகிறாள். தன் நெற்றியில் இருந்த திலகத்தை அழிக்கிறாள். பின்னாட்களில் ஏற்பட்ட தசாத சக்கரவர்த்தியின் மரணத்தின் சகுன செய்தியாக அதைப் பார்க்க முடியும். இதை கம்மன் ' அரும்பெறல் திலகமும் அழித்தாள்' என அழகாகச் சொல்கிறார். இதனால்தான் என்னவோ திருமணமான பெண்கள் குங்குமத்தை பொக்கிஷமாக கருதுகிறார்கள். அதே நேரத்தில் வீட்டில் குங்குமம் சிந்துவது நல்ல சகுனமாகக் கருதப்படுகிறது. குங்குமம் கைதவறி சிந்தினால் அவ்வீட்டில் திருமணம் முதலான சுப நிகழ்வுகள் நிகழும் என்பது தமிழர் நம்பிக்கையாகும்.

**கருத்து - வித்துவான். வசந்தா வைத்தியநாதன்**

**தொகுப்பு - உமா பிரகாஷ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













பிரான்ஸிலுள்ள **Sarcelle** மண்டபத்தில், நாரந்தனை மக்கள் நல்வாழ்வு சங்கத்தின் ஒளி விழா கடந்த 12.12.2010 பிற்பகல் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் கவிஞர் கண்ணதாசன் கலை அரங்க தலைவர் ரவீந்திரன், வண.பிதா.பிலிப், உலக தமிழ் பண்பாட்டுக்கழக பிரான்சு கிளைத் தலைவரும் சர்வதேச தமிழ்வானொலி அதிபருமாகிய சரவணையூர் விசு செல்வராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மௌன அஞ்சலியுடன் ஆரம்பிக்கப்பட்ட விழா இரவு 11.00 மணிவரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் கலை நிகழ்ச்சிகள், மற்றும் மெலிஞ்சி முனை அபிவிருத்திச் சங்கம் வழங்கிய 'வீர தேசிங்கு ராசா' நாட்டுக் கூத்து நாடகமும் மேடையேற்றப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதசமரசம் நிலவும் நாகூர் தர்கா

தமிழகம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உலகப் புகழ் பெற்ற நாகூர் தர்கா அமைந்துள்ளது. 'நாகூர் ஆண்டவர்' என்றழைக்கப்படும் ஹஸ்ரத் மீரான் சுல்தான் சையத் சாகபுதுல் ஹமீது என்பவரின் சமாதி இங்கு அமைந்துள்ளமையே இச்சிறப்புக்கு காரணமாகும். இவர் கி.பி 1558 ஆம் ஆண்டு (ஹிஜ்ரி 978) இறந்ததன் பின்னர், இந்த தர்கா உருவாக்கப்பட்டது. தர்காவின் முதல் கந்தூரி பெருவிழா 1559 இல் நடைபெற்றதாக தர்காவின் வரலாறு கூறுகின்றது.

அரண்மனை போன்று விசாலமான தர்காவின் உள் முற்றத்தை அடைந்ததும், எதிரில் ஆண்டவரின் அடக்கத் தலம் தெரிகின்றது. தங்க முலாம் பூசப்பட்ட மசூதி, மூன்று சமாதிகளை உள்ளடக்கியுள்ளது. மற்றைய இரண்டும் இவருடைய தாய் தந்தையினுடையதாகும். இங்குள்ள கதவுகள் வெள்ளியால் செய்யப்பட்டுள்ளன. ஒரு தங்கப் பெட்டியில் மீரான் சாகிப் பயன்படுத்திய மரச் செருப்புகள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை பக்தர்கள் முத்தமிட்டுச் செல்வார்கள். ஐந்து ஏக்கர் பரப்பளவுள்ள நிலப்பரப்பில் அமைந்துள்ள தர்கா, சுற்றிவர மதில்கள் சூழ நான்கு திசைகளிலும் நுழைவாயில்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவை முறையே அலங்கார வாசல், தலைமாட்டு வாசல், கிழக்கு வாசல், கால்மாட்டு வாசல் என அழைக்கப்படுகின்றன. அலங்கார வாசல், கடைகள் நிறைந்த கலகலப்பான இடமாகக் காட்சி தருகின்றது. இந்த தர்க்கா ஏழு நிலைகளைக் கொண்டுள்ளது. காமம், குரோதம், கோபம், பொய், பொறாமை, பிணி, மூப்பு ஆகிய ஏழு தடைகளைக் கடக்கும் வகையில் ஏழு நிலைகள் காணப்படுகின்றன.

நாகூர் ஆண்டவரின் சமாதியின் மீது கட்டப்பட்ட மண்டபத்தின் உச்சியில் அமைந்துள்ள கலசம் தங்கத்தால் செய்யப்பட்டது. தர்க்கா முழுவதும் சந்தனம், தேக்கு, தங்கம், வெள்ளி என புனிதப் பொருள்களாலும் பளிங்குப் பொருள்களினாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

முஸ்லீம்களின் முக்கியமான புண்ணிய தலமாக தர்கா விளங்கினாலும் இங்கு சாதி - சமய வேறுபாடின்றி மக்கள் அனைவரும் ஒன்றுகூடி நல்லருள் பெறுகின்றனர். இந்த தர்கா இந்து-முஸ்லீம்களின் ஒற்றுமைக்கு மிகப்பெரிய சான்றாக விளங்குவதுடன், இந்துக்களின் கட்டிடக் கலையைப் பின்பற்றி தர்கா கட்டப்பட்டுள்ளமை இங்குள்ள இன்னொரு சிறப்பம்சமாகும்.

நாகூர் தர்காவில் நிமிர்ந்து நெடிதுயர்ந்து நிற்கும் பெரிய கோபுரம் போன்ற அமைப்பு 'பெரிய மினாரா' என்று அழைக்கப்படுகிறது. அழகிய ஐந்து வெள்ளை மினாராக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பார்ப்போரை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. ஐந்து மினாராக்களும் ஐந்து வெவ்வேறு பரோபகாரிகளினால் கட்டப்பட்டவையாகும்.

(1) 77 அடி உயரமுள்ள 'சாஹிபு மினாரா'வை செஞ்சி இப்ராஹீம்கான் என்பவரும்,

(2) 93 1/2 அடி உயரமுள்ள 'தலைமாட்டு மினாரா'வை நாகை நல்ல செய்யிது மரைக்காயர் என்பவரும்

(3) 93 1/4 அடி உயரமுள்ள 'முதுபக் மினாரா'வை பரங்கிப்பேட்டை நீதிபதி தாவூத்கான் என்பவரும்

(5) 131 அடி உயரமுள்ள 'பெரிய மினாரா'வை தஞ்சை மன்னர் பிரதாப் சிங்கும் கட்டிக் கொடுத்துள்ளனர்.

இந்த மினாராக்களில் வந்து தங்குகின்ற புறாக்களுக்கு உணவு வழங்க, தஞ்சை மன்னர் சரபோஜி, நாகை மாவட்ட திட்டச்சேரி - நரிமணம் பகுதியில் கிராமம் ஒன்றைத் தானமாக அளித்தார். அந்தக் கிராமம் 'புறாக் கிராமம்' என்று அழைக்கப்படுகிறது.

நாகூர் தர்காவில் அதிகாலைத் தொழுகைக்கான பாங்கொலி காற்றில் கலந்து வருகிறது. தொழுகை முடிந்தபின் 'பெரிய மினாரா' அருகே உள்ள மண்டபத்திலிருந்து 'ஷெனாய்' இசை தவழ்ந்து வருகிறது. இந்த இன்னிசை மொகலாயர் காலத்து அரசவையை நினைவூட்டுகிறது. ஷெனாய் இசையையொட்டி நாதஸ்வரமும் இசைக்கப்படுகிறது. இந்தியாவில் இது போன்று தொழுகைக்கு அழைக்கும் பாங்கொலியும் 'ஷெனாய்-நாதஸ்வரமும்' ஒருங்கே ஒலிக்கும் ஒரே இடம் நாகூர் தர்காதான்.

நாகூர் ஆண்டகை, 28 ஆண்டுகள் நாகூரில் தங்கியிருந்து சன்மார்க்க சேவை செய்தார். ஐநூறு ஆண்டுகளுக்கு முன் உத்திர பிரதேசத்தில் மணிப்பூரில் (ஹிஜ்ரி 910-ஆம் ஆண்டு) உதித்த நாகூர் ஆண்டகை, கருவிலிருந்து கல்லறை வரை பல அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார். அவருக்கு ஐந்து வயது பூர்த்தியடைவதற்குள் 'குர்ஆன்' முழுவதையும் மனனம் செய்துவிட்டார். எட்டு வயதை எட்டுவதற்குள் சகல மார்க்கக் கலைகளையும், உலகக் கல்வியையும் கற்று, மெய்ஞ்ஞானச் சிந்தனைகளில் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டார். பதினெட்டு வயதில் ஞான தரிசனம் பெற்று அல்லாஹ்வை மறைவின்றி அறிய ஒரு மகானைத் தேடி, குவாலியர் சென்றார். முஹம்மது கௌது குவாலீரி நாயகத்திடம் சீடராகப் பத்தாண்டுகள் தங்கி ஞானத்தைப் பெற்றார். தனது குரு மகானின் கட்டளைக்கு இணங்க நானூற்று நான்கு சீடர்களுடன் தென் இந்தியாவில் திக்கெட்டும் சென்று ஞானத்தையும், தர்மத்தையும் பரப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேரளத்தில் சிறிது நாட்கள் தங்கி, பின் சீடர்களுடன் தமிழ்நாட்டில் காயல்பட்டணம், கீழக்கரை, மேலப்பாளையம், தென்காசி வழியாகத் தஞ்சாவூருக்கு வந்தார். தஞ்சை மன்னனின் அழைப்பை ஏற்று, அரண்மனை சென்று, மன்னர் சேவப்ப நாயக்கரின் வாரிசு இல்லாத குறையை நீக்கினார். மனம் மகிழ்ந்த மன்னர் பரிசில்களை ஆண்டகையின் பாதங்களில் வைத்தார். அதற்கு அவர், ''மன்னவரே! இப்பரிசில்கள் எனக்கும், என் கூட்டத்தாருக்கும் வேண்டாம். ஆனால், நான் உமது எல்லையிலேயே எங்கேனும் நிரந்தரமாகத் தங்கிட நேருமோ என எண்ணுகின்றேன். அவ்வாறிருப்பின் தங்குவதற்கு ஒரு சிறிது நிலம் தந்தால் போதும்'' என்றார். ஆண்டகை தங்குவதற்கும், தவம் புரிவதற்கும் வசதியாக கடற்கரையை ஒட்டி சுமார் முப்பது வேலி நிலத்தைக் காணிக்கையாக்கினார். வாஞ்சூரில் நாகூர் நாயகம் தவம் செய்தார்.

திருமணம் செய்து கொள்ளாத நாகூர் ஆண்டவர் வாரிசாக முகம்மது யூசுப் என்பவராத் தத்தெடுத்தார். இவருக்கு எட்டுக் குழந்தைகள்; இவர்களின் வாரிசாக 160 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இன்றும் தர்காவை நிர்வகித்து வருகின்றனர். மன்னர்களும் சீமான்களும் அளித்த நன்கொடைகளும் மானியங்களுமாக வருடத்திற்கு 140 கோடி வருமானம் வருகின்றது.

தஞ்சையை ஆட்சி செய்த மன்னர் பிரதாப்சிங் தம் மனைவியோடு நாகூர் வந்து, ஆண்டகையிடம் ''எனக்குப் பிறகு இந்தத் தரணியைக் கட்டி ஆள மகன் பிறந்தால், இந்தத் தர்காவிலேயே பெரிய மினாராவை கட்டித் தருகிறேன்'' என்று உணர்ச்சி வசப்பட்டு வேண்டினார். அவ்வாறே அனைத்தும் நடந்தது. கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நாகூர் தர்கா சிறிய கட்டிடங்களுடனேயே இருந்து வந்திருக்கவேண்டும் எனக் கருதலாம். மராட்டிய மன்னர் பிரதாப்சிங் (1739-1763) நாகூர் தர்கா கட்டிடங்களை விரிவுபடுத்திக் கட்டினார். மேலும் தர்காவின் பராமரிப்பிற்கு பதினைந்து கிராமங்களை மானியமாக அளித்ததாக கல்வெட்டுச் செய்தி ஒன்று கூறுகிறது. தர்காவில் உள்ள 131 அடி உயர மினாராவைக் கட்டியதும் இம்மன்னரே ஆவார். பிரதாப்சிங்கிற்குப் பிறகு வந்த மராட்டிய மன்னர்களும் தர்காவிற்கு பல கொடைகளை வழங்கியுள்ளனர். இக்கொடைகள் குறித்த செய்திகள் தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் மோடிப் பதிவேடுகளில் நிறையக் காணப்படுகின்றன. கந்தூரி உற்சவத்தின்போது ஆண்டு தோறும் மராட்டிய மன்னர்களிடமிருந்து அலங்கார உடைகள் வருவது வழக்கமாக இருந்தது. நாகூர் பகுதி ஆங்கிலேயருடைய ஆட்சிக்குட்பட்ட பின்னும் மராட்டிய மன்னர்கள் தர்காவின் நிர்வாக செயல்பாடுகள் குறித்து பெரிதும் அக்கறைகாட்டி வந்தனர். பிரதாப்சிங் கட்டிய மனாராவை ஆங்கிலேயர்கள் தங்களது கொடிக் கம்பமாகப் பயன்படுத்தி வந்தனர். மராட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் இப்பழக்கம் நிறுத்தப்பட்டதாக ஆங்கிலேயரின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

கெட்ட ஆவிகளை விரட்டியது; திருவாரூர் தேரை ஓடச்செய்தது; கொம்புத் தேங்காயை முளைக்கச் செய்தது என நாகூர் ஆண்டவரின் புதுமைகள் தொடர்கின்றன. ஜாதி, மதம், நிறம் எதையுமே பாராமல் நாகூர் தர்காவில் துன்பங்கள் துடைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிரச்சினைகள் தீர்ந்து கொண்டிருக்கின்றன. நோய்கள் குணமடைகின்றன. மனதின் சமநிலை பிறழ்ந்தவர்கள் சீரான மனநிலையுடன் திரும்பிச் செல்கிறார்கள். நாகூர் தர்காவுக்குள் நுழைந்து கொஞ்ச நேரம் நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாலே, 'நமனை விரட்ட மருந்தொன்று விற்குது, நாகூர் தர்காவிலே' என்று நாகூர் ஹனிபா பாடிய பாடல் நினைவுக்கு வரும்.

போர்த்துக்கீசியர்களின் பதிவேடுகள் நாகூரை 'நாகூரு'' என்றும் நாகப்பட்டினத்தின் முஸ்லீம்களின் குடியிருப்புப் பகுதி என்றும் குறிக்கின்றன. போர்த்துக்கீசியர்கள் நாகப்பட்டினத்தை 16ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் பிடித்துக் கொண்டதும் நாகூர் முஸ்லீம்களின் வணிக வரலாறு தெரிய வருகிறது. ஆற்காட்டை ஆண்ட நவாபுகள் தஞ்சாவூர் நகரை காதர் நகர் என பெயரிட்டனர். நாகூர் பகுதியில் அமைதி வழியில் தனது அன்பு அழைப்பால் எண்ணற்ற மக்களை இஸ்லாத்தின் பக்கம் கொண்டுவந்த பெருமை நாகூர் ஆண்டகை அவர்களைச் சாரும். இவர்களது அருட்கொடையைத் தொடர்ந்து பெறும் பொருட்டு தமிழகத்தின் பிற பகுதியிலிருந்தும் முஸ்லிம் மக்கள் இங்கு வந்து குடியமர்ந்தனர்.

### இந்து-முஸ்லீம் ஒற்றுமை


மேலும், ஜாதி மத பாகுபாடின்றி இந்துக்களும் முஸ்லீம்களும் தர்காவிற்கு வந்து வழிபடுவதை ஆங்கிலேயர் வெகுவாகப் பாராட்டி எழுதியுள்ளனர். இந்து மதத்தைச் சேர்ந்த பக்தர்கள் பலர் தர்காவின் கட்டிடங்களைக் கட்டுவதற்கு நிறைய பொருளுதவி செய்துள்ள செய்திகளை தர்காவில் காணப்படும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. 19 ஆம் நூற்றாண்டில் தர்காவின் தரிசனத்திற்கு வரும் கூட்டம் மிகவும் அதிகரித்துக் கொண்டு வந்தது. இதனால் தர்காவின் வருமானமும் பெருகியது. ஆகவே தர்கா நிர்வாகத்தைக் கவனிக்கப் பல குழுக்கள் நியமிக்கப்பட்டன. இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து இந்த தர்காவைப் போற்றி வந்ததால் ஒரு சமயம் முத்துசாமிப்பிள்ளை என்பவர் தர்காவின் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

### கந்தூரி

நாகூர் தர்காவில் கந்தூரி 14 நாட்கள் நடைபெறுகிறது. இந்தியா உட்பட உலகின் பல பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கான மக்கள் கூடி வலியுல்லா அவர்களின் அருள் வேண்டுகின்றனர்.

மேலும் இந்து கலாசாரத் தாக்கத்தினால் பல வழிபாட்டு முறைகள் தர்காவில் பின்பட்டு வருவதைக் காண்கிறோம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உதாரணமாக தர்காவின் குளத்தருகே பக்தர்கள் நேர்த்திக்கடனைச் செலுத்த முடி இறக்கும் இடம் உள்ளது. இந்து மதத்தைப்போல இங்கும் பக்தர்கள் மொட்டையடித்து குளத்தில் நீராடி தர்கா செல்கின்றனர். நாகூர் ஆண்டவர் சமாதியில் விளக்கேற்றி பிரார்த்தனை செய்துஉண்டியலில் நன்கொடை போட்டு, இங்கு விற்கும் பிரசாதம் பெற்று ஓர் இந்துக் கோவில் நடை முறை போலவே பக்தர்கள் வழிபாடு செய்கின்றார்கள். இந்துக்களுக்கு விபூதியாக ஊதுபத்திச் சாம்பல் வழங்கப்படுகின்றது. இவற்றைவிட அர்ச்சனைத் தட்டு, மிருகங்கள், பறவைகளை நேர்த்தி வைத்துவிடுதல், யானை ஆசீர், குத்துவிளக்கு, நூல்கட்டுதல் போன்ற வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன.

கந்தூரி விழா துவக்கத்திற்கு ஏற்றப்படும் கொடி, சிங்கப்பூரில் இருந்து நாகைக்கு கொண்டுவரப்படுவது வழமை. நாகை மீரா பள்ளிவாசலில் தர்காவின் ஐந்து மினாராக்களிலும் கொடிகள் ஏற்றப்பட்டு 'துவா' ஓதப்படும். பின்னர் அலங்கரிக்கப்பட்ட பெரிய ரதம், சின்ன ரதம் மற்றும் செட்டிப் பல்லக்கு, கப்பல்கள் போன்று வடிவமைக்கப்பட்டு இரண்டு வாகனங்களில் மங்கள வாத்தியங்கள் முழங்க கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டு, ஊர்வலமாக நாகை, நாகூரின் முக்கிய வீதிகளில் வலம் வந்து இரவு நாகூர் தர்கா வந்தடைவது வழமை. கொடிகளுக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டு தர்காவில் மௌலியாக்கள் சிறப்பு 'துவா' ஓதிய பின், ஐந்து மினாராக்களிலும் கொடி ஏற்றப்படும். முக்கிய நிகழ்ச்சியாக சந்தனம் பூசும் உரூஸ் வைபவம், கொடி ஊர்வலம் மற்றும் கொடியேற்றுதல் நிகழ்ச்சிகளில் ஏராளமான யாத்திரிகர்கள் பங்கேற்பர்.

போர்த்துக்கீசியர்கள் நாகபட்டினத்தை 16ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் பிடித்துக் கொண்டனர். அவர்களது பதிவேடுகள் நாகூரை 'நாகூரு' என்றும் முஸ்லீம்களின் குடியிருப்புப் பகுதி நாகப்பட்டினம் என்றும் குறிக்கின்றன. 2005 ஆம் ஆண்டு சுனாமியால் சாகடிக்கப்பட்ட 300 - க்கும் மேற்பட்ட உடல்கள், ஜாதி, மத வேறுபாடின்றி நாகூர் தர்காவுக்குள் இருக்கும் அடக்க ஸ்தலத்திலேயே உரிய மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டன என்பது கண்கூடான வரலாறு.

நாகப்பட்டினத்திற்கு சென்னை, வேளாங்கண்ணி, தஞ்சாவூர், திருச்சி, மதுரையில் இருந்து பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப் படுகின்றன. அங்கிருந்து நாகூருக்கு பேருந்து மூலம் செல்லலாம். நாகூருக்கு அருகில் திருச்சி விமான நிலையம் உள்ளது. இங்கிருந்தும் நாகூருக்குச் செல்லலாம். நாகூருக்கு ரயில் மூலம் செல்லவேண்டும் என்று நினைத்தால், அருகில் உள்ள நாகப்பட்டினம் - கும்பகோணம் அல்லது தஞ்சாவூர் ரயில் நிலையத்துக்கு வந்து அங்கிருந்து பேருந்தில் செல்லலாம்.

- அமலகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பண்பாடு:

# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

தாய் சந்தையிலே மரக்கறி வியாபாரம் செய்து பிள்ளைகளை வளர்த்து வந்தார். அந்தத் தாய் இறந்தபோது மகள் பின்வருமாறு ஒப்பாரி வைத்துப் புலம்பினார்.

*என்ரை ஆத்தை - நீ*
*வாரிவரத் திண்டிருந்தன் - என்ரை*
*வன்ன வண்டி வாடுதனை*
*என்ரை ஆத்தை - நீ*
*கோலிவரத் திண்டிருந்தன்*
*என்ரை கோலவண்டி வாடுதணை*

*(தகவல்; செல்லம்மா, கரவெட்டி வயது - 67)*

குடும்ப பொருளாதாரத்தைப் பெண்களே பேணிவந்த நடைமுறையை மேலே சுட்டிய ஒப்பாரிப்பாடல்கள் புலப்படுத்துகின்றன. இப்பாடல்கள் இடத்துக்கு இடம் தேவைக்கேற்ப மாறி வழங்குவதையும் அவதானிக்க முடிகின்றது. பொதுவாக ''என்ரை ஆத்தை'' என்ற தொடர்களுக்குப் பதிலாக ''என்ரை அப்பு'', ''என்ரை ராசா'' என்ற தொடர்களைப் பயன்படுத்திப் பால்வேறுபாட்டினைப் புலப்படுத்தப் பாடுவதுமுண்டு. இப்பண்பு ஒப்பாரிப்பாடல்களின் பொதுத்தன்மையாகக் காணப்படுகின்றது.

கிராமத்தில் இருந்த ஒருவர் அந்தக் கிராமத்தை விட்டு வேறு ஊரிலே திருமணம் செய்திருந்தார். அவருக்கும் மனைவிக்கும் இடையே தகராறு ஏற்பட்டுக் குடும்பம் பிரிந்திருந்த காலத்திலே அவர் இறந்துவிட்டார். அவரின் சாவீட்டிற்கு அவரது மனைவி வரவில்லை. அந்தச் சாவீட்டிலே இறந்தவரின் உறவுப் பெண் ஒருவர் பின்வருமாறு ஒப்பாரி வைத்துப் புலம்பினார்.

*ஊரெல்லாம் பெண்ணிருக்க*
*என்ரை ராசா - நீ*
*ஊர்விட்டுப் போனாயோ...*
*பக்கத்தே பெண்ணிருக்க*
*என்ரை ராசா -நீ*
*பரதேசம் போனாயோ...*
*பாழ்படுவாள் வாசலிலே*
*என்ரை ராசா - நீ*
*பவுணாக் குவிச்சாயே...*

*(தகவல் ; மீனாட்சி - துன்னாலை வயது - 78)*

கிராமத்துக் கட்டமைப்புக்குள்ளேயே - உறவுக்குள்ளேயே திருமணம் செய்ய வேண்டுமென்று கிராம மக்கள் விரும்பியவையின் வெளிப்பாடாகவே மேலே சுட்டிய ஒப்பாரிப் பாடல்கள் அமைகின்றன. இக்கருத்தினைப் புலப்படுத்தும் பழமொழிகளும் பல உண்டு. அவை தனித்த ஆய்வுக்குரியவை. தமது குடும்ப பிரச்சினைகளை, உறவு முறிவுகளை இறந்தவருக்குச் சொல்லி அழுவதும், அவ்வாறு சொல்பவைகளை ஒப்பாரி மூலம் வெளிப்படுத்துவதும் கிராமத்துப் பெண்களின் வழக்கமாகும். ஒன்றுவிட்ட சகோதரர்களிடையே நீண்டகாலமாக நிலவிவந்த பகைமையுணர்வைத் தமது பெரியதாயார் இறந்தபோது ஒரு கிராமத்துப் பெண் இவ்வாறு ஒப்பாரியாகப் புலப்படுத்துகின்றார்.

*என்ரை ராசாத்தி - நீ பெத்தவை*
*சீனத்துவக்கெடுத்து என்னைச்*
*சிதற வெடி வைக்கினமே....*
*என்ரை ராசாத்தி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பெத்தவை
பாரத்துவக்கெடுத்து என்னைப்
பதற வெடி வைக்கினமே

(தகவல் - மேற்படி செல்லம்மா)

இவ்வாறே தமது குடும்பத்தில் தான் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பின்வருமாறு ஒப்பாரியாக ஒரு கிராமத்துப் பெண் பாடுகிறாள்.

படலையிலே ஆமணக்கு
என்ரை ராசாத்தி
நீ பெத்தவைக்கு - நான்
பாவக்காய் ஆகினனே
வேலியிலே ஆமணக்கு
என்ரை ராசாத்தி
நீ பெத்தவைக்கு
நான் வேப்பங்காய் ஆகினனே

( தகவல் - பொன்னம்மா வயது 75)

தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தி, உளவியல் ரீதியானதோர் ஆறுதலைத் தேடுதலுக்கும் ஒப்பாரிப்பாடல்கள் உதவி இருக்கின்றன என்று கருதலாம். தமது குடும்பத்திலே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த உறவினர் பின்னர் சாவீட்டிலே வந்து மேலாதிக்கம் செலுத்துவதைப் பொறுக்காத ஒரு பெண் பின்வருமாறு ஒப்பாரி வைக்கின்றாள்.

சொருகிவைச்ச ஏப்பை எல்லாம் - இப்ப
சோறள்ள வந்த தெணை
போட்டுடைச்ச கோழிமுட்டை - இப்ப
போர்ச்சாவல் ஆச்சுதணை

(ஏப்பை - அகப்பை, சாவல் - சேவல்)

இவ்வாறு பல ஒப்பாரிப் பாடல்கள் குடும்ப உறவுப் பிரச்சினைகளைச் சுட்டுபவையாக வழங்கி வருகின்றன.

பல மாதங்களுக்கு முன்னர் இறந்து போன தனது தாய் தந்தையரை நினைத்து தனது நிலைமையைச் சொல்லும்படி இன்னொரு சாவீட்டிலே இறந்தவரை விளித்துப் பாடும் ஒப்பாரி பாடல்களும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழக்கில் உள்ளன.

என்ரை அப்பு
நீ போய்ச் சொல்லணை
நீங்கள் பெத்தவள் - இஞ்சை
சோத்தாலை வாடயில்லை - உங்கடை
சோகத்தால் வாடுதெண்டு
என்ரை அப்பு நீ போய்ச் சொல்லணை
நீங்கள் பெத்தவள்
இஞ்சை காசாலை வாடயில்லை - உங்கட
கவலையினால் வாடுதெண்டு

இடையிடையே வசனங்களையும் ஒருவித ஓசை ஒழுங்குடன் கூறித் தமது கருத்தினை ஒப்பாரியாகப் பாடும் வழக்கத்துக்குச் சான்றாக மேலை சுட்டிய ஒப்பாரிப் பாடல்ளைக் காட்டலாம். இத்தன்மையை பெரும்பாலான ஒப்பாரிப்பாடல்களிலே காணமுடிகின்றது.

கணவன் இறந்தபோது தமக்கிடையே உள்ள உறவு நிலையை (ஆண், பெண் உறவு) புலப்படுத்தும் வகையிலும் ஒப்பாரிப் பாடல்கள் அமைகின்றது.

முத்துப் பதித்த முகம்
என்ரை ராசா நீ
முழுநிலவாய் நின்ற முகம்
நினைப்பேன் திடுக்கிடுவேன்
என்ரை ராசா
உன்ர நினைவு வந்த நேரமெல்லாம்
போகக் கால் ஏவினதோ - என்ரை ராசா
இந்த பொல்லாதவள் தன்னைவிட்டு

நாகரிகம் பேசுவினம்
மூக்கு படைச்சவையள் இனி
முளிவியளம் பேசுவினம்
மூளி அலங்காரி - இவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதேசி என்பினமே
(இம்.... ஓஓ.... என்ற இழுமென் ஓசையுடன்)

இந்த ஒப்பாரிப்பாடல்கள் பாடப்படும்பொழுது சோக உணர்வு பரந்து விரிவதைக் காணக்கூடியதாக இருக்கும். கணவனை இழந்த கைம்பெண்ணின் சமூக நிலையையும் இப்பாடல்களினூடு காண முடிகின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கிராமத்திலே வாழ்ந்த ஒரு வயோதிபக் கிறிஸ்தவப் பெண் ஒரு நாள் இறந்துவிட்டார். அவரின் உறவினர்கள் எல்லோரும் சைவசமயத்தினர். கிறிஸ்தவர்கள் இறந்தால் அழும் வழக்கம் பெரும்பாலும் குறைவு. இறந்தவரைச் சுற்றி எல்லோரும் அழாமல் சும்மா இருந்தார்கள். அப்பொழுது அயல் கிராமத்தில் இருந்து வந்த இறந்தவரின் உறவுப்பெண் ஒருவர் (சைவ சமயத்தைச் சேர்ந்தவர்) ஒப்பாரி வைத்து அழத்தொடங்கினார்.

என்ரை ஆத்தை, நீ வேத சமயமென - இவை
விரும்பி அழமாட்டினமாம்...
நாங்கள் சைவ சமய மெணை
உன்னோடை சருவி அழமாட்டினமாம்
ஊர்தேசம் விட்டாய்
என்ரை ராசாத்தி
உறவுகளைத்தான் மறந்தாய்...
மேபிள் துரைச்சியென்று - இஞ்சை
மேட்டிமைகள் பேசுகினம்
ஊரும் அழவில்லையெணை - என்ரை ராசாத்தி
உன்ரை உறவும் அழவில்லையெணை....

(நாகம்மா- கொடிகாமம், வயது - 65)

சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப பாடும் ஆற்றல் படிப்பறிவற்ற கிராமத்துப் பெண்களிடம் நிறையக் காணப்படுவதற்கு மேலே காட்டிய ஒப்பாரிகளை உதாரணமாகச் சுட்டலாம். கிராமியப் பண்பாட்டிலே வயது முதிர்ந்து செத்தாலும் செத்தவருக்காக அழவேண்டும் என்ற ஒரே மரபுண்டு. கவலையில்லாவிட்டாலும் கண்ணீர் வராவிட்டாலலும் ''ஒப்புச் சொல்லி'' அழும் வழக்கத்தினை யாழ்ப்பாணத்தக் கிராமக்களிலே காணலாம். ஒப்பாரி சொல்லி அழுவதை ''ஒப்புச் சொல்லி'' அழுதல் என்ற வழக்காறு உண்டு.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கும் ஒப்பாரிகள் சிலவற்றையே இங்கு தொகுத்து நோக்கினோம். இவ்வாறான பல ஒப்பாரிப்பாடல்கள் வழங்கி வருவதால் அவற்றைத் தொகுத்தலும் பதிவுசெய்தலும் அவசியமாகும். கிராமத்து மக்களின் வாழ்வியலையும் கவித்துவத்தையும் புலப்படுத்தும் ஒப்பாரிப்பாடல்கள் பெரும்பாலும் எல்லா பிரதேசங்களுக்கும் பொருத்தமானவையாகக் காணப்படுகின்றன. சிற்சில வேறுபாடுகளுடன் ஒரே ஒப்பாரியே வெவ்வேறு இடங்களிலும் வழங்குவதுண்டு.

எமது கள ஆய்வின் போது ஈழத்துக்குப் பொதுவாக வழங்கும் பல ஒப்பாரிப் பாடல்களையும் யாழ்ப்பாணத்துப் பிரதேசத்திலே காணமுடிந்தது. வாய்மொழியாக ஒப்பாரிப்பாடல்கள் பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டு வந்தவை என்பதை ஒப்பாரிப்பாடல்களை நுணுகி ஆராய்வோர் அறிவர். சமூக, பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களால் அருகி வரும் இத்தைகைய ஒப்பாரிப்பாடல்களைத் தொகுத்து ஆய்வு செய்வது நாட்டார் வழக்காற்றில் சமூகவியல் ஆய்வாளர்களின் பெரும்பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காகில்ஸ் புட்சிற்றி தனது

# 150வது

## விற்பனை நிலையத்தை யாழ். மானிப்பாயில் திறந்து வைக்கின்றது!

எமது நாட்டு மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கி வருவதையிட்டு காகில்ஸ் புட்சிற்றி பெருமையடைகின்றது. நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் பெறுமதியை ஏற்படுத்துவதுடன் சமூகங்களுக்கு சக்தியை வழங்கி அவர்கள் தமக்கென சிறந்த பலமான எதிர்காலத்தை நோக்கி முன்செல்ல ஊக்கமளிப்பதே எமது நோக்கமாகும்.

மானிப்பாய் வாழ் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதுடன், அவர்களை மேலும் வலுவூட்டும் நோக்குடனேயே எமது விற்பனை நிலையத்தை அங்கு திறந்து வைக்கின்றோம். பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது இலக்காகும்.

மானிப்பாயில் ஆரம்பிக்கும் எமது அபிவிருத்திப் பயணம் அடுத்த வருடத்தில் குடாநாட்டில் மேலும் 6 விற்பனை நிலைய[illegible] இல்லத்தையும் இதயத்தையும் நோக்கி நெருங்கி[illegible].

Cargills
food city
வீடு செல்லும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் கலைக்கேசரி சந்தாதாரரா?




கலைக்கேசரி முதலாம் ஆண்டு நிறைவையொட்டி
உங்களுக்கோர் அரிய பரிசு !
ஜனவரி மாத கலைக்கேசரியுடன்
**'இலங்கையின் சாஸ்திரீக நடனங்கள்'**
என்னும் சிறப்பு மலரை
இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**இச்சலுகை கலைக்கேசரி சந்தாதாரர்களுக்கு மட்டுமே!**

## GET கலைக்கேசரி KALAIKESARI DELIVERED TO YOUR HOME

**Sri Lanka:**

| | | |
|---|---|---|
| Subscription Rates (inclusive of postage) - | Yearly (12 issues) | : Rs.2,400/- |
| | ½ Yearly (6 issues) | : Rs 1,200/- |
| | Cover price per issue | : Rs. 200/- |

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No.185, Grandpass Road, Colombo 14, Sri Lanka.
Tel:+94-11-5322700 / 5738046 Fax:+94-11-5517773
For more details, please contact **Arjun** - on arjun@expressnewspapers.net
**S. Sandrasegar** - +94 77 5359106 / +94 -11 - 5322783

**SUBSCRIPTION RATES (FOREIGN) INCLUSIVE OF POSTAGE:**

| Country | | Per issue | (12 issues) |
|---|---|---|---|
| India | (INR) | 100.00 | 1,200.00 |
| Singapore | (SG$) | 14.00 | 168.00 |
| Canada | (CAN$) | 10.00 | 120.00 |
| Australia | (AUS$) | 10.00 | 120.00 |
| Swiss | (CHF) | 10.00 | 120.00 |
| USA | (US$) | 10.00 | 120.00 |
| UK | (GB£) | 6.00 | 72.00 |
| Europe | (EUR) | 7.00 | 84.00 |

**ORDER FORM :**

கலைக்கேசரி KALAIKESARI

**Editor**
**Kalaikesari**
**No. 185, Grandpass Road, Colombo - 14,**
**Sri Lanka.**

**Tel : 5234338, 5322700**
**Fax : 5517773**
**E-mail : editor@kalaikesari.com**
**subscription@kalaikesari.com**

FOLD HERE

Title : Mr. ☐ Mrs. / Miss ☐ Dr. ☐ Prof. ☐
First Name : ..............................................
Last Name : ..............................................
Institution : ..............................................
Apartment/Other Nos : ..............................................
Street / Road : ..............................................
Town/City/State : ..............................................
Country : ..............................................
Amount Enclosed : ..............................................(12 / 6 Issues)
Mode of payment : Cheque / Money Order..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd, at No. 185, Grandpass Road, Colombo-14, Sri Lanka.